www.tamilarangam.net



# இசை

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE / FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்த இதழில்...


* பத்திரிகைச்சுதந்திரமின்றி சுதந்திரமில்லை
  - அசரீரி
* ஓசைக்கு.
  - வாசகர்
* இலங்கையில் தமிழ்த்திரைப்படங்கள்
  - ஏ. ரகுநாதன்
* பத்மாவதி
  - புவனன்
* நான், பூமியைவிட்டுப்பயணம்
  - முகமட் அபார்
* தொடரும் பொருளாதார நெருக்கடிகள்
  - அநந்தன்
* அபாயம்
  - முகிலன்
* சூழல் மாசடைதல் பற்றி
  - சி. சிவசேகரம்
* அம்மா
  - வண்ணநிலவன்
* இருட்டு
  - பி. ரவிவர்மன்
* மகாஜனுவும் நாடகமாலையும்
  - அசோக்
* எரிநெருப்பில் இடைபாதை இல்லை
  - கீழ்கரவை. பொன்னையன்
* ஒரு சொல் கிளப்பிய தேடல்
  - அநாமிகன்
* தொழிலாளர் சிக்கல்கள்
  - மாதவன்
* அரசியல் தோழமை
  - தமிழில். இராவிசயகுமார்
* போராளி
  - சௌமி
* ஊஞ்சல்
  - வாசுதேவன்
* மீன் இல்லா மனம்
  - சோலைக்கிளி
* கவிதை
  - செல்வி





கணனி
எழுத்துப்பதிவு
மாதவன்
வடிவமைப்பு
புவனன்

அட்டைப்படங்கள்
நன்றி :
Reporters sans frontiers
பிற படங்கள் :
India Today,
Declaration universelle des droits de l'Homme


ஓசையில் வெளிவரும் ஆக்கங்களோடு ஓசைக்கு முழுக்கமுழுக்க உடன்பாடு இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. நல்ல கருத்துக்களுக்கு வலுசேர்க்கும் நோக்குடன் ஆரோக்கியமான விவாதங்களைத் தூண்டும் வகையிலும் ஆக்கங்கள் பிரசுரமாகும்.
- ஓசை

www.tamilarangam.net


# ஓசை

காலாண்டிதழ்

1993
சித்திரை - ஆனி

ஓசை - 4
ஒலி - 2

இதழ் 12

ஆசிரியர் குழு



தொடர்புகளுக்கு :
'OOSAI'
C. L. A. L. P
B. P : 701 - 09
75425 PARIS CEDEX.
FRANCE.


## பிரேமதாஸா

மே முதலாம் நாள்.
உலகத்தொழிலாளர்கள் உரிமைபெற்ற தினம்.

சகல அதிகாரங்களும் கொண்ட சர்வ வல்லமை பொருந்திய இலங்கையின் ஜனதிபதி ஆர். பிரேமதாஸா இத்தினத்தில் அழிக்கப்பட்டிருக்கிறுர்.

எந்தக்கொடூரமான மனிதனினதும் மரணத்தில் மகிழ்ச்சி கொள்வதென்பது மனித இயல்புகளுக்கு விதிவிலக்கானது. ஆனுல் பிரேமதாஸாவின் மரணத்திற்கு சிங்களமக்கள் மத்தியிலேயே வெடிகொழுத்தி ஆர்ப்பரித்ததாகச் செய்திகள்..

பிரேமதாஸா என்றதும், சொந்த மண்ணிலேயே அகதிமுகாம்களுக்கு விரட்டியடிக்கப்பட்ட எங்கள் மக்களும், பிஞ்சுகளின் மரணஓலங்களும்தான் நினைவுகளில் குறுக்காடுகின்றன.

கொலையைத்தொடர்ந்து, கொழும்பில் தங்கியிருந்த தமிழ்மக்கள் மத்தியில் நிலவிய பதட்டம், மெல்லத்தணிந்திருப்பது ஆறுதலான விடயம்.

83 ற்குப்பின்னரும், இனக்கலவரங்கள் மூளக்கூடிய பல சூழ்நிலைகள் எழுந்தும் -(பிரேமதாஸாவின் மரணத்தை உச்சநிலையாகக்கொள்ளலாம்) -அப்படி எதுவும் நிகழ்ந்துவிடவில்லை. பலவித காரணங்கள் இருப்பினும், தமிழ்மக்கள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் மாறிவரும் மனநிலை முக்கியகாரணி என்றால் பொய்யல்ல.

நல்ல சமிக்ஞை !

www.tamilarangam.net

# பத்திரிகைச்சுதந்திரமின்றி சுதந்திரமில்லை

பத்திரிகைச் சுதந்திரமின்றி சுதந்திரமில்லை

அசாரி

"பத்திரிகைச் சுதந்திரமின்றி சுதந் திரமில்லை" என்ற இந்தச்சுலோக மும் இதையொட்டிய படமும், இவ் வருடம் மே மூன்றாம் நாள் அனுஷ் டிக்கப்பட்ட சர்வதேச பத்திரிகைச் சுதந்திர தினத்தையொட்டி பாரி ஸின் மூலைமுடக்குகளிலெல்லாம் ஒட்டப்பட்டருந்தது. உலகெங்கிலும் குறிப்பாக மூன்றாம் மண்டல நாடு களில், 120க்கும் மேற்பட்ட பத்தி ரிகையாளர்கள் சிறையில் வாடுகி றார்கள். பலர் கொல்லப்பட்டு விட் டார்கள். மற்றவர்களின் கண்க ளைத் திறக்கப் போராடும் பத்திரி கையாளரின் பரிதாபநிலைமீது பாராமுகமாக நடந்துகொள்வதா னது இன்றைய நாகரீக உலகிற்கு உகந்ததல்ல என்ற புத்திஜீவிஜன நாயகவாதிகளின் பிரகடனமானது, பத்திரிகை உலகின் ஆத்மாவை குழிதோண்டிப் புதைக்க முயல்பவர் களுக்கான எச்சரிக்கையாக அமை கின்றது.

அடக்குமுறைகளால் அறிவுவ ளர்ச்சி தேக்கநிலைக்கு உட்படுத் தப்படுவதும், சமூக, அரசியல் நோக்கங்கள் பற்றிய மாற்றுக்கருத் துக்கள் மறுக்கப்பட்டு, தனிமனித சார்புத்தன்மைகள், தனிமனித நலன்கள் தவிர்க்கப்பட்ட சமூகந லன் பற்றிய சரியான உண்மைகள் வெளிப்படுவது தடைப்படுவதும் பத் திரிகைச் சுதந்திரமறுப்பின் பாரதூ ரமான விளைவுகள்.

பத்திரிகை அல்லது கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் சர்வாதி காரப் போக்கானது அவ்வாறு மறுப்போரின் சுயகருத்தின்மீதான அவநம்பிக்கையையே புலப்படுத்து கின்றது. இவ்வாறான அடக்குமு றையைக் கையாள்வோர் 'திணிக்கப் படும் தமது கருத்துக்கள்' மீதான எவ்வித விமர்சனங்களையும் சகித் துக்கொள்ளமுடியாத பிற்போக்கு வாதிகளே என்கிறார் பத்திரிகையா ளர் RENE BURRI.

பக்க சார்பான வடிகட்டப்பட்ட செய்திகளை மட்டும் அறியக்கூடிய நிலையில்வாழும் கோடிக்கணக் கான ஆண்களும் பெண்களும் தமக்கு நேரிடுவது என்னவென்பதை உணரமுடியாத நிலையிலுள்ளனர் என்பது இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய இழுக்கு.

மேற்குநாடுகளின் பத்திரிகைகள், செய்திப்பரிமாற்ற ஜனரஞ்சக ஊடகங்கள், குறிப்பாகத் தொலைக்காட்சிச் சேவைகள் போன்றவை, வெறும் வியாபாரம யமாக்கப்பட்ட நிலையில், தனியாக மேற்குலகின் பொருளாதார நலன் களைப் பேணும் பணியில் ஈடுபட் டுள்ளதும், கம்யூனிஸ்ட் சீர்குலைவு களின் பின்னர் மேற்குலகின் தனி யான மேலாதிக்கமானது மூன்றா வது உலக நாடுகளின் நியாயமான சிக்கல்கள் பற்றி எவ்விதத்திலும் தெளிவான செய்திகளை மேற்குல கத்துக்கு வெளிக்கொணாரதும் இன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னொருவகையான பத்திரிகைச் சுதந் திர மறுப்பு என்று கருத இட முண்டு. எனினும், சில அரிய எண் ணிக்கையிலான மேற்குலகப் பத்தி ரிகைகள் மூன்றாவது உலகநாடுக ளின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ளன என்பதையும் மறுப் பதற்கில்லை.

இவ்வருட மேதினத்தன்று, தற் கொலைபுரிந்துகொண்ட பிரான்சின் முன்னாள் பிரதமர். Pirre Beregovoy சில பத்திரிகைகளின் ( குறிப் பாக Canards enchaines ) அவசர மான அநீதியான குற்றச்சாட்டி னாலும், இக்குற்றச்சாட்டை, அர சியல் இலாபத்துக்காக, பல வலது சாரி அரசியல்வாதிகள் பயன்படுத் தியதாலும் ஏற்பட்ட அவமானத்தி னாலேயே இவ்வாறு செய்ய நேரிட் டதாகக் கருதப்படுகின்றது. இத னைத் தொடர்ந்து பொதுவாழ்வில் ஈடுபட்டுள்ளவர்கள் மீதான குறிப் பாக அரசியல்வாதிகளின் மீதான பத்திரிகைகளின் தலையீடுகள் பற் றிய விவாதங்கள் முடுக்கிவிடப்பட் டபோதும், பத்திரிகையாளர்கள் செய்திகளை மட்டுமே வெளிக்கொ ணர்கிறார்கள் என்றும் அச்செய்தி கள் உண்மையானவையா, பொய் யானவையா என்பதை மக்களோ அல்லது நீதிமன்றங்களோ மட்டுமே தீர்மானிக்கவேண்டும் என்றும், அவ் வாறு நடைபெறாத பட்சத்தில் ஜனநயகம் பற்றிப் பேசுவதில் எவ் வித அர்த்தமும் இல்லையென்றும் பத்திரிகையாளர்கள் ஒருமித்துக் குரல் எழுப்புகின்றனர்.

மொத்தத்தில், பத்திரிகைச் சுதந் திரமென்பது புனிதமானதும், பொறுப்பு மிக்கதும் சுதந்திரங்களில் முதன்மையானதுமாகும். இவ்வுண் மையை, இவ்வுரிமையை மறுக்கும் சர்வாதிகாரிகள் நன்கு அறிவர். அதன் காரணமாகவே, பத்திரிகைச் சுதந்திரத்தின் குரல்வளையை முத லில் நசித்து, பின்னர் மற்றைய சுதந் திரங்களை அமைதியாக அடக்கம் செய்யமுயற்சிக்கிறுர்கள். •





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஓசைக்கு !

ஆசிரியர், ஓசை
அன்புடையீர்,

### 14ம் இலக்கியச் சந்திப்பு, 1992 டிசம்பர்

அசோக் எழுதிய விமர்சனப்பாங்கான தொகுப்பில் விஷயங்களைச் சமனற்ற முறையில் அணுகும் ஆற்றல் மிகுதியாகத் தென்படுகிறது.

நித்தியானந்தன் நவீன தமிழ் நாடகம் பற்றி வழங்கிய கருத்துக்கள் அவர் நாடகத்துறையுடன் ஈடுபட்ட காலத்துடன் தொடர்புடையவை. நவீன தமிழ் நாடகத்துறையைப் பொறுத்தவரை பாலேந்திரா, தாஸீஸியஸ் என்ற இரு முக்கிய இயக்குனர்களின் பங்களிப்பே அந்தக் காலகட்டத்தில் முதன்மையானது. நித்தியானந்தன் அண்மைக்கால வளர்ச்சி பற்றிப் பேசாமை அவரிடம் உள்ள "குறை" தொடர்பான ஒன்றல்ல. முழுமையான தகவல்களின்றி விஷயங் களைப் பற்றிப் பேசுவதில் அவரது தயக்கம் ஒரு காரணமாக இருக்கலாம்.

மனிதரது கரகோசம், பெரும்பாலும் தாம் கேட்கும் கருத்துத் தமக்கு ஏற்புடையதா என்ற அடிப்படையி லேயே எழுகிறது. எது சரியானது எது தவறானது என்று அவர்களுக்கு அசோக் முன்கூட்டியே விளக்கியிருந்தால் அவர்கள் அவர் விரும்பிய நேரங்களிற் கைதட்டி வான்முகட்டைப் பிய்த்திருப் பார்கள். என்ன செய்வது ! முற்றிலுஞ் சரியான கருத்துக்களை மட்டுமே கேட்பதென்று நாம் முடிவுசெய்தோமானால், நமக்கு எழுத எவருமே இருக்க மாட்டார்கள். (அசோக் உட்பட) படைப்பிலக்கியம் தொடர்பான பிரக்ஞை இரண்டு நாள் இலக்கிச் சந்திப்பில் கருவாகி விடுவதற்கு அது என்ன களிமண் பானையா, காகிதப்பூவா ?

பத்மமனோகரனின் "மனிதனும் மாசுபடும் சூழலும்" உரை தொடர்பான அசோக் வைக்கும் விமர்சனம் அபத்தம். அங்கு வாசிக்கப்பட்ட நான்கு கட்டுரைகளும் சூழலின் மாசுபடலின் நான்கு வேறுபட்ட அம்சங்கள் பற்றியன. அவற்றுள் ஜெயபாலன் வாசித்த கட்டுரை தமிழரது பாரம்பரியப் பிரதேசம் தொடர்பானது. அசோக் அன்றய கூட்டத்தில் இது தொடர்பாகக் கேட்ட கேள்விக்குத் தெளிவாகவே பதில் தரப்பட்ட பின்னும், அதை மீண்டும் ஓசையில் எழுப்பும் தேவை என்னவோ தெரியவில்லை.

இலக்கியச் சந்திப்பு ஒரு திறந்த மேடை. அங்கே ஒருவரது முற்போக்கு இன்னோருவரது பிற்போக்காகவும் இருக்கலாம். ஒருவருக்கு உடன்பாடற்ற கருத்துகளுக்கு ஆதரவு இருப்பதினால், அதைப் போலித்தனம், சுயநலம் பேணல் என்றெல்லாம் தட்டியடக்க முயல்வது கையாலாகாத்தனம். ஆதிக்கத் திலுள்ள தவறான கருத்துக்களைக் கூடப் பொறுமையாகப் போராடியே திருத்தவும் மனிதரைச் சரியானதன் பக்கம் வென்றெடுக்கவும் முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாமறிந்த மேதைகள் என்றுமே மக்களுக்கு வழிகாட்ட முடிந்ததில்லை. அவர்கள் பிறரை முட்டாள்களாகவே கருதுவதால் அவர்களது மொழியைப் பிறராற் புரிந்து கொள்ள இயலாமற் போகிறது.

பெண்கள் பல வேறு கோணங்களினின்று தமது கருத்துக்களை முன்வைத்தபோது எல்லாந் தெரிந்த அதி புரட்சிவாதிகள் சிலர் அவர்கள்தம் கருத்துக்களை விருத்திசெய்ய இயலாதவிதமாகக் குறுக்கிட்டனர். பெண்கள் , தவறான கருத்துக்களையும் வெளிப்படுத்துவதன்மூலமே சரியானதைக் கண்டறிய முடியும். அவர்களது சிந்தனையாற்றலின் வளர்ச்சி சகல வல்லமையும் படைத்த மகாஞானிகளான சில ஆண்களின் வழி நடத்தல் இல்லாமலேயும் நடக்கக்கூடும் என்ற நம்பிக்கை சரியாகவோ தவறாகவோ, என்னிடமுண்டு. பயனுள்ள கருத்துக்களைச் சொன்ன ஓரிரு ஆண்கள்கூட அவற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் சொல்ல இயலாது போனமை வருந்தத்தக்கது. நேர வரையறை காரணமாகவே அசோக் முறைப்படும் புறக்கணிப்பு(?) நிகழ்ந்தது. "மரபு வழிச் சட்டம்பிப்போக்கு" என்று அவர் சொல்கிற விஷயம் சில "அதி மாக்ஸியச் சட்டம்பிமாரின் " போக்கைவிட மோசமானதல்ல. இவர்கள் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலையுடையோராக இருந்திருப்பின் பின்னைய நிகழ்ச்சிகட்கு அதிக நேரம் எஞ்சியிருக்கக்கூடும்.

மேற்கிலிருந்து பெறக்கூடிய ஆரோக்கியமான விஷயங்கள் எவை தவறுகள் எவை என்று அசோக் விரிவாக எழுதினால் என்ன ? ஓசை பிரசுரிக்கும் என்று நம்புகிறேன். இல்லாவிட்டாற் சரியானதை அறிந்த ஏடுகள் பல உள்ளனவே. பிறகென்ன, எழுதி அனுப்பலாமே !

இலக்கியச் சந்திப்பை மீளாய்வு செய்யவேண்டுமென்பது ஒரு நல்ல யோசனைதான். ஆயினும் என் கருத்தில் 14ம் சந்திப்பு மொத்தத்தில் ஒரு பயனுள்ள சந்திப்பு. (சிவசேகரம், ஜெயபாலன் போன்றோர் சற்றுக் குறைவான அளவில் விஷயதானஞ் செய்திருந்தால் மேலும் நன்றாக இருந்திருக்கும்) ஆரோக்கியமான விஷயங்கள் பற்றி முடிவெடுக்கவல்ல ஆரோக்கியமான இலக்கிய மனோநிலை கொண்டோர் யார் ? இந்தமுடிவை யார் எடுப்பது ? 14ம் சந்திப்பில் பேசிய சிலராக இருக்கலாமா? பயமாக இருக்கிறது. ( என்னை எந்த மனோ சிகிச்சை மனைக்கு அனுப்புவார்களோ தெரியாது)

அன்புடன்
சி. சிவசேகரம்.

14 வது இலக்கியச்சந்திப்புத் தொடர்பாக திரு. சிவசேகரம் அவர்களின் பதிலை கட்டுரையாளரிடம் சேர்ப்பிக்க அவரிடம் இருந்தும் உடனேயே பதில் கிடைத்தது. ஓசையின் காலஇடைவெளியைக் கருத்தில் கொண்டு அசோக் அவர்களின் பதிலும் இந்த இதழிலேயே பிரசுரமாகின்றது.

- ஓசை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திரு. சிவசேகரம் அவர்களின் கடிதம் தொடர்பாக......

விமர்சனம், ஒரு விடயத்தின் தன்மை, அதன் நோக்கம், அது ஏற்படுத்தக்கூடிய தாக்கம் இவைகளில் நின்றே அதன் தேடுதல் ஆரம்பமாகின்றது. இத்தேடுதல் முயற்சிகளே விமர்சனமாகின்றது. இவ்வடிப்படையில் எழுதப்படும் நியாயபூர்வமான விமர்சனம் சமனற்ற முறையைக் காட்டுவது தவிர்க்கமுடியாத தொன்று. விகிதாசார அடிப்படையில் எழுதல் சாத்தியமற்றது. அது பக்க சார்பாகவே அமையும். அவ்வாறு எதிர்பார்ப்பது நலமானதல்ல.

திரு. நித்தியானந்தன் அவர்களின் ' குறை' எனக்காட்டியமை யாழ்குடாவோடும் பேராதனையோடும் முடியும் அவர் ஆய்வு தொடர்பான விடயங்களையே. தமிழ்ப்பேசும் மக்களாகப்பட்டவர்கள் இலங்கையில் பரந்தளவில் பல இடங்களில் வாழ்வதாக என் சிற்றறிவு கூறுகின்றது. யாழ் குடாவோடு தமிழ்ப்பேசுவோர் பரம்பல் முற்றுப்பெறவில்லை. திரு. நித்தியானந்தன் அவர்களின் ஆய்வு இந்நிலைகளுக்குள்ளேயே தேங்கி நின்றமையாலேயே 'குறை' எனச்சுட்டிக் காட்டினேன். மாறாக முழுமையான தகவல்கள் இன்றிய தயக்கத்தை அல்ல. திரு. சிவசேகரம் கூறும் 'தயக்கம்' விடயதானம் சம்பந்தப்பட்டது. நான்கூறும் 'குறை' என்பது அவர் மனோநிலை தொடர்பானது.

இந்த இலக்கியச்சந்திப்பு குப்பைத்தன இலக்கிய ரசனை கொண்டவர்கள் கலந்துகொள்ளும் ஒரு சந்திப்பாக நான் கருதவில்லை. இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் பெரும்பான்மையோர் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர் தமிழ் வெளியீடுகளோடு ஏதோ ஒருவகையில் உறவுநிலை பெற்றவர்கள். இந்த உறவு சரியான கருத்துக்களை தேடும் ஆர்வ நிலை தொடர்பானதென எண்ணம் கொண்டேன். தவறுகளே அவர்களின் மனச்சந்தோசத்திற்கான ஆதாரம் என்பது எனக்குத் தெரியாமற் போயிற்று. 'வான்முகட்டைப் பிய்த்தல்' என்பது தவறான விடயங்களுக்கு எதிரான கருத்துக்களுக்கும் எழுந்திருந்தால் இவர்களின் தேடல்கள்மீது குறைந்த நம்பிக்கையாவது பிறந்திருக்கும். மனிதனின் கரகோஷம் திரு. சிவசேகரம் சொல்லுவதுபோல் தாம்கேட்கும் கருத்து தமக்கு ஏற்புடையதா என்ற அடிப்படையிலேயே எழுகின்றது என்ற கருத்து நியாயமானதுதான். அவ்வாறாயின் கரகோஷம் எல்லாம் அப்பிழையான கருத்துக்களுக்க கிடைத்த அங்கீகாரமாக நாம் கருதலாமா?

படைப்பிலக்கியம் தொடர்பான பிரக்ஞை; இவ்விரண்டு நாள் சந்திப்பும் இதுவரை காலமும் நடந்த 13 இலக்கியச் சந்திப்புக்களின் தொடர்ச்சி. ஒவ்வொரு சந்திப்பையும் இவ்வாறு ' களிமண்பானையா ? காகிதப்பூவா ' என்று எதுகை மோனைகளோடு கூறி இலக்கிய பிரக்ஞை அற்ற தன்மையை நியாயப் படுத்த முனைவது ஆக்கபூர்வமாகாது.

'மனிதனும் மாசுபடும் சூழலும் ' எனும் தலைப்பில் திரு. ஸ்ரீதரன், திரு. பத்மமனோகரன், திரு. சிவசேகரம், திரு. ஜெயபாலன் ஆகிய நால்வரும் உரையாற்றினர். திரு. ஜெயபாலன் தவிர்ந்த மூவரும் ஐரோப்பிய மாசுபடும் சூழல் பற்றிப்பேசினர். திரு. ஜெயபாலன் இறுதியாக பேசியதால் நேரமின்மை காரணமாக விசயங்களைச் சுருக்கினார். ஆனால் இவை இலங்கை தொடர்பான விடயங்களாக இருந்தன. இந்நேரத்திலேயே என் கேள்வி எழுப்பப்பட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டது. ஐரோப்பிய மாசுபடும் சூழல் தொடர்பான பிரச்சனையின் வடிவங்கள் மூன்றாம் உலக நாடுகளிலும் குறிப்பாக இலங்கையிலும் காணப்படுகின்றன. ஒரே விடயங்களைப் பேசிய ஜெயபாலன் தவிர்ந்த ஏனைய மூவரும் மூன்றாம் உலக நாடுகள் தொடர்பாகவும் கவனம் கொண்டிருக்கலாமே என்பதே எனது வினாவாக அமைந்தது. இதற்குப் பதில் அங்கு தரப்பட்டது. இதை நான் மறுக்கவில்லை. அதற்காக திரு. பத்மமனோகரன் கருத்துத் தொடர்பான விமர்சனத்தை நான் வைக்கக்கூடாது என்தல்லவே.

ஆதிக்கத்திலுள்ள தவறான கருத்துக்களை பொறுமையாக போராடியே திருத்தவும் மனிதரை சரியானதன் பக்கம் வென்றெடுக்கவும் முடியும் -என திரு. சிவசேகரம் கூறுவது உண்மையே. அன்றைய நிகழ்வில் தவறான கருத்துக்களின் ஆதிக்கத்தை திருத்துவதற்கு அல்லது தணிப்பதற்கு திரு. சிவசேகரம் போன்ற முற்போக்காளர்கள் கைக்கொண்ட அந்த 'பொறுமைப்போராட்டத்தை' சற்று எண்ணிப்பார்ப்பின் விடை பூச்சியமே. என் விமர்சனம் தொடர்பாக இங்ஙனம் திரு. சிவசேகரம் எழுதுவது அவர்களை இன்னும் பிழையான தேடல்களிலேயே தரித்து நிற்க உதவுமேயன்றி சரியானதை நோக்கிய ஆர்வத்தைத் தூண்டாது.
சுட்டிக்காட்டலை கையாலாகாத்தனம் என முத்திரை குத்துவது விமர்சனப் பாங்கை நிராகரிக்கும் மனநிலையை வெளிக்காட்டுவதாகவே அமையும்.

பெண்கள் தவறான கருத்துக்களை வெளிப்படுத்துவதன் மூலமே சரியானதை கண்டறியமுடியும் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் அந்தச் சரியான தேடலை கொடுக்க வழி சமைக்காமல் அப்பெண்களின் தவறான கருத்துக்களுடன் சேர்ந்து 'கோரஸ்' இசைக்கும் கைங்கரியம் தவறுமிக்கது. இந்நேரத்தில் சரியான திசைவழி நோக்கி நகர்த்த முனைபவர்களை தடுத்த தன்மையையே நான் மரபுவழிச்சட்டம்பியார் போக்குத்தன்மை என்றேன். இது அப்போக்கன்றி வேறு என்ன? சுதந்திரத் தன்மைகொண்ட நல்லதை அறிய ஆர்வம் பெற்ற அப்பெண்களின் சிந்தனை ஆற்றலை 13 இலக்கியச் சந்திப்புக்களிலும் மரபுவழிப் புத்திஜீவித்தனக்காரர்களின் கருத்தியல் ஆதிக்கம் அப்பெண்களின் சிந்தனையில் தேக்க நிலையைக் கொடுத்துள்ளதோடு சரியானதை தேடும் உணர்வையும் மழுங்கடித்துவிட்டது. இந்த மரபுவழியினர் மௌனமாக இருப்பார்களாயின் இப்பெண்களின் சிந்தனை ஆற்றலின் வளர்ச்சி சரியானதைக் கண்டறியும். இம்மாற்றம் இல்லாதவரை சமையல் அறைகளுக்கும், இலக்கியச் சந்திப்புக்களுக்கும் வித்தியாசம் காண்பதரிது. கருத்துக்கூற விழைந்தவர்களை குறுக்கீடுகள் எனக்கூறி அவர்களை அதிபுரட்சிவாதிகள் எனக்குறிப்பிட்டுள்ளார். மார்க்ஸியத்தின் விரோதிகள் எனப்படுவோரே இப்பதத்தை இதுகாலவரையும் பயன்படுத்தினார்கள். இன்று திரு. சிவசேகரம் அவர்களும் பயன்படுத்துகின்றார்.

'மேற்கிலிருந்து பெறக்கூடிய ஆரோக்கிய விடயங்கள் எவை, தவறுகள் எவை' இந்த நக்கல்பாணி எனக்கு மிகவும் பிடித்துள்ளது. முயற்சிக்கின்றேன்.

ஆரோக்கியமான இலக்கிய மனநிலை கொண்டவர்கள் என நான் கூறுவது வெறும் அறிவு ஜீவித்தனத்தை அல்ல. இலக்கிய காழ்ப்புணர்ச்சியற்ற சமுதாயத்தின் யதார்த்தபூர்வ தேவைகளை உணரும் மனநிலை கொண்டவர்களையே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இறுதியாக, இலக்கிய சந்திப்பு தொடர்பான எனது விமர்சனங்கள் இலக்கிய சந்திப்புக்குழு முற்போக்குத் தளத்தில் தடம்பதிக்க முனைவதாக நினைத்து அதற்கு துணை நிற்கும் நல் உணர்வோடு எழுதப்பட்டதொன்று. என்நினைப்பு தவறு மிக்கது. பரிகாசத்திற்கு உட்படுத்தப்படவேண்டியது என்பதை திரு. சிவ சேகரம் அவர்கள் கடிதமூலம் தெரியப்படுத்தியமைக்கு என் நன்றிகள்.
- அசோக்.

ஆசிரியர்குழு - ஓசை

அன்புடையீர்!
ஓசையின் வடிவமைப்பு அச்சுமுறைகள் மிகவும் நன்றாகவுள்ளது. இன்றய நிலையில் ஐரோப்பாவில் ஏதோ ஒரு நகரத்துக்குள் தங்களை நுழைத்துக்கொண்டவுடனேயே தங்களையே மறந்து கொள்கின்ற எம்மவர்கள் மத்தியிலும் இனத்தின்பாலும், மொழியின்பாலும் மனிதத்துவத்தின்மேலும் அக்கறை கொண்ட மனிதர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த வகையில் வினாடிக்கு வினாடி நவீன நாகரிக மெருகுக்குள் தன்னை மாற்றிக்கொள்கின்ற பாரிசிலிருந்து கொண்டு தமிழ்இசைக்கும் ஓசைக்கும், ஓசை ஆசிரியர் குழுவுக்கும் என்னுடைய அன்பார்ந்த வாழ்த்துக்களை திரும்பத்திரும்ப சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

இவ்விதழில் ஓசையின் அனைத்து அம்சங்களும் தரமானதாகவேயுள்ளது. கவிதைகள் அனைத்தும் அற்புதமாக படைக்கப்பட்டுள்ளன. நீண்ட நாளைக் குப்பின் ஜெயபாலனின் கவிதை படிக்கக் கிடைத்தது. 'கறை' சிறுகதை இன்றைய குடாநாட்டின் நிகழ்வுகளை அப்படியே காட்டுகின்றது. அநாமிகனின் PARIS கட்டுரை ஐரோப்பாவின் ஒரு பழம்பெரும் நகரத்தையும் எம்மவர்களின் வாழ்க்கையையும் ஒரு தரமான சினிமா போல சுவாரிசியமாக காட்டுகின்றது. அசோக்கின் பாரிஸ் இலக்கியச் சந்திப்பு கட்டுரை ஒரு இலக்கிய அனுபவத்தின் நிகழ்வுகளை பிரதிபலிக்கின்றது.

"இன்னும் இரண்டு வருடம்யுத்தம் நீடித்தால்" திரும்பத்திரும்ப படிக்கத்தூண்டுகின்றது. தமிழ்ச்செல்வனின் சிறுகதை உட்பட அனைத்து அம்சங்களும் தரமானதாகவேயுள்ளது. ஓசைக்கு இன்னும் ஓர் வேண்டுகோள். செத்துக்கொண்டிருக்கும் எம் தேசத்தின் நிகழ்வுகளை இன்னும் ஆழமாக சேர்த்துக்கொண்டால் என்ன ? இலக்கியமென்பது உயிர்ப்பூட்டுவதேயாகும். ஓசை தொடர்ந்து வெளிவரட்டும். எம் தேசத்தின் துயரங்களை எல்லோர் செவிகளிலும் ஒலிக்கட்டும்.

- பி. ரவிவர்மன்
கொழும்பு

.....ஒவ்வொரு இதழிலும் அழகானதும், ஏதோ ஒன்றை சொல்லக்கூடியதுமான அட்டைப்படத்தை வெளியிடுகிறீர்கள்.

தமிழ்ச்செல்வனின் சிறுகதை அற்புதம். வாசுதேவனின் மொழிபெயர்ப்புச் சிறுகதையும் அவ்வாறே. எந்தக்குறையுமே சொல்லமுடியாத அளவு 'வார்த்தை' அமைந்திருந்தாலும் , எனக்கு 'இன்னும் இரண்டுவருடம் யுத்தம் நீடித்தால்' கதையே பிடித்தமானதாக அமைந்திருக்கிறது. கதையை வாசித்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


முடித்ததும், கொஞ்சநேரம், அதன் சூழலை எண்ணினேன். இயற்கையாக அமைந்திருந்தது. அந்தச்சூழலில் நானும்.

சோலைக்கிளியின் கவிதை, சீனிபோடாத - சூடு ஆறிய தேயிலை மாதிரியிருந்தது. 10 ஆவது ஓசையில் முன்னணிக்கவிஞர் என்று குறிப்பிட்டிருந்தீர்கள். இந்தக் கவிதையை வாசித்தபோது எனக்கு அதில் சந்தேகம் உருவாகிறது.

பி. ரவிவர்மனின் கவிதையை அனுபவித்தேன். அவரின் அண்மைக்காலத்துக் கவிதைகள் மிகவும் தரமானவையாக அமைந்திருக்கின்றன. வியந்தேன், 'கலைமுகம்' சஞ்சிகையில் அவரது கவிதையொன்றைக் கண்டு.

'சில ஆக்கங்கள் தரக்குறைவாக அமைவதுண்டு' என்ற கூற்றில் எனக்குக் கொஞ்சமும் உடன்பாடில்லை. எப்படியென்றாலும் சரி கிடைக்கின்ற ஆக்கங்களைக்கொண்டு 'ஓசை' யைத்தொடர்ந்து வெளியிட்டு -வளர்த்தெடுத்தால் சரி, என்று தாங்கள் எண்ணினால், அது 'ஓசை' யின் வளர்ச்சியை அர்த்தம் பண்ணாது. கிடைக்கின்ற ஆக்கங்களை சுத்திகரிப்புச் செய்த பின்னர் தான் பிரசுரிக்க வேண்டும். இந்த நிலையில், 'ஓசை' இரண்டு மூன்று பக்கங்களில் வந்தாலும், அது பெறுமதிதான்.

எம். எல். எம். அன்ஸார்
காத்தான்குடி



கனடாவிலிருந்து வெளிவரும் செந்தாமரை வாரஇதழ் ஆசிரியர். டி. பி. எஸ். ஜெயராஜ், பத்திரிகையில் வெளிவந்த செய்தி தொடர்பாக தாக்கப்பட்டார்! ஏற்கனவே, தாயகம் இதழ் ஆசிரியரும் பலதடவைகள் தாக்கப்பட்டிருக்கிறார்.

பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவது மனிதஅநாகரீகத்தின் உச்சவடிவம். எழுத்துச்சுதந்திரத்திற்கெதிரான இவ்அடக்குமுறை வடிவங்கள், எம்மை மேலும் மேலும் சூன்யநிலைக்கே இட்டுச்செல்லும் என்பதை எச்சரிப்பதோடு, ஓசை தனது கண்டனங்களையும் தெரிவிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் தமிழ் திரைப்படங்கள்

- ஏ. ரகுநாதன்



முப்பதுவருடகால ஈழத்துத்திரைப்பட வரலாற்றோடு மிக நெருக்கமான தொடர்பு கொண்டுள்ள கலைஞர் திரு. ஏ.ரகுநாதன். 'கடமையின் எல்லை ' திரைப்படத்தின்மூலம் ஈழத்துத்தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமாகி, தொடர்ந்து 'நிர்மலா' 'புதியகாற்று' 'தெய்வம் தந்தவீடு' 'நெஞ்சுக்குநீதி'போன்ற படங்களில் நடித்ததோடு, இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'இளையநிலா 'படத்திற்கு தயாரிப்பு நிர்வாகியாகவும் கடமையாற்றியவர்.
'நிர்மலா' திரைப்படம் இவரது சொந்தத்தயாரிப்பு. இலங்கையின் முதலாவது 'சினிமாஸ்கோப்' படமான 'தெய்வம் தந்தவீடு' திரைப்படத்திற்கு திரைக்கதை எழுதி , நிருவாகப் பணி புரிந்ததோடு கதாநாயகனாகவும் நடித்திருந்தார்.
தன்னை ஒரு 'திரைப்படவியலாளன் ' என்பதைவிட ஒரு 'நாடகாளன்' என்று சொல்லிக்கொள்வதில் கூடிய மகிழ்ச்சி கொள்ளும் இவர் நடிகனாக, நாடகாசிரியராக, தயாரிப்பாளராக, இயக்குனராக, ஒப்பனையாளராக, நிர்வாகியாக இலங்கைத் தீவகம் முழுவதும் பலதரப்பட்ட கலைஞர்களோடும் பணிபுரிந்திருக்கிறார். ஏராளமான வானொலி நாடகங்களிலும் நடித்துப்புகழ் பெற்றவர்.
கடந்த இரண்டு ஆண்டுகளாக, பாரிசில் வசித்துவரும் திரு. ரகுநாதன் அவர்கள் பாரிசில் வெளிவந்த 'பாரிஸ் முரசு' வார இதழின் ஆசிரியராகவும் கடமையாற்றியவர். ஏலவே ஈழத்தில் 'நிழல்' என்றபெயரில் கலைபத்திரிகை ஒன்றையும் நடாத்தியது குறிப்பிடத்தக்கது -1968 -1970 காலப்பகுதியில் 36 இதழ்கள் வெளிவந்தது. தற்சமயம் பிரபல எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 'உலகமெல்லாம் வியாபாரிகள் ' நாவலை திரைப்படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டுவருகிறார்.

கலைஞர். ரகுநாதன் அவர்களுடனான பேட்டி அடுத்த இதழில் வெளிவருகிறது. வாசகர்களும் கேள்விகள் எழுதி அனுப்பலாம். தரமான கேள்விகள் பிரசுரமாகும்.

- ஓசை

1963 என்பது சரியாக இருக்கலாம். இலங்கையில் திரைப்படங்கள் கருக்கொள்ள ஆரம்பித்த காலம். கொழும்பு B. C. C. ஸ்தாபனத்தில் பணியாற்றிய திரு. கிருஷ்ணகுமார் நடித்து -எழுதி இயக்கிய தோட்டக்காரி-1965 இல் வெளிவந்ததென நம்புகிறேன். ஒரு ஆர்வத்தால் உந்தப்பட்டு திரு. கிருஷ்ணகுமார் தயாரித்து வெளியிட்ட இப்படம் படத்தொழிலுக்கு வேண்டிய பணப்புரள்வு இல்லாதபடியால் சரியாக அமையவில்லை. 1963ல் ஆரம்பிக்கப்பட்டு 1966 இல் வெளிவந்த 'கடமையின் எல்லை' வேண்டிய பொருள் வசதிகள் இருந்தும் நன்றாக அமையவில்லை. பல காரணங்கள் இதில் அடங்கும்.

அடுத்து "டாக்சி டிரைவர்" நிறைந்த அனுபவம் வாய்ந்த ஒலிப்பதிவாளரான திரு. சுண்டிக்குளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோமசேகரன் நெறிப்படுத்த அவர் மனைவி மாலினிதேவி அவர்கள் தயாரித்த படம் . நம்பிக்கை ஊட்டக்கூடியதாக இருந்தது.

இதையடுத்து, 18 நாட்களில் படமாக்கப்பட்ட நான் தயாரித்த 'நிர்மலா'படம் பத்திரிகைகளின் - பார்த்தவர்களின் நம்பிக்கையையும் பாராட்டையும் பெற்றிருந்தது. இதில் திருகோணமலை பத்மநாதன் அவர்களின் இசையும் சிறப்பாக அமைந்தது. திரு. அருமைநாயகம் எடிட்டிங், நெறியாள்கை செய்திருந்தார்.

தொடர்ந்து கலையென்றால் தன் உயிரையே கொடுப்பேன் என கலைவெறிகொண்டலைந்த கலைஞர் ஸ்ரீசங்கர் ஆரம்பித்து தொழிலதிபர் நாராயணசாமி அவர்கள் முடித்து வைத்த M. V. பாலன் இயக்கிய 'மஞ்சள் குங்குமம்' படம் வெளிவந்தது. சுமாராக அமைந்தது.

வி. எஸ் துரைராஜா அவர்கள் தயாரித்த 'குத்துவிளக்கு' திரைப் படம் முதன்முதலாக மண்வளம் என யாழ்ப்பாண பேச்சுவழக்கில் நல்ல தயாரிப்பு வசதிகளுடன் உருவாகி திரையிடப்பட்டு 100 நாட்கள் வரை ஓடியது. ஒளிப்பதிவாளர் மகேந்திரன் இயக்கியபடமிது.

'காத்திருப்பேன் உனக்காக' படம் இலங்கைக்கு குறிப்பிடத்தக்க ஒரு கதாநாயகனாக சிவராமை அறிமுகப் படுத்திய நல்ல படம். ஒளிப்பதிவாளர் தெய்வேந்திரன் நெறிப்படுத்தியது. திரு. ஜெயராமச்சந்திரன் தயாரித்தார்.

'வெண்சங்கு' படம் மதிப்புக்குரிய இலங்கையின் திரைப்படமுன்னோடி ஸ்டியோ தியேட்டர் உரிமையாளர், தமிழகத்திலும் படங்கள் தயாரித்த திரு. W. M. S தம்பு அவர்கள் நெறியாள்கையில் வெளிவந்தது. இதில் இலங்கையின் மிகப்பெரிய கலைஞன். லடீஸ் வீரமணி நடித்திருந்தார்.

தொடர்ந்து "நான்கு லட்ஷம்" என்று ஒரு படம். உண்மைக்கதை. சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிமாற்றுச்செய்யப்பட்டது. திரு. ஜோ. அபேவிக்கிரமா போன்ற தலைசிறந்த கலைஞர்கள் நடித்திருந்தார்கள்.
"புதியகாற்று" "நான் உங்கள் தோழன்" போன்றபடங்களை தோட்டத்தொழிலாளர் அமைப்பைச் சேர்ந்தவரும் தொழிலதிபருமாகிய V. P. கணேசன் தயாரித்தார். இவர் தயாரித்த படங்கள் முறையாக தேவையான பணத்தை செலவு செய்ததால் சிறப்பாக அமைந்தன . தொழில் அனுபவம் மிக்க கலைஞர்கள் சந்திரன் -இராமநாதன் நெறிப்படுத்தினர்.

காவலூர் ராஜதுரையின் 'பொன்மணி' யதார்த்தப்படைப்பாக பத்திரிகைகள், அரசு பாராட்டுக்களுடன் வந்து மறைந்தது.

இடையே 'சுமதி எங்கே' என ஒரு மொழி மாற்றுப்படமும் வந்து போனது.

இலங்கையின் முன்னணி அரசியல் தலைவர்களில் ஒருவராகிய லங்கா சமசமாஜக்கட்சி வாசுதேவா நாணயக்காராவின் தம்பியும், பல சிங்களப்படங்களை தயாரித்து நெறிப்படுத்தியவருமான யசபாலித நாணயக்கார 'அனுராகம் ' என்ற சிறப்பான படத்தை நெறிப்படுத்தினார்.

திருமலை. டாக்டர். வேதநாயகம் தயாரித்து நடித்த, பிரபல ஒளிப்பதிவாளரும் பலதமிழ்ப்படங்களுக்குப் பணிபுரிந்தவருமான M. A. கபூர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நெறிப்படுத்திய ' தென்றலும் புயலும்' நல்ல பாடல்களுடன் வந்தது. இசை திருமலை பத்மநாதன்.

விளம்பரத் துணுக்குகள் மூலம் இலங்கை எங்கும் பிரபல்யமாகி பிறகு மேடைதோறும் புகழ் பரப்பி பின் திரைப்படமாகிய எஸ். ராமதாஸ் என்ற கலைஞனின் 'கோமாளிகள்' 98 நாட்கள் ஓடியது. இலங்கையில் திரையிட்ட படங்களில் கையைக்கடிக்காத படம் என்று இதைமட்டும்தான் கூறலாம். தயாரித்தவர் திரு. மொகமட்.
தொடர்ந்து இதே குழுவினரின் 'ஏமாளிகள்' படமும் வந்தது. "எங்களில் ஒருவன்" படம் எடிட்டர் சந்திரன் இயக்கி வெளி வந்தது.

அதைத் தொடர்ந்து S. V. சுப்பையாவுடன் இளங்கலைஞர்களும் நடித்த ' மாமியார் வீடு ' படமும் வெளிவந்தது.

"வாடைக்காற்று" இலங்கையில் மிகப்பிரபலமாக விற்பனையான பிரபல எழுத்தாளர் செங்கை ஆழியானின் நாவல், அனுபவஸ்தர் மொறாயஸ் நெறியாள்கையில் -K. S. பாலச்சந்திரன் , A. E. மனோகரன் போன்ற பிரபல கலைஞர்களுடன் வெளிவந்து சிறப்பாக அமைந்த படம்.

V. K. T. பொன்னுச்சாமி அவர்கள் தயாரித்த 'தெய்வம்தந்த வீடு' முதல் தமிழ் சினிமாஸ்கோப் படம் சரியாகத் தயாரிக்கப்படாமல் வெளியிடப்பட்டது. இப்படத்தில் நான் நடித்தும், கதை எழுதியுமுள்ளேன். "நிர்மலா" "காத்திருபேன் உனக்காக" "அனுராகம்" "நெஞ்சுக்குநீதி" "சர்மளாவின் இதயராகம்" ஆகிய படங்களில் சிறப்பாக நடித்த கண்டி விஸ்வநாதராஜா வும் இப்படத்தில் நடித்தது குறிப்பிடத்தக்கது.

"நெஞ்சுக்குநீதி" திரைப்படம் தமிழக கலைஞர்கள் ஸ்ரீகாந், மலேசியா சிவாஜிராஜ், சிங்களகலைஞர்கள் சுமணு, ரோய் முதயியோர் பங்குபற்றியது.
'டாக்சி டரைவர்' படத்தை நெறிப்படுத்திய சுண்டிக்குளி சோமசேகரன் மாலினிதேவி தம்பதிகள் தயாரித்தனர். இணைத்தயாரிப்பாளர் லோட் கந்தசாமி.

இடையே 1984 இல் திரு. ஷண் தயாரிப்பாக தமிழக தியாகராஜன் - தீபா-சொப்னாவுடன் ஈழத்தின் இணையற்ற கலைஞர்காமினி பொன்சேகாவுடனும் மற்றும் மரிக்கார் ராமதாஸ் முதலியோருடனும் தயாரான கூட்டு முயற்சி தயாரிப்பாளர்களிடையே ஏற்பட்ட பிரச்சனையால் திரையிடப்படாமலேயே நின்றுவிட்டது.

அதற்குமுன்னர் 'பைலட் பிரேம்நாத் ' என்ற இந்தியப்படம் கூட்டுத்தயாரிப்பு என்ற பெயரில் இலங்கையில் தயாரானது. பிறைற்றன் அரியரட்ணம் அவர்களின் ரத்தத்தின் ரத்தம் படமும் அதே ரீதியில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடி பணம் சேர்த்ததும் குறிப்பிடத்தக்கதாகும். இப்படங்களை இலங்கையில் முதலில் 16 மி. மீட்டரில் தயாரான "சமுதாயம்" "பாசநிலா" படங்களில் "பாசநிலா" படத்தயாரிப்பு நெறியாள்கை கதையென முன்னோடியாக விளங்கியவரும் பின்னர் பல சிங்களப்படங்களை தயாரித்து இயக்கியவரும் ஆகிய ஜோ தேவ்ஆனந் அவர்கள் இயக்கினார்.
இறுதியாக 1992ல், "தெய்வம் தந்த வீடு" "நெஞ்சுக்கு நீதி" போன்ற படங்களில் பணியாற்றிய பேராதனை ஜுனைதீன் தயாரிப்பாக "சர்மிளாவின் இதயராகம் படம் வெளிவந்திருக்கிறது. இது திருமதி. ஜுனைதீனின் நாவல். ஏற்கனவே சிந்தாமணி வாரப்பத்திரிகையில் வெளிவந்து பின் நூலுருப்பெற்றது இப்போ படமாகி இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் தமிழ்சினிமா முயற்சி என்றல் தோல்விதான் என்பது பொதுவான ஒப்புதல். இவற்றிற் கான காரணங்களையும் ஆராய்தல் பொருத்தமானது.
சினிமா, கலையை மூலமாகக் கொண்ட ஒரு தொழில். தமிழ் சினிமாக்களை வெறும் தொழில் என்று கூடச்சொல்லுவார்கள்.
ஆத்மதிருப்திக்காக அல்லது முழுமையாக ஒரு கலைவடிவை உருவாக்க யாரும் முன்வருவதில்லை. இலங்கையில் தமிழ்ப்படம் தயா ரித்தவர்கள் பெரும்பாலும் கலைஞர் கள். கலை உபாசகர்கள். முழுமை யான படைப்பை அளிக்கக்கூடிய ஈடுபாட்டுடன் வசதியுள்ளவர்கள் இத்தொழிலில் ஈடுபடவில்லை.
இத்துடன் இலங்கையில் தமிழ்ப் படங்களுக்கென்றிருப்பது ஓர் சிறிய சந்தையே. இச்சிறிய சந்தையில், மிகச்சிறப்பான அறிமுகமும் அனு பவமும் வாய்ந்த தமிழகப்படங்களின் போட்டியைச்சமாளிக்க முடிய வில்லை.

இரண்டாவதாக சினிமாவை ஒரு காட்சிவியாபாரம் (Show business) என்பது சரியான பதமாகும். இந் தப்படைப்பை அறிமுகம் செய்வ தற்கு மூலம் பத்திரிகைகளே. இந் தப்பத்திரிகைகள் முதலில் எம்மை அறிமுகம் செய்யக்கூட விரும்ப வில்லை. தமிழகசினிமாக்களுக்கு நாலு பக்கம் ஒதுக்கியவர்கள் கூட எமது சினிமாக்களுக்கு காற்பக்கம் கூட ஒதுக்கவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை.

அடுத்து திரையீட்டாளர்கள் எமது படங்களை வெளியிட விரும்ப வில்லை. காரணம் லாபநோக்கம். தென்னிந்தியப்படங்களால் அவர் களுக்கு கொள்ளை லாபம் கிடைத் துக்கொண்டிருந்தது. போதாத திற்கு, நமது படங்கள் திரையிடும் போது மூன்றுநான்கு பெரிய தமிழ கப்படங்களைப்போட்டு நசுக்கினர் கள்.

இந்தக்காலகட்டத்தில், தமிழ்த்த லைவர்கள், இலங்கையில் தமிழ்ப்ப டங்களைத்தயாரிக்காதீர்கள். அப்ப டித்தயாரிப்பின் இலங்கைஅரசு, இந்தியப்படங்களைத் தடைசெய்து விடும். நம் கலாச்சாரம் அழிந்துவி டும் என்று பகிரங்கமாகவே நமக்கு "அறம்" பாடியது மிகப்பெரிய கொடுமை.
இன்னுமொரு காரணத்தையும் கூறலாம். ரசிகர்கள் என்பவர்க ளில் பலர் தமிழக கலைஞர்களின் பக்தர்களாகவே வாழ்ந்தார்கள். அவர்கள் வணங்கும் கடவுள்கள்(ந டிகர்) இல்லாத படங்கள் எதற்கும் லாயக்கற்றதாகவே உணரப்பட்டிருந் தது.
இலங்கைத்தமிழனுக்கு இன்னும் சில தனித்துவக்குணங்கள் உண்டு. நெருங்கிய நண்பர்களாகட்டும் யாராவது ஒரு நல்லவிஷயத்தைச் சொன்னாலும், அதில் குறை கண் டால்தான் தான் அவனை விடப் புத் திசாலி என்பதைக்காட்டிக்கொள் ளலாம் என்று நல்லதையும் ஆதரிக் காத (Superialy Complex) ஒரு மேல் போக்கான மனப்பான்மை.
பிறிதொன்று - செம்மறியாட்டுக்கு ணம். ஏ-40 கார், எவெரெடி ரோச், றலி சைக்கிள், சிங்கர்மி ஷின்.. இப்படித்தெரிந்ததைத்தவிர வேறொன்றும் வாங்கமாட்டார்கள். சினிமா பார்ப்பதிலும் அப்படியே. எம்ஜிஆர், சிவாஜி, ஜெமினி என வரிசைதான். படம் எப்படி இருப் பினும் வசூல் இந்த வகையில்தான்.

இவ்வேளையில் இன்னுமொரு முக் கிய விடயத்தை ஒப்பிடலாம். ஒரு திரைப்படம் வெளிவரும்போது அதில் சம்பந்தப்படாத ஏனைய கலைஞர்கள் துர்ப்பிரசாரம் செய் வது. இலங்கையில் எழுத்துத்துறைக் கும் பொருந்தும். உதாரணத்திற்கு தன் உதிரத்தால் உயிர்ப்பிக்கும் டொமினிக் ஜீவாவின் "மல்லி கை"க்கு எத்தனை எழுத்தாளர்கள் கைகொடுக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கலையைத்தொழிலாகக் கொள்ளாத கொள்ளமுடியாத கலைஞர்கள் தான் இலங்கைப்படவுலகில் தோன் றினார்கள்.
பெருளாதாரத்தாக்கத்திற்குப் பயந்து ஒதுங்கிக்கொண்ட திறமைசாலிகள் பலர்.

இலங்கையில் தரமான திரைப்ப டங்கள் தயாரிக்கமுடியாது என்று கூறுவது மிகப்பெரும் தவறு. சிங்கள சகோதரர்களின் படங்கள் உலக அரங்கில் புகழ்க்கொடி நாட்டுகின் றன. காரணம் தங்கள் நாடு தங்கள் மொழி தங்கள் கலாச்சாரம் -பண் பாடு என்று தனித்துவமான தார்மீக உணர்வு அவர்களிடம் நிறையவே உண்டு. ●

## பாரிஸில் நாங்கள்

'பா த்ரூம் பைப்லைன்' பிசகாகிப் போயிருந்ததால் இரவு முழுவ தும் சொட்டிய தண்ணீர் கிட்டத்தட்ட படுக்கையறைவரை நெருங்கி யிருந்தது.

அரைமணி நேரத்துக்குள் பாத்திரங்கள் கழுவிவைத்துக் குளித்து வெளிக்கிட்டு வேலைக்கு ஓடவேண்டிய வழமையான 'ரைம்ரேபி ளோடு' ROOM இன் கோலத்தையும் பார்க்க எரிச்சலாக இருந்தது.

எவ்வளவு முயற்சி செய்தும் தண்ணீர் ஒழுகுவதை நிறுத்தமுடிய வில்லை. முக்கிய இணைப்பை நிறுத்திப் பார்த்து ..... அதுவும் முடியவில்லை. இணைப்புக்கு மறுபுறத்தில் 'மெயின்லைன்'ல் பிசகு.

இப்படியே விட்டுவிட்டுவேலைக்குப் போனால் பின்னேரம் திரும்பிவர ROOM இரண்டாக இருக்கும். போதாததிற்கு கீழ் வீட்டுக்காரி வேறு வந்துவிடுவாள்.

வேலை.... லீவு...! நினைத்துப்பார்க்கக் கஷ்டமாக இருந்தது. போனவாரமும் இரண்டுநாள் மேலதிகமாக எடுத்தாகிவிட்டது. சரி, முயற்சித்துப்பார்க்கலாம் என்று ஒரு மாதிரி 'பத்துறோனு'க்கு Phone பண்ணி அரைநாள் லீவு எடுத்தபின், வீட்டுச்சொந்தக்காரனுக்கு Phone பண்ணி, திருத்துவதற்கும் ஒருவனை ஒழுங்கு பண்ணிதிருத்தி முடிந்து அதற்கும் உரியதொகையைக் கொடுத்து எல்லாம் முடிந்தா யிற்று.

அடுத்தவாரம்தான் விசயம் வெளித்தது.
முதல்நாள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருந்த நண்பன் (?) அடுத்தநாள் இன்னொரு நண்பனிடம் பெருமையடித்திருக்கிறான் - மெல்லிய கீறலில்.
"பார் மச்சான் இண்டைக்கு ஒருத்தர் பைப்லைனோடை படப் போற பாட்டை "
!!!


சௌமி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பத்மாவதி



கதை

- புவனன்

அவளைப்போன்ற அழகான ஒருத்தி இந்த உலகத்திலேயே இருக்கமுடியாது என்றே எனக்குத் தோன்றிற்று. அப்படி ஒரு அழகு!

பத்மா வீட்டுக்கு வந்துபோகும் போதெல்லாம் நான் அவளைச் சுற்றிச் சுற்றித்திரிந்தேன். அவள் முகத்தை இமைவெட்டாமல் பார்த்தபடியே இருந்திருக்கிறேன்.

பத்மா இவ்வளவு அழகிதான். ஆனாலும் வறுமையும் அவளது குடும்பச்சொத்தாகி இருந்தது. படிப்பு வாசனை அவளால் அறிய முடியவில்லை.

எங்கள் வீட்டில் எல்லோரும் அவளை பத்மா.. பத்மா என்று கூப்பிட நானும் அப்படியே தொடங்கிவிட்டேன். எனக்கும் அவளுக்கும் குறைந்தது எட்டுவயதாவது வித்தியாசமிருக்கும். யாரும் எனக்கு பத்மா அக்காவென்று சொல்லித்தரவில்லை. ராணி அக்கா, பபா அக்கா என்று பக்கத்துவீட்டு அக்காமாரைச் சொல்லித்தந்துவிட்டு. நாக்குத்தவறி ராணி என்றுவிட்டால் பொல்லெடுத்து ஓங்கும் பாட்டிகூட பேசாமல் இருந்துவிட்டாள். எனக்கென்ன ! நானும் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. சரி, பத்மா!

பத்மாவுக்கு கலியாணப் பேச்சு நடந்துகொண்டிருந்தது. எனக்கென்னமோ மனசு சஞ்சலமாக இருந்தது. இவளுடைய அழகுக்கு எப்படி ஒருத்தன் வந்து வாய்க்கப் போகிறானோ!

சரி, யாரோஒருத்தனை அவள் கட்டித்தானே ஆகவேண்டும். பேசாமல் இருந்துவிட்டேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் எதிர்பார்த்தது போலவே ஒருவன் வந்து அவளைக் கட்டிக் கொண்டான். எனக்கு அவனைக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. கரி நிறம். கோணல் மூஞ்சி. அவளு டைய அழகுக்கும் அவனுக்கும் எது வித சம்பந்தமும் இருக்கவில்லை. பத்மாவுக்குப் பக்கத்தில் நிற்கும் போது அவன் இன்னும்கூட கறுப் பாகவே தெரிந்தான். அவளை நினைத்து மிகவும் கவலைப்பட் டேன். இரண்டு மூன்று தினங்கள் சாப்பிடுவதற்குக்கூட கஷ்டமாகவி ருந்தது.

பின்னர் ஒருவாறு ஆறுதலா னேன். பத்மாவின் கைகள் கழுத்துக்களில் நிறைந்த நகைகள். அவனின் செல்வச் செருக்கு பத் மாவின் உடம்பில் தெரிந்தது.

எனக்கு விபரம் தெரிந்த வரையில் முதன்முதல் "நெக்கிளெஸ்" என்ற பெயர் அறிமுகமானது அவளுடைய கழுத்தில் இருந்துதான்.

பத்மாவையும் அவள் கணவனை யும் எல்லோரும் கூப்பிட்டு விருந்து கொடுத்தார்கள். எங்கள் வீட்டிலும் கொடுத்தார்கள். வரும் போது அவள் அழகிய "சொக்கே லட்" பெட்டியொன்று வாங்கி வந் தாள். அக்கா அவளுக்கு புதுக் குடை வாங்கிக்கொடுத்தாள். அம்மா புதுச்சாறி வாங்கிக்கொ டுத்தா. மகிழ்ச்சியோடு விடைபெற் றார்கள். எனக்குச் சந்தோசமாக இருந்தது.

அவன்வேறு ஊர் போக்குவரத்து இலாகாவில் வேலைபார்த்தான். பத்மாவையும் அவன் தன்னோடு கூட்டிப்போகவில்லை. கிழமையில் ஒரு தடவை மட்டும் ஊருக்கு வரு வான்.

வந்துபோகும் அந்த ஒரு நாளி லும்கூட பத்மாவோடு சண்டை போட்டான். அவனுக்குச் சரி யான தாழ்வுச்சிக்கலாகஇருக்கவே ண்டும். பத்மாமீது சந்தேகப்பட் டான். சண்டைமுற்றி அடிக்கவும் ஆரம்பித்தான். பத்மாவை நினைக் கப் பாவமாக இருந்தது.

அவன்போன மறுநாள் வீட்டுக்கு வந்து சொல்லிச்சொல்லி அழு வாள். தடித்த தழும்புகளைக் காட்டி விம்முவாள். அவளது சிவந்த உடம்பில் தளும்புகள் அப் படியே பளிச்செனத் தெரியும். அம் மாவும் அக்காவும் ஆறுதல் சொல் வார்கள். அவளோடு இருந்த அவளது அம்மாவும் கொஞ்சநாளில் செத்துப்போனாள்.

பத்மா வீட்டுக்கும் எங்கள் வீட் டுக்கும் இடையில் ஒரு சிறிய பலசரக்குக் கடையிருந்தது. அந் தக்கடையில் இராமையா என்று ஒருமலைநாட்டு இளைஞன் வேலை பார்த்து வந்தான். பத்மாவின் புருஷன் வெறிபோட்டுவிட்டு உதைக்கும் சந்தர்ப்பங்களில் எல் லாம் இராமையாதான் கச்சிதமாக அவளைக் காப்பாற்றி எங்கள் வீட் டில் சேர்த்திருக்கிறான்.

நாட்கள் செல்லச்செல்ல இரா மையாவுக்கும் பத்மாவுக்கும் முடிச் சுப்போட்டு ஊர் கதை கட்டிவிட் டது. எல்லோரும் அவளை வெறுத் தார்கள். ஒதுக்கினார்கள். எங்கள் வீட்டில் மட்டும் அவளுக்கு ஓரளவு இடம் கிடைத்தது.
பத்மாவின் புருஷன் இப்போ உச்சத்தில் தாண்டவமாடினான். அவளால் தாங்கமுடியவில்லை.

இராமையா ஆறுதல் கூறினான். தைரியம் கொடுத்தான்.
ஒரு நாள் அவள் இராமையா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வோடு அவனது ஊருக்கு ஓடிப் போய்விட்டாள். எங்கள்வீட்டில் எல்லோருக்கும் கவலையாக இருந் தது.
அதன் பிறகு அவள் புருஷனும் அங்கு வருவதில்லை. வீடு வெறுமையாக இருந்தது.

ஒரு வருடம் போயிருக்கும். ஒருநாள் பத்மா அழுதபடி வீட் டுவாசலில் வந்து நின்றாள். ஊர்ச்சனங்கள் அவளைத் திட்டி னார்கள். வாய்க்கு வந்தபடியெல் லாம் ஏசினார்கள். சிலர் காறியும் உமிழ்ந்தார்கள். அவள் குனிந்தபடி அழுதுகொண்டிருந்தாள்.

இராமையாவால் குடும்பம் நடத் தமுடியவில்லை. ஒருவருஷமாயும் அவனது ஊர்ச்சனங்களும் அவளை ஏற்கவில்லை. பாரபட்சம் காட்டினார்கள். இராமையாவின் இயலாமையும் சேர அவளை அடித் துத்துரத்திவிட்டான்.

என்னுடைய அம்மாவை நினைக்க சிலவேளை நெஞ்சம் விம்மும். பெருமையாக இருக்கும். ஊர்ச் சனங்களை அம்மா கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. அவளை ஆதரவாக வீட்டுக்குள் கூட்டிப் போனாள்.

ஆறுமாதங்கள் அமைதியாகக் கழிந் தன. ஊர்க்கதையும் அடங்கியது. எங்கள் தெருவுக்கு அடுத்த தெருவில் வசிக்கும் இளைஞன் ஒருவன் பத்மாவைக் காதலித் தான். அவளும் விரும்பினாள். கடிதப்போக்குவரத்து நடந்தது. அவளால் எழுத வாசிக்க முடியாது. அக்காவின் உதவியை நாடினாள். அக்காவுக்குப் பிடிக்கவில்லை. மறுத்துவிட்டாள். என்னைப்கேட் டாள். மகிழ்ச்சியோடு உதவினேன். காதல் வளர்ந்தது. ஊர் முணுமு ணுக்கத்தொடங்கியது. "இப்ப இவள் மூண்டாவது ஆளையும் புடிச்சிட் டாள் " விபச்சாரி என்றது. இதனால் எங்கள் வீட்டுக்கும் சிக்கல் வந்தது.

அந்த இளைஞன், தான் அவளை வேறு ஊருக்குக் கூட்டிப்போவதாக அம்மாவிடம் சம்மதம் கேட்டான். அம்மாவும் சம்மதிக்க ஊரைவிட்டுப் புறப்பட்டார்கள். நான் பஸ் ஸ்ரா ண்ட் வரை கூட்டிப்போனேன். ஊரில் அவள் விபச்சாரி என்ற பேரெடுத்திருந்ததால் வேலிக்குமே லால் தலைகள் நீண்டன. அவர்கள் முன்னே செல்ல , என் கால்கள் பத்தடி பின்ஊர்ந்து நகர்ந்தது.

பஸ் ஸ்ராண்டை அண்மித்திருப் போம். ஒரு பொலிஸ் ஜீப் வந்து பத்மாவின் அருகில் நின் றது. இன்ஸ்பெக்டர் சிவிலில்தான் வந்திருந்தான். இறங்கி பத்மாவை பிடரியில் பிடித்து இழுத்தான். நிலத்தில் போட்டு உதைந்தான். அந்த இளைஞன் பேயறைந்தவன் போல நின்றான். எனக்கும் ஒன்றும் செய்யமுடியவில்லை. அழுகை அழுகையாகவந்தது.
என்ன நினைத்தாளோ தெரிய வில்லை. ஜீப்புக்குள் இருந்த இன்ஸ்பெக்டரின் மனைவி ஓடி வந்து தடுத்தாள்.

அந்த இளைஞனும் பத்மாவும் அன்று ஊரைவிட்டுப் போனவர் கள்தான். பிறகு வரவேயில்லை. எங்குபோனார்கள் எப்படியானார் கள் எதுவும் தெரியாது. ஐந்தாறு வருடங்கள் தாண்டிவிட்டது. நாங் களும் அவளை மெதுவாக மறந்தே விட்டோம்.

எனக்குத் தொலைவூரில் ஒரு நண்பன் இருந்தான். ஒரு முறை அவனைச்சந்திக்க வேண்டியிருக்க அங்குபோனேன். பஸ் ஸ்டாண்டில் ஒரு பெண் குரல், தம்பீ... என் றது. பின் என் பெயரைச் சொல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லியே கூப்பிட்டது. நண்பன் ஆச்ச ரியத்தோடு என்னைப் பார்த்தான். முகம் சுழித்தான்.
எனக்குப்புரியவில்லை.
பாசத்தோடு ஓடிவந்தாள்.
பத்மா..!

ஊரைவிட்டு ஓடிவந்த அந்த இளைஞனும் அவளைக் கைவிட்டு விட்டானாம். இப்போ அந்த பஸ் ஸ்ராண்டில் அவள் ஊரறிந்த பகிரங்க விபச்சாரியாம்.

பத்மா என்னோடு நெருக்கமாகக் கதைத்துக்கொண்டிருந்தாள். நண் பன் விலகி விலகி ஓடினான்.

அவள், அம்மா, அக்கா எல் லோரையும் அன்பொழுக விசாரித் தாள். எனக்கு அப்பிள் வாங்கிக் கொடுக்க விரும்பினாள். நான் வேண்டாம்.. வேண்டாம் என்று தடுத்தேன். அவள் விடவில்லை. கடைக்கு ஓடினாள். இரண்டு பெரிய அப்பிள்கள் வாங்கி என்னி டம் கொடுத்தாள். அவள் கண்கள் கலங்கி இருந்தன.

நீண்ட நேரம் அவளோடு பேசிக் கொண்டு நிற்பதும் எனக்குச் சங் கடமாக இருந்தது. விடைபெற்றுக் கொண்டேன். அவள் பாசம் பொங்க, என்னையே பார்த்தபடி சிலையாய் நின்றாள்.......

(இலங்கையில் நடந்த ஒரு உண் மைக் கதை )

## எனது ஊர்!

இருள்
இறுக்கிய
ஒரு இரவுக்குள்
கூனிக்குறுகிக் கிடக்கிறது
எனது ஊர்

பல்லுக்கிட்டும்
பங்குனிப்பனி

எங்கோ
தூரத்தில்
அறுந்துபோன
ஒலியாய்
ஆந்தைகளின்
அலறல்
விட்டு விட்டுத்
தொடர...

விழிகளைத்திறக்காமல்
கிழிந்த
பனையோலையைப்பாயை
பற்றியபடி
நான்.

துவக்குகளும்
கூரிய கத்திகளும்
என் முகத்தை
குத்திக் கிழிக்க

என்
விழிகள்
முழுதும்
இரத்தம் நிறைய

எங்கள்
இருப்பிடங்கள்
தீயில்
எரிந்து கருகி
சிவப்பாய்
தகிக்க..

எங்கும்
மனிதத்தின்
அவலங்கள்

நான்
ஓவென்று
வீரிட்டலற..

அதுவும்
முடியவில்லை
இந்த ஊரில்..

- ரவிவர்மன்
கொழும்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூமியை விட்டுப் பயணம்.

## நான்

### 1

என் முற்றத்து
முருங்கையைப்போல்
நான்
செத்து மடிகின்றேன்.

மானம் காத்த
எனது ஆடைகளையெல்லாம்
காற்றுவந்து
கழற்றிக் கொண்டது.

ஒரு எறும்பு
ஒரு கொசு
என்னில் இளைப்பாறுவதற்கு
இடமில்லை.

என் -
கண்ணைக் கொத்திக்குடிக்க
அரவங்கள் அரளுகின்றன
என் -
எலும்பை வேட்டையாட
நாய்கள் வட்டமிடுகின்றன.

காக்கை கூட்டங்களும்
நாற்றம் கிளம்பும் நாளை
எண்ணிக் கொள்கின்றன.

என்னுள் நான்
இப்போது இல்லை;

என் இதயத்தைக் கொத்திப்புரட்டி
மரவள்ளி நடலாம்.
அல்லது -
கீரை விதை தூவலாம்.

### 2

வெந்த புண்
ஆறுவதற்குள்
மீண்டும் ஒரு
விஷப்பரு.

என்னில் -
ஒட்டி வாழும்
என் உயிருக்கே
என் மேல் சந்தேகம்.

சோகங்களால் -
கூடாரமடிக்கப்பட்ட
பொஸ்னியாபோல்
நானும்.

இரத்தமும் -
வழி மாறி ஓடுகின்றது.

இதயம் இருக்கும் இடத்தில்
இன்னும் -
சில வினாடிகளில்
துப்பாக்கிச் சன்னம் உறங்கலாம்.

அதற்குள் -
உலகத்தை ஒரு முறை
உயரப்பார்த்து
மண்ணுக்குள் நானே
தலையை புகுத்துகிறேன்.

கவலைப்படாதீர்கள்;
நான் -
*கல்லாகி விட்டேன்.

சும்மா இருந்தாலும்
ஆண்டவன் ஆட்சி
அது;

* மரணம்.

- முகமட் அபார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கு நாடுகளில் தொடரும் பொருளாதார நெருக்கடி

- அநந்தன்

மேற்கு முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார நெருக்கடி எதிர்பார்த்ததைவிட அதிககாலம் நீடிக்குமென்றே தெரிகிறது. கிழக்கு ஐரோப்பாவின் சோவியத் சார்பு ஆட்சிகளின் விழ்ச்சியும் சோவியத் யூனியனின் முடிவும் மேற்கு முதலாளித்துவ நாடுகள் எதிர்பார்த்த பொருளாதார விருத்திக்கு வழி கோலவில்லை.

ஜேர்மன் வலதுசாரி அரசாங்கம் தன் அரசியல் இலாபங்கருதி துரிதமாக மேற்கொண்ட ஜேர்மன் இணைப்பு கிழக்கு ஜேர்மனியினதும் மேற்கு ஜேர்மனியினதும் பொருளாதாரங்கட்குப் பாரதூரமான பிரச்சனைகளை உருவாக்கி விட்டது. ஜேர்மனியின் தொழிலுற்பத்தியின் வீழ்ச்சியும் வேலையின்மை அதிகரிப்பும் ஒரு புறம் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கையில் ஜேர்மன் பணவீக்கத்தைத் தடுத்துநிறுத்துமுகமாக மேற்கொள்ளப்பட்ட வட்டி விகித அதிகரிப்பு பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக மாறிவிட்டது. பணவீக்கத்துக்கும் பொருளாதார தேக்கத்துக்கும் இடையிலான தடுமாற்றம் இன்னமும் ஒழியும் போற்தெரியவில்லை.

பிரான்சின் பொருளாதார நெருக்கடி அண்மைய தேர்தலில் அதன் 'சோஷலிஸ' அரசின் படு தோல்விக்கு காரணமாயிற்று. எனினும் பிரான்ஸின் பொருளாதார நெருக்கடிக்கு காரணமாகவுள்ள அடிப்படையான பிரச்சனை முதலாளித்துவ முறையின் சர்வதேச நெருக்கடியுடன் தொடர்புடையது. இதைத் தீர்க்கும் மருந்து வலதுசாரிகளிடமில்லை.

இத்தாலியின் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் மாஃபியா குற்றச்செயல் கும்பலுக்கும் இத்தாலியின் வலதுசாரி, 'மத்திய நிலை' அரசியற் கட்சிகட்கும் கடந்த 45வருடங்கட்கும் மேலாக இருந்து வரும் ஊழற் கூட்டுப் பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரித்தானிய பொருளாதார நெருக்கடி சற்றே தளர்வது போன்று தெரிந்தாலும் நிலைமைகள் சீர்திருந்த இன்னும் ஒரு வருடமாவது எடுக்கும் எனவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பாவின் பொருளாதார நெருக்கடி தொடரும்வரை பிரித்தானியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி மந்தமாகவே இருக்குமெனவும் கருதப்படுகின்றது. பிரித்தானியாவின் வேலையில்லாதோர் தொகை அதிகாரபூர்வமாக 3 மில்லியனுக்கு அருகில் உள்ளது. உண்மையான தொகை இன்னும் ஒரு மில்லியன் அதிகமாக இருக்கும் என்பது சமூகவியலாளரது கணிப்பு.

அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடியினின்று மீளவும் 'வறுமைக்கோட்டுக்குக் கீழான' நிலையில் உள்ளவர்களின் நலன்களைப் பேணவும் ஜனாதிபதி பில்கிளின்டன் மேற்கொள்ளவிருந்த திட்டம், அவரது ஜனநாயகக்கட்சியைச் சேர்ந்த செனற்றர்களது உதவியுடன், பெரு முதலாளிகளது நலன்களின் பிரதிநிதியான குடியரசுக்கட்சியினரால் முறியடிக்கப்பட்டது. அமெரிக்காவின் கடன் மொத்த அளவு 15 ட்றிலியன் (1500 கோடி) டொலரை எட்டிவிட்டது. இது அதன் வருடாந்த தேசிய உற்பத்தியின் இரண்டரை மடங்காகும்.

ஜப்பானியப் பொருளாதாரத்தின் நெருக்கடி இன்னும் மோசமானது. ஜப்பானிய பங்குச்சந்தையில் சராசரிப் பங்குகளின் விலை 1989 இல் இருந்த உச்ச விலைகளில் அரைவாசிக்கும் கீழாகவுள்ளது. ஆக வர்த்தகத்தை நம்பியுள்ள ஜப்பானியப் பொருளாதாரம் பிற ஆசிய நாடுகளின் போட்டியாலும் மேலை முதலாளித்துவச் சந்தைகளின் நெருக்கடியாலும் அல்லற்படுகின்றது. ஜப்பானியப் பொருட்களின் இறக்குமதிக்கெதிராக அமெரிக்காவில் வலுத்துவரும் குரலும் ஜப்பானிய பொருளாதாரத்தின் நடுக்கத்துக்கு ஒரு முக்கிய காரணம்.

ஏழு முக்கிய முதலாளித்துவ நாடுகளில் இன்னொன்றாகக் கருதப்படும் கனடாவின் பொருளாதாரம் அமெரிக்கப் பொருளாதாரத்துடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளது. இதன் விளைவாக கனடாவின் பொருளாதாரத் தேக்கம் இன்னமும் சில காலம் தொடரும் என்பது உறுதி. ஐரோப்பிய சமூகத்திலும் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் உலகின் பொருளாதார மந்தநிலையினின்று மீள்வதற்காக எடுக்கப்படும் பல நடவடிக்கைகளுள் பொருளாதார விருத்தியில் அரசாங்கம் குறுக்கிட்டு வேலையின்மையைக் குறைக்கும் முயற்சிகளில் இறங்குவதும் உள்ளடங்கும். இவையாவும் தற்காலிக நிவாரணத்துக்கு உதவுமேயாயினும் நீண்டகாலத்தில் பிரச்சனைகள் மேலும் உக்கிரமடையும் சூழ்நிலையே தென்படுகின்றது. இந்த நெருக்கடியின் விளைவாக ஐரோப்பிய நாடுகளில் தீவிர வலதுசாரிகளும், நிறவெறியர்களும், குறுகிய தேசியவாதிகளும் வலுவடைந்துள்ளனர். இது ஒருபுறம், சிறுபான்மை இன மக்களையும் அயல்நாட்டவரையும் நேரடியாகப் பாதிக்கிறது. மறுபுறம், ஐரோப்பிய ஐக்கியத்தைப் பற்றிய நிச்சயமின்மையை அதிகரிக்கின்றது.

முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மூன்றாமுலகின் சுமைகள் அதிகரிப்பதோடு யுத்தங்களும் கலவரங்களும் அதிகரிக்கும் வாய்ப்பு அதிகமாகி வருகின்றது. மூன்றாம் உலகப் போர் மூளாமலேயே மனித குலம் பெரும் அழிவைச் சந்திக்கும் நிலை இன்றைய பொருளாதார நெருக்கடியால் மேலும் மோசமாகியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நூல் அறிமுகம்

# "அபாயம்"

- முகிலன்
புலோலியிலிருந்து..

மனிதன் வாழ்வது யாருக்காக? தனக்காகவா ? அல்லது தான் வாழும் சமூகத்தின் அமைப்புக்காகவா ?அவனுடைய இருப்பு என்பது என்ன ? வாழ்வின் அர்த்தம் தான் என்ன ? அவன் விரும்பிய வாழ்வை அவனால் அவன் விரும்பியபடியே வாழ முடிகின்றதா ? இன்று இவையெல்லாம் வெறும் கேள்விக்குறிகளாகி விட்டன. இயற்கையுடன் இயைந்த அவனின் வாழ்வு பிரித்தெடுக்கப்பட்டு பொய்மையில் திணிக்கப்பட்டுவிட்டது.
மனித மேம்பாட்டுக்கான விஞ்ஞான மனோபாவம் அதிகார வெறிக்கு அடிமையாகி மனித குலத்தையே அழித்து வருகின்றது. ஜப்பானின் ஹிரோஷி மாவும், நாகசாகியும் அறிவியலின் கொடூரத்திற்கு சாட்சியமாகிவிட்டன. ஸ்கட், பேரியாட் ஏவுகணைகள் இன்று புதிதாய் மனித குலத்தை அச்சுறுத்துகின்றன.

இயற்கையிடம் இருந்து அதன் வளங்கள் அத்தனையையும் பேராசையுடன் பறித்தெடுக்கும் கொடூரம் தொடங்கிவிட்டது. பசுமைப்புரட்சி, வெண்மைப் புரட்சி என்ற பெயர்களால் இயற்கையின் கழுத்து நெறிக்கப்பட்டு வானவெளி யும் நீர் நிலைகளும் நஞ்சாக்கப்பட்டு வருகின்றன. மனிதனின் வாழ்வு அச்சமூட் டப் படும் வகையில் ஊசலாடுகின்றது. செர்னொபின் அணுஉற்பத்தி நிலையத் தில் ஏற்பட்ட அணுக்கசிவும், போபாலில் யுனியன் கார்பைட் தொழிற்சாலை இரசாயனக் கசிவும் அதிகார வர்க்கத்தால் மறக்கடிக்கப்பட்டுவிட்டது.

அதிகார வர்க்கத்திற்கு மேற்கூறிய சம்பவங்கள் வெறும் சம்பவங்கள் அல்லது வெறும் விபத்துக்கள்தான். நாட்டுப்பற்று என்ற போதையூட்டி தங்களின் அதிகாரங்களைக் காப்பாற்றிக்கொண்டனர். சம்பவ காலங்களில் பெரிதாகச் சத்தம் போட்ட பத்திரிகைகள், அறிவு ஜீவிகள் மெல்லென அந்த நிகழ்வை, அதனால் பாதிக்கப்பட்ட மக்களை மறந்து விட்டனர்.

அந்த அப்பாவி பாவப்பட்ட மக்களின் உடல் உள உபாதைகளை யார் மதித்தனர்? வெறும் விசாரணைக் கமிசன்கள் தீர்வாகுமா ? இறந்தவர்கள் புண்ணியம் செய்தவர்கள் என்று கூறுமளவுக்கு பாதிப்புற்று வாழ்பவர்களின் உபாதைகள் எம்மை மிரட்டுகின்றன. அந்த மனிதர்கள் என்ன தவறு செய்தார் கள்? நாகரீக, விஞ்ஞான உலகில் வாழ்ந்ததுதான் அவர்கள் செய்த தவறா ?

இப்படி மறக்கடிக்கப்பட்ட மக்களின் மனோ நிலையை சித்தரிக்கும் ஃப்ளெமிஷ் மொழி நாவல்தான் ஜோஷ் வண்டேலூவின் "அபாயம்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நாவல் வெறும் கதை சொல்லல் என்பதல்ல. எந்தப் பாத்திரங்களும் முழுமையாகப் படைக்கப்படவுமில்லை. நாவலின் ஆரம்பத்திலேயே முடிவு எமக்குச் சொல்லப்பட்டு விட்டது. விஞ்ஞானத்திற்குப் பலியான மூன்று அப்பாவிகளின் கதையாடலே இந்த நாவல். அவர்களின் ஆசைகள் யாவும் நொருக்கப்பட்டு வெறும் பரீட்சார்த்தப் பொருட்களாக்கப்பட்ட கொடுமைகளை நாவலில் நாம் தரிசிக்கின்றோம். இந்த அவலங்களுக்குக் காரணமான எவரையும் நாம் நாவலினுள் காணமுடியவில்லை. அவர்கள் வெளியே அமைதியாக இருக்கிறார்கள்.

மாட்டீன் மொலினார், அல்பிரட்பென்டிங், நுபோன் மூவரும் ஒரு அணுத் தொழிற்சாலையில் வேலை செய்கின்றார்கள். ஒரு நாள் அங்கு ஏற்பட்ட சிறு தவறினால் அணுக்கதிர் வீச்சுக்கு ஆளாகின்றார்கள். மூவருக்கும் வைத்திய சாலையிலும், பின் வைத்தியக்கல்லூரி பரிசோதனை நிலையத்திலும் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. முடிவில் மூவரும் இறக்கின்றனர். இடையில் நுபோனும், பென்டிங்கும் சிகிச்சை நிலையத்தில் இருந்து தப்பிவிடுகின்றனர். இது தான் கதை.

அபாயம் என்பது மனிதனைச் சுற்றி வளர்ந்துவிட்டது. அணுக்கதிர் வீச்சுத்தான் தேவையென்பதல்ல. வேறு ஏதாவதொன்று மனிதனின் வாழ்வை அழிக்க காத்திருக்கின்றது. அந்த அபாயவலை அவன்மீது அவன் அறியாமலேயே வீசப்பட்டு விட்டது.

சூழலுக்கு எப்படி மனிதன் பழக்கப்பட்டு விடுகிறான் என்பதை சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்படும் மூவரும், அதன் அருகே ஓடும் ரயிலின் ஓசையினால் வேதனைப்படுவதன் மூலம் வெளிக்கொணரப்படுகின்றது. பின் நாட்கள் செல்லச்செல்ல அந்த ஓசை அவர்களிடம் எந்தப்பாதிப்பையும்

ஏற்படுத்தவில்லை. அவர்கள் அதற்குப் பழக்கப்பட்டு விட்டனர். இப்படித் தான் மனிதன் அதிகார வர்க்கத்தினால் ஒரு கொடிய வாழ்க்கை அமைப்புக்குள் வீழ்த்தப்பட்டு சுயாதீனத்தை இழக்கின்றான்.
நாட்டுக்காக, சமூகத்திற்காக அவற்றின் உயர்வுக்காய் உழைத்த இந்த மூவரும் அந்த உழைப்புக் கொடுத்த பலனால் சமூகத்திற்கு வேண்டப்படாத அபாயமானவர்களாகின்றனர். எந்த அமைப்புக்காக உழைத்தார்களோ அந்த சமூகத்திடமிருந்து வெறுப்பு ஒன்றைத்தான் அவர்களால் பெறமுடிந்தது.

மனித இழப்பு என்பதெல்லாம் சமூகத்திற்கு ஒரு சம்பவமாகவே இருக்கின்றது. இழப்புக்கள் மற்றவர்களுக்கு இடைஞ்சல் தரும்-அலுப்புத்தரும் ஒரு சம்பவமாகின்றது என்பதை இரயிலில் நினைவிழந்து பென்டிங் வீழ்ந்ததினால் ஏற்படும் பரபரப்பு, தவிப்பு சகபிரயாணிகளிடம் நடக்கும் உரையாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

மார்டீன் தன் விதி இதுதான் என்றுணர்ந்து சிகிச்சை நிலையத்தில் இருந்தே தன் மரணத்தை வரவேற்கிறான். ஆனால் நுமேனும், பென்டிங்கும் சிகிச்சை நிலையத்தில் இருந்து தப்பி ஓடுகின்றார்கள். தம் மரணத்தை வெல்ல. ஆனாலும் அதை அவர்களால் வெல்ல முடியவில்லை. ஆனால் விதிக்கு எதிராகப் போராட்டம் நடத்திய ஆத்ம திருப்தி அவர்களுக்குக் கிடைக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

" என்னுடைய மனைவி கவலைப் பட்டுக்கொண்டிருக்கலாம். அவளுக்கு எல்லா விஷயங்களையும் எச்சரிக்கையுடன் தெரிவித்துக் கொண்டிருப்பார்கள்" என்று நுமேன் கூற அதற்கு பென்டிங் " கவலைப்படாதே சமூக சேவை அமைப்பு மிகச்சிறப்பாகச் செயற்படுகின்றது. தான் விதவையாவதற்கு தயார் செய்து கொள்ளவேண்டும் என்பதை அவள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தெரிந்து கொள்வாள்" என்றான். ஆய்வுகூட முயல்களாகப் பயன்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு எரிச்சலடைகின்றான். நீயும் உன் மொட்டை உணர்ச்சிகளும் என்று சிடுசிடுக்கின்றான். நுமேன் ஒரு கிழ நாயைப்போல இந்த அறையில் சாக நான் விரும்பவில்லை. என்கின்றான். "பென்டிங் எனக்கு வேண்டியதெல்லாம் அமைதியாக வாழக்கூடிய ஒரு சிறிய இடம். அமைதியான தொந்தரவற்ற இடம். பச்சை இலைகளால் ஆன ஒரு படுக்கையுடன் கூடிய முடங்கிக்கொள்ள ஒரு கதகதப்பான சிறிய வளை. ஓடிஸியஸ் கடலில் இருந்து வந்தபோது கிடைத்ததுபோல் மிகச்சாதாரணமான ஒரு இடம்.

மனிதன் இந்த அபாய வாழ்வில் இருந்து தப்பிக்கொள்ள எவ்வளவு பிரயத்தனப்படுகின்றான் என்பதை நாவல் அழகாகச் சொல்லி வைக்கின்றது.

உரையாடல்கள், நடை யாவும் ஒரு நல்ல நாவலுக்கான தகுதியை அபாயத்திற்குக் கொடுக்கின்றது. மனித வாழ்வின் அபாயத்தை குறியீடாய்க் கொண்டுள்ளது நாவல். மூல ஆசிரியரின் உணர்வு குன்றாமல் என். சிவராமன் மொழியாக்கம் செய்துள்ளார். இவரின் "சுவர்கள்" என்ற அறிவியற் கட்டுரைத் தொகுதி எண்பதுகளின் தொடக்கத்தில் வெளிவந்தது. நல்ல புத்தகங்களை தமிழுக்குத் தந்து கொண்டிருக்கும் க்ரியாவின் வெளியீடு இந்த நாவலும். ■

## உங்களோடு....

சொல்லித்தெரிவதல்ல சிறுசஞ்சிகைகள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியும். ஒவ்வோரு ஓசையும் மிகப்பெரிய போராட்டம்தான்.

தரமான சிற்றிதழ்களைச் "சாகவிடுதல்" என்பது சமுதாயத்திற்குப்பாரிய இழப்பு. எத்தனை பேரால் உணர்ந்து கொள்ளமுடியுமோ ?
அதேவேளை ஓசை ஓர் தரமானஇதழ் என்று நாங்களே முத்திரை குத்திக்கொள்ளவுமில்லை.
ஓசை சமூகப்பயன்பாடுடையது, தேவையானது,
எனக்கருதின் வளர்த்தெடுங்கள்.
உங்கள் கைகளில்....
- ஓசை -





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூழல் மாசடைதல் தொடர்பாக..

- சி. சிவசேகரம்

சூழலின் மாசுபடல் என்ற பிரச்சனை தொழில் அபிவிருத்தியின் தொடக்க நிலையையடுத்து உணரப்பட்டுள்ளது. அந்தக் காலகட்டத்தின் மாசுபடலும் இன்றையதும் அளவிலும் தன்மையிலும் மிகவும் வேறுபட்டவை.

தொழில் அபிவிருத்தியின் தொடக்கநிலையில் பெருந்தொழில்கள் பல உற்பத்தியினதும், விநியோகத்தினதும் தேவைகளால் அருகருகாக அமைய நேரிட்டது. அவற்றின் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் உள்ள பிரச்சனை தொழில் அபிவிருத்தியுடன் பெருகியது. தொழிற்சாலைகள் நகரங்களை அடுத்தே அமைந்த காரணத்தால், சனத்தொகை அதிகமான இடங்களின் மாசுபடல், ஒருபுறம் சனப்பெருக்கத்தின் விளைவாகவும் மறுபுறம், அதைவிட முக்கியமாகத், தொழிற்சாலைகளின் கழிவுப்பொருட் பெருக்கத்தாலும் உக்கிரமமாயிற்று. இதன் விளைவான பிரச்சனைகள் பலவகைகளிலும் உணரப்பட்டன. எளிதாகவே அடையாளங்காணப்பட்ட இவ்வகையான மாசுபடலைத் தீர்க்க காலப்போக்கில் தொழிற்சாலைகள் படிப்படியாக பெரும்நகரங்கட்கு கொஞ்சத்தொலைவான இடங்கட்கு நகர்த்தப்பட்டன. நகரங்களின் அசுத்தத்திற்குக் காரணமான நிலக்கரி எரிப்புக்குத் தடை விதிக்கப் பட்டது. நீர் விநியோகமும் வடிகால் வசதிகளும் முன்னேற்றப்பட்டன. மின்சாரத்தின் வருகை நகரங்களின் சுத்தத்துக்குப் பலவகையிலும் உதவியது.

எவ்வாறாயினம் சூழலின் மாசுபடற் பிரச்சனையைத் தீர்க்க, அசுத்தங் களை மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களினின்று அகற்றுவதே மார்க்கமாகக் காணப்பட்டது. நீர் நிலைகளிலும், நீரோடைகளிலும் கழிவுப்பொருட்களைக் கொட்டுவதன் விளைவுகள் படிப்படியாக உணரப்பட்டன. இதன் விளைவாக நச்சுப்பொருட்களைக் கடலில் கொட்டும் நடைமுறை விரிவடைந்தது. திண்மப் பொருட்கள் மண்ணுள் ஆழப்புதைக்கப்பட்டன. அவற்றை எரிப்பதும் இன்று பரவலாகி வருகிறது. வாயுக் கழிவுப்பொருட்களை உயரமான புகைபோக்கிகள் மூலம் வளிமண்டலத்தில் சிதறச் செய்யமுடிகிறது. அதேசமயம் கழிவுப்பொ ருட்களின் நச்சுத்தன்மை பற்றிய அறிவும், அவற்றைக் கையாள்வதற்கான தொழில் நுட்பமும் பெருகியதன் விளைவாகச் சில தொழிற்சாலைக் கழிவுப் பொருட்களின் நச்சுத்தன்மை குறைக்கப்பட்டுள்ளது.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் தொழில்வளர்ச்சிக்கும், விவசாயம், மீன்பிடி, பண்ணைத் தொழில் போன்ற துறைகளின் வளர்ச்சிக்கும், உதவிய தன் மூலம் உற்பத்தியை பெருக்கின. இவ் வளர்ச்சியின் விளைவாகச் சுற்றா டல் மேலும் மாசுபட ஏதுவாயிற்று. அதற்கான தீர்வுகளையும் விஞ்ஞானத்தின் மூலமும் தொழில் நுட்பத்தின் மூலமுமே தேடவேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஞ்ஞானத்தாலும், தொழில்நுட்பத்தாலும் மனிதர் உருவாக்கிய ஒரு பிரச்ச னைக்குத் தீர்வுகளை வழங்க உதவ முடியுமேயொழியத், தம்மளவில் தீர்வுகளாகி விடமுடியாது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மனிதசமுதாயத் தின் கையிலுள்ள கருவிகளே. அவற்றை ஒரு சமுதாயம் எவ்வாறு பிரயோகிக் கிறது என்பது அச் சமுதாயத்தின் தன்மையாலும், குறிப்பாக, அச்சமுதாயம் யாருடைய நலனுக்காக செயற்படுகிறது என்பதாலும் தீர்மானிக்கப்படுகிறது. எனவே, என்றும் போல், இப்பிரச்சனையிலும் விஞ்ஞானமும் தொழில்நுட்ப மும் அரசியலினின்று பிரிக்க முடியாதவையாகின்றன.

சூழலின் மாசுபடலுக்கான முக்கிய காரணங்களுள் மனிதநுகர்வின் தன்மையும் அதன் பரிமாணமும் அடங்கும். மனிதரது அத்தியாவசியத் தேவை கள் எத்தன்மையானவை எவ்வாறு நிறைவேற்றப்படக்கூடும் என்பது பற்றிய அடிப்படையான கேள்விகள் காலத்துக்குக் காலம் எழுந்துள்ளன. அவை கடுமையான விவாதங்கட்கு காரணமாகவும் இருந்துள்ளன. இன்று அவை மனித இருப்புத் தொடர்பான கேள்விகளாக வளர்ந்து விட்டன.

மனிதரது தேவைகளை நிறைவு செய்ய அவசியமான மூலவளங்களான கனிப்பொருட்களும், மண்வளமும் நீரும் காற்றும் வரையறையற்றவை என்ற அடிப்படையிலேயே நெடுங்காலமாக மனித நுகர்வு விருத்தியடைந்து வந்தது. கனிப்பொருட்களதும் மண்வளத்தினதும் போதாமை பற்றிய உணர்வு ஏற்பட்டு வெகுகாலத்தின் பின்னரே இயற்கை வழங்கும் நல்ல நீரும் சுத்தமான காற்றும் என்றென்றும் நிலைக்கக்கூடியன அல்ல என்ற உணர்வு உருவாகியுள்ளது. விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் மூலவளங்களை அதிக விளைபயனுடன் பாவிக்க உதவியதன் மூலம் மூலவளங்களின் பற்றாக்குறை பற்றிய நெருக்கடி ஓரளவு குறைக்கப்பட்டது உண்மை. அதே வேளை மனிதரது விஞ்ஞான அறிவும் தொழில்நுட்பமும் சமுதாயத் தேவைகளையொட்டியே நிவர்த்திபெற்று வந்ததால் அவற்றின் முனைப்பு அவை சார்ந்த சமுதாய அமைப்பாலேயே தீர்மானிக்கப்பட்டது. விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் மனித சமுதாயத்தின் சகல எதிர்காலத் தேவைகளையும் நெருக்கடிகளையும் முன்கூட்டியே உணர வல்லனவாக இருக்க அவசியமில்லை, அது சாத்தியமுமில்லை. ஆயினும் மனிதரது தேவைகட்கும் அவர்களை எதிர்நோக்கம் நெருக்கடிகட்கும் தீர்வு களை அவை முன் வைக்கின்றன. அந்தத் தீர்வுகள் புதிய தேவைகளாகவும் புதிய நெருக்கடிகளாகவும் வளரக்கூடும். இவையாவும் மனித நடைமுறையின் எல்லைகட்குள்ளேயே தீர்வை நாடுகின்றன.

சுற்றாடலின் இன்றைய நெருக்கடிக்கான முழுப்பொறுப்பையும் சமுதாய அமைப்பின் மீதும் உற்பத்தி உறவுகளின் மீதும் சுமத்திவிட முடியாது. மனித அறிவின் போதாமையும் மனிதருக்கும் அவர்களது சுற்றாடலுக்குமுள்ள முரண்பாடு பற்றிய தெளிவீனமும் பிரச்சனையின் முக்கியமான பகுதிகள். ஆயினும், மனிதச் சூழல் பற்றிய பிரச்சனை உக்கிரமாவதற்கு மனித சமுதா யத்தை ஆதிக்கம் செய்யும் உற்பத்தி உறவுகளின் பங்களிப்பு அதி முக்கியமா னது.

முதலாளித்துவத்தின் வளர்ச்சி நகரச்சுற்றாடலின் மாசுபடலுக்குக் கார ணமாயிற்று. முதலாளித்துவம் வளர்ந்து ஏகாதிபத்தியமாகி இன்று இது பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் முழு உலகையும் ஆதிக்கஞ் செய்கிற நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில், அதன் வளர்ச்சி முழு உலகின் சுற்றாடலினதும் நெருக்கடிக்குக் காரண மாகி விட்டது. இன்று சூழலின் மாசுபடலுக்குக் காரணமாகக் கருதப்படும் சில விஷயங்களையும் அவை தொடர்பாக முன்வைக்கப்படும் தீர்வுகளையும் கவனிப்போம்.

பல நச்சுவாயுக்களின் பெருக்கம் அதன் உடனடியான சூழலிலேயே பாதிப்பை உண்டாக்குகிறது. ஆனாலும் அமிலமழைக்கு காரணமான சல்பர் ஈரோட்சைட்டும், நைதரசன் ஒட்சைட்டும் வளிமண்டலத்தில் உயரப்பரவுவதால் அமிலமழை ஒரு அயல் நாட்டைப் பாதிக்கும் நிலை ஏற்படுகின்றது. இங்கிலாந் தின் மின் உற்பத்தி நிலையங்கள் உமிழும் வாயுக்கள் ஸ்கன்டினாவியா நாடுக ளைப் பாதித்ததை நாம் அறிவோம். இது போன்றே அணுமின் நிலையம் ஒன்றில் ஏற்படும் விபத்து வெகுதொலைவில் இருந்த நாடுகளைப் பாதித்தமை பற்றி செர்னொபில் விபத்தின் பிற்பாடு அறிந்தோம். இவ்வாறான பிரச்சனை கள் சர்வதேசத் தன்மை பெற்றமை முதலாளித்துவ உற்பத்தியின் கட்டற்ற வளர்ச்சியுடன் தொடர்புடையது.

கழிவுப் பொருட்களைக் கடலில் கொட்டுவதன் விளைவுகள் கடல்வாழ் உயிரினங்கட்கும் மீன்பிடி போன்ற தொழில்களில் ஈடுபட்டோரது வாழ்வையும் பாதித்தமை பற்றியும் அண்மைக்காலங்களில் அதிகளவில் அறிகின்றோம். ஆயினம், கழிவுப் பொருட்களைப் புதைக்க வழியில்லாத போது முதலாளித் துவ நாடுகள் அவற்றைக் கடலில் கொட்டுவது தொடர்கிறது. இது பிற முதலாளித்துவ நாடுகளைப் பாதிக்கும் போது பிரச்சனை முக்கியத்துவம் பெறுகிறது. அல்லாதவிடத்துச், சுற்றாடல் பற்றி அக்கறையுடைய சமுதாய இயக்கங்கள் மட்டுமே இது பற்றிக் கரிசனை காட்டுகின்றன.

நச்சுத்தன்மையுடைய கழிவுப் பொருட்களை மூன்றாமுலக நாடுகளில் கொண்டுபோய்ப் புதைக்கும்நடவடிக்கைகள் பல அண்மையில் அம்பலப்படுத் தப்பட்டன. இத்தாலியின் நச்சுக் கழிவுப் பொருட்களை நைஜீரியாவுக்குக் கொண்டு சென்ற கப்பலைப்பற்றி இரண்டு வருடங்களுக்கு முன்பு எழுந்த பிரச்சனை பிரச்சனையைப் பலரும் அறியக்கூடும். இவ்வாறான நச்சுப்பொருட் களைக் கையாளத் தொழில்நுட்பமும் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யவல்ல வசதிகளும் கழிவுப் பொருட்களை ஏற்கும் மூன்றாமுலக நாட்டில் உள்ளனவா என்ற கவலை அவற்றை அங்கு அனுப்புவோருக்கும் இல்லை, அவற்றைப் பெறும் நாடுகளின் ஊழல் மிகுந்த அடக்குமுறை ஆட்சியாளர்கட்கும் இல்லை.

முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் எஜமானர்களைப் பொறுத்தவரை இப்பிரச்சனையைத் தமது தேசிய எல்லைக்கு அப்பால் கடத்துவதுடன் அவர்களது பிரச்சனை தீர்ந்து விடுகின்றது. சூழலை மாசுபடுத்தும் கழிவுப் பொருட்களை உமிழும் தொழில்களின் துணைவிளைவுகளை அகற்றுவதும் லாபநோக்கத்திற்குக் கேடாகுமானால் அத்தகைய தொழில்களை அவை பற்றிய பிரச்சனை இல்லாத ஒரு மூன்றாமுலக நாட்டில் நிறுவ அவர்கள் தயங்க மாட்டார்கள்.

அதேவேளை, தமது லாபநோக்கத்திற்கு அவசியமான நுகர்வின் பெருக்கத் தின் விளைவுகள் பற்றி அவர்களது நோக்கு வேறுவிதமானது. மோட்டார் வாகனங்களும் எண்ணெய் அல்லது கரி அல்லது வாயுவை எரிக்கும் மின்சக்தி நிலையங்களும் உண்டாக்கும் காபநீரொட்சைட்டு ஏற்படுத்தப் போகின்ற பயங்கரம் பற்றி அவர்கள் அசட்டையாகவே உள்ளனர். முடிந்தவரை, இவ்வாறான பிரச்சனை இருப்பதை அவர்கள் அங்கீகரிக்க மறுக்கின்றனர். இது ஒரு பிரச்சனையாக உருவெடுக்கும் என்று சிலர் அங்கீகரித்தாலும் அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்வைக்கும் தீர்வுகள் விநோதமானவை. மூன்றாமுலக நாடுகள் தமது நுகர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று மூன்றாமுலகின் சனத்தொகை அதிகரிப்பும் தொழிலபிவிருத்தியுமே முக்கியமான பிரச்சனைகள் என்ற விதமாக விவாதத்தை திசை திருப்புவது புதியதல்ல.

ஒஸோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள விரிசல் பற்றியும் அதற்குக் காரணமான வாயுக்களில் CFC எனப்படும் பதார்த்த வகைகள் முக்கியமானவை என்பது பற்றியும் விஞ்ஞானிகள் சொன்னதை முதலாளித்துவம் தொடர்ச்சியாக மறுத்து வந்தது. அந்த அபாயம் இன்று ஆதாரபூர்வமாக நிறுவப்பட்டு, அதன் விளைவாக சருமப்புற்றுநோய் முக்கியமாக வெள்ளைத்தோலுடையவர்களை அதிகம் பாதிக்கும் என்று காட்டப்பட்டபின், அதுபற்றி அக்கறையுடையதாக முதலாளித்துவம் பாசாங்கு செய்கிறது. இதற்குத் தீர்வாக, மூன்றாமுலக நாடுகள் CFC யைப் பாவிப்பதையும் உற்பத்தி செய்வதையும் குறைக்க வேண்டு மென்று முதலாளித்துவநாடுகள் வலியுறுத்துகின்றன. தமது நாடுகளில் உள்ள நுகர்வு பற்றி போதிய நடவடிக்கை எதுவுமே எடுக்காமல் CFCக்கு மாற்றாகப் புதிய தொழில்நுட்பத்தை விருத்தி செய்து அதை நட்டமற்ற முறையில் மூன்றாமுலக நாடுகள் பெற வழிசெய்யத் தயங்குகின்ற வலிய முதலாளித்துவ நாடுகள் உலகவங்கி போன்ற ஸ்தாபனங்கள் மூலம் பல வகைகளில் மூன்றா முலக நாடுகளைநெருக்குகின்றன.

இதுமட்டுமன்றித் தடையற்ற வர்த்தக உறவுகள் என்ற பேரில் மூன்றாமுல கில் தமது சந்தைகளை விருத்தி செய்து அதன் மூலம் மூன்றாமுலகின் நுகர்வையும் கழிவுப்பொருட்களின் அளவையும் பெருக்க முற்படுகின்றனர். ஒவ்வொரு அதிவேக உணவுச்சாலையும் கொக்கா கோலா போன்று தகரத்தில் அடைக்கப்பட்ட பானங்களை விநியோகிக்கும் நிறுவனமும் எறியக்கூடிய பிளாஸ்டிக் உறைகளில் அடைக்கப்பட்ட பண்டங்களின் விற்பனை நிலையமும் பல வழிகளில் விரயத்தையும் சூழலின் மாசுபடலையும் ஊக்குவிக்கின்றது. மேற்கு நாடுகளில் இப்பிரச்சனையின் தீர்வு என்ற பேரில் பழைய தகரங்களை யும் காகிதத்தையும் பிளாஸ்டிக் பைகளையும் போத்தல்களையும் கண்ணாடி யையும் மறுபாவனைக்குட்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பிரச்சனையை அதன் தோற்றவாயிலேயே தவிர்ப்பதற்கான வழிவகைக ளைத் தேடாமல், இவ்வாறான போலிச் சிக்கனத்தையும் குப்பைகளின் பெருக்கத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் முதலாளித்துவம் நாடுகின்றது.

உதாரணமாக காடுகளை அழிப்பதைத் தாங்கள் விரும்பாததால் பிளாஸ் டிக் பைகளை ஊக்குவிக்கிறதாக ஒரு நிறுவனமும் பிளாஸ்டிக்கினால் சூழல் மாசுபடுவதைத் தாங்கள் விரும்பாததால் காகிதப் பைகளை ஊக்குவிப்பதாக இன்னொன்றும் சொல்லிக்கொள்ளும் அதே வேளை இரண்டுமே குப்பைகளின் பெருக்கத்துக்கு வழி வகுக்கின்றன. இதன் அடிப்படையான காரணம், முதலாளித்துவம் தன் இருப்புக்குத் தடையற்ற நுகர்வைச் சார்ந்து இருக்கின்றது என்பதே. முதலாளித்துவத்தின் லாப நோக்கமும் ஏகபோக முதலாளித்துவத் தின் கீழ்த்தொடரும் வியாபாரப் போட்டியும் கழுத்தறுப்பும் மனிதரது அத்தி யாவசியத் தேவைகளை நிறைவு செய்வதைவிட நுகர்வைப் பெருக்குவதிலேயே கண்ணாகவுள்ளன. எனவே தமது லாபக நோக்கத்திற்கு ஊறு ஏற்படாதவித மாகவே தீர்வுகளை நாடுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உற்பத்தியும் பொருளாதாரமும் சந்தையாலேயே ஆளப்பட வேண்டும் என்ற முதலாளித்துவக் கருத்தின் விளைவுகளைச் சமுதாயம் பலவகைகளிலும் கண்டுள்ளது. உலக முதலாளித்துவத்தின் இன்றைய நெருக்கடியினின்று எளிதான தீர்வு இல்லாதது போன்று சுற்றாடலின் நெருக்கடிக்கும் எளிதான தீர்வு இல்லை. முதலாளித்துவத்தின் வரையறைகட்குள் நாம் தேடும் தீர்வுகள் பிரச்சனையின் அடிப்படையான காரணத்தை நிராகரித்துப் பரிகாரம் தேடுவன மட்டுமல்லாது தீர்வுக்குத் தடையாக உள்ள அமைப்பை அகற்ற மறுப்பன. இந்தவகையில் இவை நெருக்கடியை மேலும் உக்கிரமாக்குவன.

முதலாளித்துவம் வலியுறுத்தும் தீர்வுகள் மூன்றாமுலகை மேலும் வறுமைக்கு ஆளாக்கும் அதே வேளை முதலாளித்துவ நாடுகளில் இருக்கும் பிரச்சனையைத் தீர்க்க இயலாதவை. இதன் விளைவாக மேலும் யுத்தங்களும் அழிவுகளும் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. முதலாளித்துவ நாடுகளில் உள்ள சமுதாய உணர்வுமிக்க சக்திகளையும் உலகின் சகல ஒடுக்கப்பட்ட மக்களையும் ஒன்றுபடுத்தும் ஒரு பிரச்சனை மனிதச் சுற்றாடலின் பிரச்சனையாகும். இந்த ஐக்கியம் செயல்வடிவம் பெறும்போது மனித இருப்பின் எதிர்காலம் மனித சமத்துவத்தின் அடிப்படையில் ஒரு தெளிவான முனைப்பைக் காணமுடியும். மனித சமுதாயத்தின் நலனை வலியுறுத்தும் ஒரு கண்ணோட்டத்தின் கீழன்றி எவ்விதமான விஞ்ஞான அறிவும் தொழில் நுட்பமும் மனித இனத்தின் இருப்பையும் நலனையும் உறுதிப்படுத்த முடியாது. □

## கிடைக்கப்பெற்றோம்

**ஒருமனிதன்**
கவிதைத்தொகுதி
சு. கருணாநிதி
றஜனி பதிப்பகம்
*79, Ave. Des. M. de Chateaubriant,*
*93700 Drancy,*
*France.*

**சிதறல்**
கவிதைத்தொகுதி
திவ்வியா
*Thiviyanathan. selvadurai*
*12, Rue de Panama,*
*75018 Paris.*

**காலம்**
கலை இலக்கிய இதழ்
3479. St. Clair Ave. E, #302
Scarbourg, Ont, M1K 1L2
Canada.


**ஆகவே**
கலை இலக்கிய இதழ்
M. I. A. Jabbar
71, Rajawarodhayam Road,
Trincomalee,
Sri Lanka

**அவுஸ்திரேலிய முரசு**
கலை இலக்கியஇதழ்
P. O. Box 486, Moorabain
Victoria 3189
Ausrralia



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பலிக்களம்

நெருக்கடியான இன்றையகாலகட்டத்திலும் பாரிய கலைமுயற்சிகளை மேற்கொண்டுவரும் இலங்கைத்திருமறைக்கலாமன்றம் தனது பணியினை எம்மவர் வாழும் மேற்கு நாடுகளுக்கும் விஸ்தரித்திருப்பது மகிழ்ச்சியான விடயம்.
இதன்வெளிப்பாடாக 11. 04. 1993 ல் பலிக்களம் வரலாற்று நாடகம் பாரிஸ் அரங்கில் மேடையேற்றப்பட்டிருக்கிறது. மிகவும் பிரமாண்டமான தயாரிப்பு. - இலங்கையில் பலதடவைகள் மேடையேற்றப்பட்ட அருட்திரு. மரியசேவையர் அவர்களின் நாடகத்தை திரு. தூரி அவர்கள் இயக்க 26க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பகுபற்றியிருந்தனர்.
யேசுநாதரை சிலுவையில் அறையும் காட்சி பார்வையாளர்களை மெய்சிலிர்க்க வைத்தது. வரலாறு தெரியாதவர்களுக்கு கதை புரியாமற்போனது நாடகத்தின் முக்கிய குறைபாடாகக் கொள்ளலாம். ஒளிஒலி அமைப்பு, காட்சியமைப்பின் சிறுசிறு குறைபாடுகளெல்லாம், பாரிஸில் முற்தடவை இவ்வகையான ஒரு பிரமிக்கத்தக்க முயற்சி என்ற வகையில் அடிபட்டுப்போனது.
இரண்டரை மணிநேரமும் பாரிஸ் தமிழ் நாடகரசிகர்களை அசையாது வைத்திருந்தமை நாடகத்தின் வெற்றியெனலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மா

- வண்ணநிலவன்

பாரம்பரியம் என்று பார்த்தால் அம்மா ஏழுஊர் வம்சத்தைச் சேர்ந் தவள்தான். வாழவல்லான், சேது வாய்க்கால், ஆலந்தா, சிங்கத்தா குறிச்சி, விட்டிலாபுரம், அனவரத நல்லூர், தாதன்குளம் என்ற முன் னாள் திருநெல்வேலி மாவட்டத் தைச் சேர்ந்த ஏழு ஊர்களுள் ஒன் றான அனவரத நல்லூரைச் சேர்ந் தவள் அம்மா. எங்கள் குடும்பங்க ளுக்குள் இந்த ஏழு ஊர்களுக்குள் தான் பெண் கொடுக்கல் வாங்கல் எல்லாம் நடைபெறும். அப்பாவுக் குத் தாதன்குளம்.

அம்மாவைப் பற்றி நான் கேள் விப்பட்ட ஒரு செய்தி - அது தான் எனக்கு நினைவு தெரிந்து என் மனதில் பதிந்த முதல் செய்தி -தார்மீகமும், தீரமும் நிரம்பியது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டது ஆச்சியின் மூலமாகத்தான். ஆச்சி தன் மருமகளான அம்மாவின் மீது ஏற்படும் கோபதாபமான தருணங் களில் தவறாது அந்த விஷயத்தைச் சொல்லி அம்மாவை இடித்துக் காட் டுவாள். ஆச்சியின் பார்வையில், ஒரு பெரிய வீட்டுக்கு மருமகளாக வந்திருக்கிற ஒரு பெண் இப்படிப் பட்ட காரியத்தைச் செய்யலாமா என்ற ஆதங்கமும், குடும்ப கௌ ரவம் குலைந்து போனது போன்ற வருத்தமும் நிரம்பியிருக்கும். ஆனால் அந்த விஷயம் அப்படிப் பட்டதல்ல.

நான் அம்மாவின் வயிற்றிலிருந்த போது எங்கள் சொந்த ஊரான தாதன்குளத்தில், அம்மாவுக்குப் பழக்கமான தாழ்த்தப்பட்ட வகுப் பைச் சேர்ந்த பெண் ஒருத்தி, தன் குடும்பத்தில் ஏற்பட்ட ஏதோ சச்ச ரவின் காரணமாகத் தன் வீட்டில் தூக்குப் போட்டுக்கொண்டு இறக்க முயற்சித்தாள். வீட்டிலிருந்த அம் மாவுக்கு இந்த விஷயம் காதில் விழுந்ததும், ஓடிப்போய், இன் னொரு பெண்ணின் உதவியுடன், கயிற்றில் அரைகுறையாக குற்றுயி ரும் குலையுயுருமாக உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அந்தப் பெண்ணைக் கீழே இறக்கிக் கர்ப் பாற்றியிருக்கிறாள். ஒரு கர்ப்ப ஸ்திரி இதுபோன்ற ஒரு காரியத் தைச் செய்திருக்கவே கூடாது என் பது ஆச்சியின் கட்சி.

அம்மாவுக்குப் பயமென்றால் என் னவென்றே தெரியாது. நான் சந் தித்த பெரும்பாலான பெண்கள் துணிச்சலானவர்கள்தான். இப் போது தோன்றுகிறது -ஆண்களை விடப் பெண்கள்தான் இயற்கையி லேயே மிகுந்த துணிச்சலானவர்கள் என்று. நான் பல சந்தர்ப்பங்களில், பல பெண்களின் தைரியத்தைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்துப் பிரமித்துப்போயிருக்கிறேன். இந்தத் துணிச்சல் அம்மாவிடம் அபாரிதமாகவே உண்டு. எந்த ராத்திரியிலும் அம்மாவால் தன்னந்தனியாகப் போகமுடியும். எந்தச்சூழ்நிலையிலும் எதிர்த்துநின்று போராடும் அசாதாரணமான மனதிடம் அம்மாவின் விசேஷச் சொத்து என்றே சொல்லவேண்டும்.

60- க்களின் மத்தியில் மிகுந்த செல்வாக்காக இருந்து வந்த குடும்பம் முற்றிலும் அதலபாதாளத்துக்கு வந்துவிட்டது. அப்பாவுடைய தான்தோன்றித்தனமான போக்கினால் குடும்பம் நிர்மூலமாகிவிட்டது. நான் பள்ளிப் படிப்பைக் கூட முடிக்கவில்லை. மூன்று தங்கைகளும் படித்துக்கொண்டிருந்தார்கள். விவரம் அறியாத பிள்ளைகள். அப்பாவுக்கு வேலை இல்லை. ஊரிலிருந்த சொத்துக்கள் எல்லாம் கரைந்துபோய் விட்டன. சொந்தக்காரர்கள் எவரும் ஏனென்றுகூடக் கேட்கவில்லை, செல்லம்மா அத்தை தவிர. ஒருவேளைச் சாப்பாட்டுக்கே வழியில்லாத நிலை.

இதுபோன்ற ஒரு சூழ்நிலையில் யாராக இருந்தாலும் இடிந்து போயிருப்பார்கள். இன்னொரு நல்லதங்காளாக நேர்ந்திருக்கும். ஆனால், அம்மாவின் மனவலிமை அசாதாரணமானது. சற்று வசதியாக இருந்து வந்த வீட்டை விட்டு, பாளையங்கோட்டையின் ஒதுக்குப்புறத்தில் அப்போதுதான் உருவாகி வந்த சிறு குடிசைப்பகுதிக்கு குடும்பத்தைக் குடிபெயர்த்துக் கொண்டு போனாள். அதுவரை குடும்பத்தைத் தவிர வெளி உலகத்தையே அறிந்திராத அம்மா ' பெல்பின்ஸ் ' கம்பனிக்கு வேலைக்குப்போக ஆரம்பித்தாள். ஆறுபேர் கொண்ட குடும்பத்துக்கு அம்மாவின் இரண்டு ரூபாய் சம்பளம் மட்டும் எந்த மூலைக்கு ? படிப்பை முடித்தபிறகு நானும் அம்மாவுடன் வேலைக்குப் போக ஆரம்பித்தேன். சாயந்திரம் வேலை முடிந்து வருகிறபோது அம்மா அடுப்பெரிப்பதற்காக முள்ளை வெட்டிக் கொண்டு வருவாள். ராத்திரி ஒரு நேரம்தான் சமையல் நடக்கும். அப்போதுதான் ஓரளவு சாப்பாடு. அதுவும் வெறும் கஞ்சிதான்.

மூன்று தங்கைகளையும் இலவச சாப்பாட்டுடன் படிப்பும் சொல்லித்தருகிற கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் சேர்த்தாள். (கிறிஸ்தவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து பணம் வருகிறது, மதத்துக்கு ஆள் சேர்க்கிறார்கள் என்று ஒரு பிரசாரம் நடக்கிறது. ஆனால், நாங்கள் இந்துக்கள்தான். எங்களுக்கு எந்த இந்து அமைப்பும் உதவவில்லை. ஆனால் யார்யாரோ முகம் தெரியாத வெளிநாட்டவர்கள் தரும் நிதியுதவியில் இன்றும் பல ஏழைக் குடும்பத்துப் பிள்ளைகள் படித்து வருகின்றன. ஆனால், NRI என்ற ஒரு புதிய நவீன வர்க்கம் ஒன்று தற்போது உருவாகியுள்ளது. இந்தப் புது வர்க்கம்கூட இதுபோன்ற சேவை முயற்சிகள் எதையும் செய்வதில்லை. தொழில்களில் முதலீடு செய்து மேலும் பணம் சேர்க்கவே முயற்சிக்கின்றன. நான் அறிந்தவரை தீவிரமான ஹிந்து வெறியர்கள் பலர், கொடூரமான வழியில், பணத்தாசை பிடித்தலையும் சைவர்க்களாகவே இருக்கின்றனர். ஒரு கையில் கீதையையும், மறுகையில் கரன்ஸி நோட்டுக்களையும் பிடித்திருக்கின்றனர். ஹிந்துத்துவம் என்ற பெயரால் பஞ்சமா பாதகங்களில் ஈடுபடும் இந்த குரூர ஹிந்துக்களைவிட, தயாளமும், மனித நேயமும் நிரம்பிய அந்த கிறிஸ்தவர்கள் வணக்கத்துக்குரியவர்கள். )

நான் 1973 - ல் வேலைதேடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சென்னைக்குப் புறப்பட்டபோது அம்மாவிடம் எனக்குத்தர அதிகமாக ஒன்றும் இல்லை. இத்தனை ஆண்டுகள் ஆனபிறகும் கூட வறுமை அகலவில்லை. நான் புறப்படும்போது எனக்குத் திருநீறு பூசி கையில் ஒரு ரூபாய் கொடுத்தாள். அந்த ஒருரூபாயை நான் வெகு பத்திரமாகக் காப்பாற்றி வந்தேன். ஆனால் இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஒருநாள் எரிகிற கும்பியை அணைக்க அந்த ஒரு ரூபாய்தான் கைகொடுக்க வேண்டியதாயிற்று.

அவளுக்கு தெய்வபத்தி நிறையவுண்டு. எந்தக் கஷ்டத்திலும் தெய்வ நிந்தனை செய்ததில்லை அம்மா. என்பேரில் அவளுக்கு மிகுந்த பாசம் உண்டு. நான் என்ன தவறு செய்தாலும் சரி எனக்காகத் தான் பரிந்துபேசுவாள். பிறரிடம் என்னை விட்டுக் கொடுத்துப் பேசமாட்டாள். ஆனால், அதே சமயம் அவளைப் போல் கண்டிப்பானவளும் கிடையாது. ஓரளவாவது என்னிடம் ஏதாவது நல்ல குணங்கள் ஒட்டிக்கொண்டிருக்கின்றன என்றால் அது அவளுடைய கண்டிப்பினால் வந்ததுதான். சிறு வயதில் நான் அம்மாவிடம் பட்ட அடிகள் கொஞ்சநஞ்சமல்ல. இன்று இத்தனை வயதான பிறகும் கூட அம்மா என்றால் உள்ளூரக் கொஞ்சம் பயம்தான்.

அம்மா என்றதும் நினைவுக்கு வருவது அவளுடைய தீரமும், கடும் உழைப்பும்தான். ■

**கிடைக்கப்பெற்றோம்**

## அதிகாலையைத்தேடி !

**செழியன் கவிதைகள்**

*3000, victoria Park Ave., #438,*
*North York, Ont, canada.*






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மகாஜனாவும் நாடகமாலையும்

- அசோக்

பாரிஸ்சில் நாடகமெனக் காட்டப்பட்ட சில மூன்றாந்தர நிகழ்ச்சிகளுக்குள் தங்கள் கவனத்தைச் செலுத்தியிருந்த ரசிகர்களுக்கும் நாடக அபிமானிகளுக்கும் சென்ற மாதம் 14ம் திகதி (14 -3 -1993) நாடகமாலை ஒரு வரப்பிரசாதம்.

ஈழத்து கலைஇலக்கிய - அரசியல் துறைகளில் மகாஜனாக் கல்லூரியின் பங்களிப்பு எழுதப்படவேண்டியதொன்று. கலைஇலக்கிய கர்த்தாக்களையும் , அரசியல்வாதிகளையும் கலைஇலக்கிய வழிகாட்டிகளாகவும் -விடுதலை இயக்க முன்னோடிகளாகவும் உற்பத்தியாக்கிய ஒரு தொழிற்கூடம் அது. அவர்களின் அரசியல் -இலக்கிய கோட்பாடுகளும் -நடைமுறைகளும் அரசியல் பின்னணிகளும் விமர்சனத்துக்கு உட்படுத்தப்படவேண்டியன என்பதற்கு அப்பால் இக்கல்லூரிக்கு வரலாற்று ரீதியான இலக்கிய மரபு உண்டு என்பது கவனத்திற்குரியது. அதன் தாக்கம் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர்களினால் நடாத்தப்பட்ட இந்த ' நாடகமாலை ' விழாவிலும் நன்கு தெரிந்தது.

மகாஜனாவில், அன்றைய காலங்களில் நாடகம் பார்த்த அனுபவத்திற்கூடாக இந் நாடக விழாவை நோக்கின் அன்றய அரங்கு அமைப்புத் தவறுகளின் தொடர்நிலைத் தவறுகளோடு நாடகமாலை ஆரம்பமாயிற்று.

ஒரு நாடக வெளிப்பாட்டுக்களத்தின் முக்கிய பங்கைப் பெறுவது மேடை அமைப்பாகும். நவீன அரங்கு உத்தி முறைகளை கையாண்டு தயாரிக்கப்பபடும் நாடகத்தில் அரங்க அமைப்பின் ஒளி, ஒலி தவறிழைப்பின் நாடக விடயதான ஆளுமை தோல்வி நிலை அடைந்துவிடும். தொழில் நுட்பரீதியில் வளர்ச்சி கண்ட பாரீஸ் நகரத்தில் ஒலி, ஒளி தொடர்பான குறைபாடு என்பது அரங்க அமைப்பாளர்களின் தவறாகவே கருதமுடியும். அன்றைய மகாஜனாக் கல்லூரி அரங்கு நிலைவேறு. தொழில் நுட்ப பற்றாக்குறை நிறைந்த அன்றய காலகட்டத்தில் கூட நாம் தரிசித்த மேடை நாடகங்களை எண்ணிப் பார்பின் இம்மேடை அமைப்பின் தவறுகள் புரியும். இனி நாடகங்களைப் பார்ப்போம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கண்டம் மாறியவர்கள்:

சாம்பசிவம் ஆங்கிலம் படித்த ஓர் யாழ்ப்பாண சமூகத்தின் பிரதிநிதி. இவரின் அரசியல் பாரம்பரியம் என் பது பலமான இனத்துவேஷ வழி காட்டலில் உருவாக்கப்பட்ட ஆண் டபரம்பரை மீண்டுமொரு முறை....... கோஷத்தின் படிமா னமே. இவரின் வீரவாய்ச்சொல் பேச்சுக்களும் அவர் கொள்ளும் உணர்ச்சிகளும் போலித்தனமா னவை என்று கருதுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. அவர் 'த மிழன் மீண்டும் ஆளவேண்டும் - நாட்டில் தனித்தமிழன் உயிர்வாழும் வரை போராடியே ஆகவேண்டும்" என்று அடிக்கடி சூளுரை கொடுப் பவர். இவை அவரின் நிஜமான ஆசைகள் என்பதனை உணர்ச்சிவ சப்பட்டு தன்னிலை இழப்பதன் ஊடாக நாம் உணரமுடிகின்றது. உணர்ச்சிவசப்படல் -இதன் உடலி யல் மாற்றம் தன்னிலை இழப்பா கும். இது ஓர் விஞ்ஞான பௌதிக உடலியல் கூற்றின் அடிப்படைத் தன்மை. இது போலித்தனமாக இருக்கமுடியாது. இது நிஜமான மாற்றம். ஆனால் இவரின் சிந்த னைகளும் போக்குகளும் பிழை யான கருத்துவத்தைக் காட்டுகிறது. யாழ்ப்பாண மேலாண்மைச் சமூகத் துக்கே உரித்தான சாதி -சமயம் - தன் சுற்றம் என்ற குறுகிய வட்ட 'கிடுகுவேலி'ச் சிந்தனைப் போக்கு கள் இதற்கு உதாரணம். தனித் தமிழன் நாட்டில் வாழும்வரை நாட் டிற்காக போராடவேண்டும் - வெளிநாட்டிற்கு தப்பி வருதல் நமது தேசத்துக்கு நாம் செய்யும் துரோகம் என அகதியாக இங்குவரும் தனது மருமகனின் நண்பன் சந்திரசேகரத் துக்கு அறிவுரை கூறும் அவர் தன் வயிற்றுப்பேரன் இயக்கம் ஒன்றில் சேர்ந்தது அறிந்து அதிர்ச்சியும் " ஏன் இவனுக்கு தேவை இல்லாத வேலை " என்பதற்கூடாக தமிழன் ஆழவேண்டும் -தனி மனிதன் வாழும்வரை போராடவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து முரண் பட்டு ஓர் அந்நிய மனித நிலையை காட்டிவிடுகின்றார். இது மத்தியதர வர்க்கத்துக்கே உரிய நழுவல் தன்மை -தப்பி ஓடும் வழிமுறை. ஆனால் இந்த நழுவல் தன்மை யென்பது தமிழன் ஆளவேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து நழுவும் தன்மையல்ல. தமிழன் ஆளவேண் டும் என்பதை மனதார விரும்புப வர். இந்த விருப்பு சத்தியமானது. சந்தேகத்துக்கு இடமற்றது. இந்நா டகத்தின் மூலம் சாம்பசிவம் எனும் பாத்திரப் படைப்பு இரண்டு முரண் பட்ட தன்மையைப் பிரதி பலிக்கின் றதேயன்றி சாம்பசிவத்தினைப் போலித்தனம் கொண்ட மனிதனா கக் காட்டவில்லை. இருந்தும், மாவை . நித்தியானந்தன் அவர்கள், சாம்பசிவம் என்ற நபரின் ஊடாக யாழ்ப்பாண மேலாண்மைச் சமூகத் தின் சுயநலத்தன்மையை வெற்றிக ரமாக வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

## நாங்கள் திருந்தமாட்டம்.

வட்டிக்குப் பணம் கொடுத்தல், கல் யாண புரோக்கர் என்ற மரபுவழி வியாபாரத்தனத்தில் இருந்து நவீன வியாபாரப் பாய்ச்சல், கேஸ் எழு துதல், ஏஜென்ஸி, பத்திரிகை நடாத்தல். இந்நாடகம் வியாபார மூளைத்திறன் வாய்க்கப்பெற்ற நம் மவர்களின் குறுக்குவழி பணம் தேடும் படலத்தினை அப்படியே மிக இயல்பாக காட்டியது. கனகம் நவீனத்துவ மயப்பட்ட பாரீஸ் நக ரில் நாகரீகமாக வாழ்ந்தாலும் நகை ஈடுவைத்தல், வட்டிக்குப் பணம் கொடுத்தல் போன்றவைகளில் நமது தமிழ்ப் பாரம்பரிய வியாபாரத்தனத் தையே இங்கும் பின்பற்றுகின்றார். ஆனால் வறிய மக்களின் வயிற்றில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிக்கும் சுரண்டல் தொழிலாக - கேவலமானதாக கருதப்பட்ட வட்டித் தொழில் ஐரோப்பிய நாடுகளில் கௌரவ அங்கீகாரம் கொண்டதாக ஆக்கப்பட்டுள்ளது. எமது நாட்டில் வட்டிக்குப் பணம் கொடுத்தல் பொருளாதார சமூகத்தட்டுக்களை -அதன் முரன்பாடுகளை ஓரளவு பிரதிபலிக்கும் செயல். ஆனால் இங்கே அது சமபொருளாதார இயல்புகொண்ட நபர்களின் வெறும் கொடுக்கல் வாங்கல் நிலையை எய்தியுள்ளது. ஐரோப்பா நாடுகளில் நம்மவர்களின் வளர்ச்சி என்பது பணப் பொருளாதாரத்தோடு பின்னிப் பிணைந்ததொன்று. இங்கு வயிற்றுப் பசியினால் வட்டிக்குப்பணம் பெறல் இடம்பெறவில்லை. மாறாக சுற்றத்தாரை வரவழைக்க, -அசையும் -அசையாச் சொத்துக்களை வாங்கவே இம்முறை கைக்கொள்ளப்படுகின்றது. நாடக பாத்திரங்களும் இதன் பிரதிபலிப்புகளாகவே தென்பட்டன. உதாரணமாக, குஷ்பு -ரஜனி படம் காட்டுவதற்கு பணம் வாங்கும் கண்ணன். மாஸ்கோவில் நிற்கும் தன் மனைவியை அழைக்க சீட்டுக்கட்டும் வல்லிபுரம் இவர்களைக்காட்டலாம். இந்நாடகம் ஐரோப்பா நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்களின் யதார்த்த வாழ்வின் ஒரு பகுதியைக் காட்டினாலும் இந் நாடகத்தின்மூலம் எவ்வித மனத் தாக்கத்தையும் பெறமுடியவில்லை. ரசிகர்களின் -சபையோர்களின் பிரதிபலிப்பு இதற்கு ஓர் சாட்சியம். காரணம் வட்டிக்குப் பணம் கொடுத்தல், ஏஜென்சி நடாத்துதல், கேஸ் எழுதுதல் இந்நாடுகளில் ஒரு வியாபார நிலையை எய்திவிட்ட தன்மை. நாடக ஆசிரியரும் இதே கண்ணோட்டத்திலே இதை அணுக அவரால் முடிந்தது. இந்த வெளிப்பாடு படிப்பினை -வேதனையைத்தரவில்லை. எம்மோடு பிணைந்துவிட்ட ஓர் சமூக அங்கீகாரம்பெற்ற விடயமான தன்மையே நாம் இந்நாடகத்தை சகஜமாக ஜீரணித்துக் கொள்ள முடிந்ததின் வெளிப்பாடு. வேறொன்றும் அல்ல.

## அம்மா.. அம்மா..

நாடகப் பேராசிரியர் சிவத்தம்பி கூறுவதுபோல நாடகத்தின் உருவ அமைப்பு, நாடகப்பொருள், கதையமைப்பு -நடிப்பு முறைகள், நாடகத்தின் சமூக முக்கியத்துவம், நாடகம் எவ்வாறு கருத்துப்பரிவர்த்தனைச்சாதனமாக விளங்குகின்றது எனும் தன்மை ஆய்வு என பலப் பல கண்ணோட்டங்களில் ஒரு நாடகத்தினை நாம் பார்க்கமுடியும்.

இவ்வகையில் மாவை. நித்தியானந்தன் அவர்களின் இந்நாடகத்தினை நோக்கின் இந்நாடகம் வெளிப்பாட்டுத் தளத்தில் பல வெற்றிகளை ஈட்டி நின்றதென்றே கூறவேண்டும். இதற்குச் சாட்சியம். ரசிகர்களின் வேதனை கலந்த ஆழ்ந்த மௌனம்.

பாரிசவாத நோய் கண்டு முடமாகிவிட்ட வயோதிபத்தாய், சீதனம் - சாதி என்ற சமூக அரக்கனின் கோரப்பிடியினுள் சிக்கி திருமண வாழ்வை கானலாக எண்ணி வேதனையுறும் ஒரு இளம்பெண், தங்கை திருமணத்தை எதிர்பார்த்து தன் திருமணம் இன்றி நாட்களை கடத்திக் கொண்டிருக்கும் ஒரு இளைஞன். யாழ்ப்பாண வறுமைக் கோட்டை கீழ் நோக்கிய ஒரு வறிய குடும்பத்தின் ஓரிரவு வாழ்வை - ஒரே காட்சியமைப்பில் சொல்லப் பட்ட சேதிகள் -இதுதான் நாடகம்.

எமது போராட்டம் சீரழிந்த சமூகப் புண்களில் எதற்கு மருந்திட்டது?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீதனம், சாதி, மதம் அனைத்தும் எமது சமூகத்தில் புரையோடிப் போன சீழ்படிவங்கள். இந்தச் சமூ கக்கேடுகள் அனைத்தும் நம் சமூகத் தில் நீறுபூத்த நெருப்பு. இனத்துவப் போராட்டம் எனும் சாம்பலினால் இது மறைக்கப்பட்டுள்ளது. நாளை நெருப்புப் பற்றியெரியும். மீண்டும் ஒரு சங்கானை, மீண்டும் ஒரு மாவிட்டபுரம். பிற்போக்குவாத அரசியல் வாதிகள் மீண்டும் துளிர்ப் பார்கள். சமபந்திபோசனம், தீண் டாமைஒழிப்பு, கோவில் தரிசனம் எனும் போர்வையில் சாதிய முனைப்புக்கு மீண்டும் ஒரு கைதட் டல் கிடைக்கும்.

ஏழ்மை, ஆற்றாமை, துயர்கொள் ளும் மனம் இவைகளே அந்த மக ளின் சொத்துக்கள். அவளின் வார்த்தைகள் வெறும் சொற்கள் அல்ல. எமது சமூகத்தைத் தோலு ரித்துக்காட்டும் கண்ணாடிகள்.

குண்டுகளும் புறக்கணிப்புக்களும் சூழ்ந்துள்ள தேசத்திலிருந்து எம் மைப்போல் அவளால் -அவளின் அண்ணனால் -அந்தத் தாயால் அந் நிய நாடுகளுக்கு தப்பிவர முடி யாது. அவர்கள் ஏழ்மையால் பிணைக்கப்பட்ட அந்த மண்ணுக்கு ரியவர்கள். ஏற்றமும் -இறக்கமும் அங்கேதான் அவர்களுக்கு.

அந்த இளைஞன் தாயை மிகவும் நேசிப்பவன். ஆனால் இராணுவச் சுற்றிவளைப்பும் குண்டுகள் பொழி யும் அதன் ஆபத்தும் தங்களை அண்மித்துவிட்டதை உணர்ந்ததும் தன் நேசிப்புக்குரிய தாயை அவ்வி டத்தில் விட்டுவிட்டு அகல இளைஞன் முடிவு எடுக்கிறான். தங்கையோ தாயைவிட்டு வரமறுக் கிறாள். "உன்னில் வைச்சிருக்கிற அன்பைவிட அம்மாவில் எனக்கு பத்து மடங்கு பாசம் அதிகமடி "என் றும் அந்த இளைஞன் தங்கையின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அவளை வலுக்கட் டாயப் படுத்தி அழைக்கிறான். ஆனால் தங்கையைவிட பத்துமட ங்கு பாசம் கொண்ட அன்னையை எங்ஙனம் அவனால் விட்டுச்செல்ல முடிகின்றது ? இது பலரின் மனதில் நெருடலைக் கொடுத்தவிடயம். அந்த இளைஞன் திடகாத்திரமான வன். அவனால் அவன் தாயை சுமந்து செல்லமுடியும் உயிரின் மதிப்பு உடல் இயக்க விகிதாசார தன்மையிலிருந்து மதிப்பிடப்படுகின் றதா ? ' உடல் இயக்கமற்ற உயிர் ' எனும் அடிப்படையில் இவ்விட்டுச் செல்லல் நிகழ்கின்றதா ? எதிரியின் ஆபத்து அதிகமானது -இந்நிலையில் தாயையும் சுமந்து செல்லல் ஆபத்து மிக்கது எனும் வாதத்தை இவ்விடத் தில் எடுத்துக்கொண்டால் தாயின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிர்நிலை மதிப்பு என்ன ? போராட்டக்களம் ஒன்றில் எதிரியினால் ரணமாக்கப்பட்ட விடுதலைவீரன் ஒருவனை சக போராளி ஆபத்து மிக்கது எனும் வாதத்தின் அடிப்படையில் அவனை விட்டு தான்மட்டும் தப்பிச்செல்லின் அதன் நிலைப்பாடு எங்ஙனம் அமையும். இரண்டிற்குமான வித்தியாசங்கள் யாது ? " ஆமிவருவான், அம்மாவை பார்ப்பான். அவனுக்கும் இதுபோல் ஒரு அம்மா இருப்பாள். அவனுக்கு இரக்கம் வரும். உணவு கொடுப்பான். ஒருக்காலும் அம்மாவைக் கொல்ல மாட்டான் " இது அந்தத் தங்கையின் இயலாமையின் வார்த்தைகளா ? அல்லது எதிரியின் மனிதாபிமான இரக்கத்தினால் அம்மா காப்பாற்றப்பட மாட்டாளா என்ற ஏக்கமா ? அது ஏக்கமாயின் இந்த ஏக்கம் இயலாமையின் வெளிப்பாடு அல்ல. நம்பிக்கையின் அடிப்படை. தேசிய முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ள ஒருதேசத்தின் மீதான இராணுவ ஆக்கிரமிப்பில் எங்கே மனிதாபிமானம் இருக்கப்போகிறதெனக் கேட்பின் இது ஓர் நீண்ட விவாதத்துக்குரியதொன்று. ஒட்டுமொத்தமாக இந்த நாடகம் பலதரப்பட்ட வினாக்களை ரசிகர்களின் மனதில் தோற்றவித்துள்ளது. இந்த வினாக்களின் குவியலே இந்நாடகத்தின் வெற்றிக்குச்சான்று.

நாடகமொன்றின் முழுமையான வெற்றிஎன்பது நாடகமாந்தர்களின் நடிப்புத்திறனோடும் இணைந்ததொன்று. கருத்து வெளிபாட்டுக்கருவிகளாக இவர்களே முன்னிலைப் படுத்தப்படுகின்றனர். இவ்வகையில் பல புதியமுகங்களை அறிமுகப்படுத்தியிருந்த மகாஜனாவும் நடிகர்களும் விஷேடித்துக்கூறப்பட வேண்டியவர்கள்.

இம்மாலையில், ஒரு யாழ்ப்பாணத்துச் சிங்கப்பூர் பென்சனியரை அப்படியே கண்முன் நிறுத்திய பி. லோகதாசும் (கண்டம் மாறியவர்கள் ), அசல் வட்டிக்காரியாக சபையைச் சலசலக்லவைத்த திருமதி. துஷியந்திவளவனும் (நாங்கள் திருந்த மாட்டம் ), ஐம்பது வயதைத் தாண்டிய நிலையிலும் இன்னும் தாளாத கலையுணர்வோடு மேடையில் தோன்றி பார்வையாளர்கள் அனைவர் மனத்திலும் அம்மாவாகவே பதிந்துவிட்ட திருமதி. நீலாயதாட்ஷி சிவசுப்பிரமணியம் (அம்மா... அம்மா...) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இயந்திரத்தனமான, பணம் தேடுவதே லட்சியமாகி 'ஓட்டப்பந்தயம்' செய்யும் எங்களிடையே கலைமுயற்சிக்கு நேரம் ஒதுக்குவதென்பது சாதாரண விஷயம் அல்ல. அத்தோடு வணிகசிந்தனைக்கு அப்பாற்பட்டு தாயாரித்து மேடையேற்றுவதேன்பது ரணசிகிச்சை. பிரசவவேதனை. இந்த வகையிலும் மகாஜனக் கல்லூரியினர் மனம் திறந்து பாராட்டப்பட வேண்டியவர்களே. □


பிரான்ஸிலிருந்து
வெளிவருகிறது !



மௌனம்

கலை இலக்கிய இதழ்

தொகுப்பாளர்:
கி.பி.அரவிந்தன்

✉ :
**MOUNAM**
*6, Square du Roule*
*92200 NEUILLY S / SEINE*
*FRANCE*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் விமர்சனம்

- கீழ்கரவை. பொன்னையன்

எஸ். அகஸ்தியரின்

## எரிநெருப்பில் இடைபாதை இல்லை

பாரதி
புதுமைப்பித்தன்
ப. ஜீவானந்தம்,
க. கைலாசபதி,
அ. ந. கந்தசாமி
'இந்த ஐம்பெரும் சமத்துவ உலக இலக்கிய சிந்தனையாளர்களுக்குச் சமர்ப்பணம்' என்ற முதலடியுடன் அன்று 'எரிகோளம்' என்று ஈழநாட்டில் வெளிவந்து வெற்றி பெற்ற நவீனம் இன்று புத்தக உருவில் 'எரிநெருப்பில் இடைபாதை இல்லை' என்ற தலைப்பில் வெளிவந்துள்ளது.

இக்கதையின் உள்ளடக்கத்தை சாதீயத்தை மையப்படுத்தி எழுந்தது எனலாம். நடேசபிள்ளையின் உயர்சாதிக் குணம் கொட்டிச் சின்னத்தம்பியினால் உச்சநிலைக்குக் கொண்டுவரப்பட்டு, தன் மகள் செல்லமணி ஒரு தீண்டத்தகாதவனை(முருகன்) விரும்பி வாழ்க்கையை ஆரம்பிக்கத் தன் மகளையே கொலை செய்யும் அளவுக்கு அவரது சாதீய எண்ணம் முடுக்கிவிடப்படுகின்றது. இதன் உள்நிலை என்ன? புறநிலை என்ன? என்பதை ஆராய முயன்றதுதான் இந்தக் கதையின் மூலக்கரு. இருந்தும் சாதிய உள்நிலையை ஆராய்ந்ததுதான் இக்கதையின் தொகுப்பு. புறநிலைக் காரணீயத்தை தவிர்த்துவிட்டது ஒரு மர்மமே.

இக்கதையில் வரும் கதாபாத்திரங்களை உயிர்உள்ளதாக நடமாடவிட்டிருக்கின்றார் இந்த நாவலின் ஆசிரியர் . திரு. எஸ். அகஸ்தியர் என்றால் மிகையாகாது.

யாழ்மண்ணில் உதித்த எழுத்தாளர்களில் முன்னணியில் வகிக்கும் எழுத்தாளர்களில் திரு. எஸ். அகஸ்தியரையும் கொள்ளலாம். அவரது எழுத்துக்கள் நம் மண்ணுக்குக் கடந்த காலத்தில் பயனுள்ளதாக இருந்திருக்கின்றன. அதன் வழியில் இந்த நூல் 1959 ல் 'எரிமலை' என்ற தலைப்பில் எழுந்தது. ஆனால் அது உடனடியாக இந்தக் கரு நூல் வடிவாகவோ அல்லது பத்திரிகைகள் மூலமாகவோ வெளிவர முடியாமல் போனாலும்கூட எந்த நோக்கத்துக்காக இந்த நூலை எழுதினாரோ அந்த காலகட்டத்தில் இந்நூல் வெளிவர 'ஈழநாடு' (யாழ்ப்பாணம்) ஒரு காரணமாக இருந்ததால் இந்நூலின் பயன்பாடு 1968க்குப் பின் நம் மண்ணுக்குக் கிடைத்துள்ளது என்பதை நம் சமுதாய மனமாற்றத்தில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

சாதியை மையக்கருவாக வைத்து நம் தமிழ் மண்ணில் பல கதைகள் எழுந்துள்ள போதும் எரிநெருப்பில் இடைபாதை இல்லை என்னும் நாவலே அன்று எரிமலையாகவும் எரிகோளமாகவும் முதன்முதலாகத் தோன்றியது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

ஈழத்துப் படைப்புக்களில் யாழ்ப்பாணத்துச் சூழலில் எழுந்த பல நாவல்கள் அன்று பெரும்பாலும் சாதியை மையமாக வைத்து எழுந்தவைகள்தான். யாழ்ப்பாணத்துக்குப் புறம்பாக சித்தரிக்கப்பட்ட நாவல்கள் தொழிலாள வர்க்கப் பிரச்சனைகளை மையமாக வைத்து உருவாகி இருப்பதும் கண்கூடு. இதில் எரிமலை அல்லது எரிகோளம் அல்லது எரிநெருப்பில் இடைபாதை இல்லை என்பதும் விதிவிலக்கல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு படைப்பாளி தான் வாழ்ந்த - வாழும் காலத்தில் தான் கண்டது, கேட்டது என்பனவற்றைத் தான் உணர்ந்து அதைத் தன்னுள் வாங்கி சீர்தூக்கிப்பார்த்து -தன் எழுத்துக் களால் தான் வாழ்ந்த -வாழும் சமூகத்துக்கு தன் தீர்வை துணிந்து சொல்வதில் தன் நெறியாள்கையில் வெற்றி பெறுகிறான். தான் கொண்ட எண்ணங்களினால் ஒரு பெரு மாற்றத்தை -அது ஒரு நல்ல மாற்றத்தை உருவாக்குமானால் அதனால் எழுத்தாளன் அந்தச் சமூகத்தின் முதல் மனிதனாகின்றான். அந்தவகையில் திரு. அகஸ்தியர் 1959 ல் இருந்து 1968 வரை தன்னுள் ஒரு போராட்டத்தை வளர்த்து 1968ல் பிரசவித்த இந்தக் கதையை நன்கு நெறியாள்கை செய்துள்ளதுடன் அவர் கொண்ட எண்ணங்கள் இச்சமுதாயத்துக்கு ஒரு மாற்றத்தை உருவாக்கி இருப்பதினால் அவர் இச்சமூகத்தின் முதல் மனிதனாகிறார் என்பதில் இருவேறு விடை கிடையாது.

ஆனால் ஒரு கேள்வி எழுகிறது. இவர் 1959ல் நிற்கிறாரா ? அல்லது 1968ல் நிற்கிறாரா , அல்லது 1993ல் நிற்கிறாரா?

எரிமலையாக 1959ல், எரிகோளமாக 1968ல், எரிநெருப்பில் இடைபாதை இல்லை என்ற பெயரில் 1993ல். இம்மூன்றும் ஒரு கதையாக இருப்பதால் எந்தக் கால சமூக அமைப்பை வலியுறுத்துகிறார் என்ற கேள்வி ஒன்று எழாமல் இருக்கமுடியாது.

இக்கதையில் கோயிலுக்குள் நுழைய முடியாதவர்கள் -தேநீர்கடைக்குள் நுழையமுடியாத வர்கள் -சுடுகாட்டில் நுழையமுடியாதவர்கள் -ஒன்று கலந்து திருமணம் செய்யமுடியாதவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்களாகவும், இத்தனையையும் யாரால் செய்யமுடியுமோ அவர்கள் உயர் சமூகத்தவர்களாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளது.

நடேசபிள்ளை, சின்னத்தம்பர், செல்லம்மா, செல்லமணி, கந்தசாமி இவர்கள் அனைவ ரும் உயர் சமூகத்தவராகவும், சின்னவன், முருகன், நாகாத்தை, கணபதி போன்றவர்கள் தாழ்த்தப்பட்ட சமூகத்தவராகவும் படைக்கப்பட்டுள்ளனர். இது அன்றைய யாழ்ப்பாண அமைப்பு வாழ்க்கையைமையகப்படுத்தி காட்டப்பட்டுள்ளது என்பது உண்மை.

பாத்திரப்படைப்புகளில் முக்கிய பாத்திரமாக நடேசபிள்ளையை நோக்கினால் இவரது நடமாட்டம் இரு முனையில் முரண்படுகின்றது எனலாம். பிறர் நிலையில் நோக்கும்போது கவலைப்படவில்லை. தன்னிலையில் நோக்கும்போது சாதியத்தை வெளிப்படுத்தினார் என்ற வாதத்தை எவ்வளவுதூரம் சரியானது என நோக்கவேண்டும்.

மாணிக்க கங்கையில் மூழ்கி சாவோடு போராடிய செல்லமணியைக் காப்பாற்றிய தாழ்ந்த வகுப்பைச் சார்ந்த சின்னவன் -தன்மடியில் செல்லமணியை வைத்து தான் சுவைத்த தேநீரை கொடுக்கும்போது, சின்னவனை அருவருக்கத்தக்க நிலையில் பார்த்த செல்ம்மாவின் நிலைக்கு முற்றுமுழுதாக எதிர்மாறாக அவனை முருகனாக மனதில் நிறுத்தி வணங்குகிறார். அதுமட்டுமல்ல சின்னவனை இருகரம் கூப்பி வணங்கத் துணிந்தும் அவர் மனைவியின் செயல்கள் அவரைத்தடுத்தன. ஆனாலும் நெஞ்சில் சின்னவனை வணங்கினார்.

"சின்னவன் நீ என் நெஞ்சிலிருந்து ஒரு நாளும் மறையமாட்டாய். கடைசி வரைக்கும் உன் தியாக சேவையை நான் மறக்கமாட்டேன். நீ சாதாரண மனிதனல்ல. ஒரு தெய்வப்பிற வியடா...."

இந்த வார்த்தையைச் சாதாரணமாகக் கொள்ளமுடியாது. ஆனால் அவர் நிகழ்ந்துவரும் காலத்தில் கொடூரமுள்ள சாதிமானாக காட்சியளிப்பதற்குத் தன் மகள்தான் காரணமென்றால் பொருந்தாது. சரியான புறக்காரணியத்தை தெளிவுபடுத்தி இருக்கவேண்டும்.

ஆனால் செல்லம்மா ஆரம்பத்தில் சாதியத்தைக் கடைப்பிடித்து விட்டு இறுதியில், சாதியத்துடன் வாழ்ந்துவிட்டு முருகனுடன் வாழ்ந்த தன் மகளை வாழவிடவேண்டும் என்று தன் கணவனுடன் முரண்படுகிறாள். இப்படி முரண்படும் தாய் தன்மகளுக்கு சாநாள் குறிக்கப்படகிறது என்று தெரிந்தும் ஏன் கடிதம் எழுதினாள் என்ற குழப்பம் தவிர்க்க முடியாததாகின்றது.

செல்வராசா (உயர்சாதி) வையும் நாகாத்தையெனும் சுந்தரியையும் கண்டுகொள்ளாத இந்தச் சமுதாய அமைப்பு முருகனையும் செல்லமணியையும் கண்டு நடவடிக்கை எடுக்கத்து டித்தது. சாதி மறையவேண்டும் என்ற வகையில்தான் செல்வராசாவும் சுந்தரியும் தீர்மானித்து கலப்பு மணம் கொண்டனர். அதே சுந்தரிதான் அந்தச் சமூகத்தில் எட்டாம் வகுப்புவரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படித்த பெண். அவளிடம் காதல் மட்டும் முகிழ்ந்ததா அல்லது சாதி மறைக்கொள்கை முகிழ்ந்திருந்ததா என்பதும் தெளிவுபடுத்தப்படாத நிலையில் செல்லமணியும் முருகனும் மணம் புரியத் தீர்மானித்தமை வெளிப்படுகின்றது. சாதி முறியடிப்புக்கு முருகனை மையமாக்கியது போல் செல்வராசாவையும் மையமாக்கி இருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அதே செல்வராசா மறைக்கப்பட்டுவிட்டதன் தன்மை ஒரு அடிமைச் சமூக வாழ்க்கையை -மாற்றமுடியாது என்ற தன்மையை உறுதிப்படுத்துவதாக அமைந்துவிட்டது எனலாமா? ஒரு சமூகத்தின் முன்னேற்றத்துக்கு தொழிலாளர் வர்க்கரீதியான போராட்டங்களே மூலகாரணமாக அமைதல் பொதுவான விதியாக இருந்துவருவது கண்கூடு. தனிமனித போராட்ட வடிவங்கள் எந்த விதத்திலும் பயன்தராது என்பதை எண்ணி முருகனை ஒரு சிவப்புச் சட்டையுடன் நடமாடவிட முயன்ற ஆசிரியர் கடைசிவரை முருகனை தெளிவுள்ள ஒரு சிந்தனை மிக்க பாத்திரமாக மிளிரவைக்கவும் அதற்குரிய போராட்ட வடிவங்களை உருவாக்கவும் இல்லைஎன்பது ஒரு குறைபாடே. பருத்தித்துறையில் வாழ்ந்த முருகன், பிற்பகுதியில் சாவகச்சேரியைப் பிறப்பிடமாக்கிக் கொண்டான். தன் காதல் வாழ்க்கைக்காக செல்லமணியுடன் தனித்துக்கொண்டான். அதுவரை தன் சாதியத்தை ஒழிக்க எதுவிதமான செயல்வடிவங்களையும் உருவாக்கியதில்லை. இறுதியில் அவனை ஒரு திடீர் சிந்தனாவாதியாக்கியது தொடர்புகளற்ற ஒரு திருப்பமாகவே காணப்படுகின்றது.

ஓர் எழுத்தாளன் ஓர் இலக்கை நோக்கி ஒரு நாவலை உருவாக்கும்போது தன் இலக்கு என்ன என்பதைத் தான் தோற்றுவிக்கும் கதாபாத்திரத்தின் மூலம் சமூகத்தில் கொடுக்கும் நியாயபூர்வமான தீர்ப்பு என்ன என்பதை இரண்டுவிதத்தில் அமைத்துவிடலாம். ஒன்று, தானே ஒரு தீர்ப்பை வழங்கி இதுதான் தீர்ப்பு என்று அறுதியிட்டுக்கூறுதலாகும். இரண்டாவது சமூகத்தில் ஒரு சிந்தனை வடிவை -போராட்ட வடிவைத் தூண்டிவிட்டு அப்போராட்ட வடிவமூலம் ஒரு தீர்ப்பு எப்படி அமையவேண்டும் என்பதைக் காட்டிக்கொள்ளல். இந்நாவலை நோக்கும்போது

ஆலயப்பிரவேசம்
பிணக்காட்டுப் பிரவேசம்
தேநீர்கடை சமபோசனம்
சமவுடமைத் திருமணம்
மேளதாள சமஉரிமை
தொழிலாளர் இயக்கம்

இவைகளைத் தொட்டுக்கூறுகிறது. ஒரு சமூகத்தை அடக்கிவிட்டதற்கான அறிகுறிகளையும், இதற்கான போராட்டங்களையும் ஒரு சமூகம் தொடர்ந்து கொண்டிருப்பதையும் உணர்த்திய இந்நாவல் சில இடங்களில் வர்க்க ரீதியான போராட்டங்கள் எழவேண்டும் என்பதை பேச்சுவடிவில் காட்டிய போதிலும் அந்த வர்க்கரீதியான போராட்ட நிகழ்வுகளை, சூழ்நிலைகளைக்காட்டாது -அவர்களது -சமூகப்போராட்டங்களை நசுக்குவதில் குறியாக நிற்கின்றது. சமூக அந்தஸ்து வெற்றிக்கான அடிப்படைப் போராட்ட வடிவங்களைப் படிப்படியாக வர்க்கரீதியாக காட்டவில்லை என்ற குற்றச்சாட்டும் இதற்கு உண்டு.

"Eri Neruppil Idai Pathai Illai"
Jegany Pathippagam,
132 A, Marutha Pandiyar Theru,
Thasilythar Nagar, Madras -625 002.

முருகனின் மனதில் ஒரு பொதுவுடைமைச் சமுதாய உணர்வை பொங்கிடவிட்டதுடன்- எத்தனையோ போராட்டங்கள் நடக்கும்போது முருகனை எங்கேயோ ஒரு மூலையில் வைத்து விட்டதினால் இதைச் சமூகப்போராட்டமென சாதிரீதியாக நடமாட விடவேண்டியதாயிற்று. ஆரம்பமுதல் இச்சாதிமாற்று முறை அல்லது சாதி அழிப்பு முறை என்பதை தொழில் வர்க்க முறையான அடிப்படையில் அணுகப்படவில்லை என்பதும் அப்படி அணுகும்போது சாதி என்பது தாழ்ந்தநிலையடையாது -செய்தொழிலைக் குறிக்கும் -மனிதநேயம் சமநிலையானது என்பதை ஏதாவது ஒரு பாத்திரமூலம் தோற்றவிக்கப்பட்டு அந்தப்பாத்திரத்தை முழுமையாக நடமாட விட்டிருந்தால் இந்நாவலின் தோற்றுவாய்குரிய காரணத்துக்கு ஈடு இணை இருக்கமுடியாது.

'பழைய சம்பவங்களே எதிர்கால வாழ்க்கைக்கு சிறந்த ஒத்திகை ' என்ற தோற்றுவாயைக் கொண்டு ' கெட்டது அழியாது நல்லது நிலைக்காது' என்ற முடிவுரையைக் கொண்ட இந்நாவலில் எப்படி கெட்டதை அழிக்கவேண்டும் என்று வரையறுத்துக் கொண்டது என்பதை தொலைநோக்கு ரீதியில் தெளிவுபடுத்தவில்லை. எனலாம். பழைய சம்பவங்கள் எனும்போதும் அவைதான் ஒத்திகை என்னும்போதும் முடிவில் எடுக்கப்படவேண்டிய தீர்வுக்கு நடாத்தப்பட்ட ஒத்திகைகள் என்ன? அதாவது நடவடிக்கைகள் என்ன என்பதை நோக்கும் போது முருகன் செங்கொடியுடன் ஊர்வலம் வருவதைக்கூறலாமா என்றால் முருகன் ஒரு திடீர் பிரவேசம் செய்வதையும் , அவன் படிப்படியாக எப்படி செங்கொடியை ஏந்தினான் என்பதையும் தெளிவுறுத்தாமையையும் காணக்கூடியதாக உள்ளது.

இந்நாவலில் கடந்தகால நிகழ்வை உருவாக்கியிருந்தாலும் நூலாக- புத்தகமாக பிறந்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்பொழுதுதான் என்னும் போது சில சொற்பிரயோகங்கள் இக்காலத்தில் தவிர்க்கப்பட்டிருக்கவேண்டும். அன்று இருந்த சமூக அமைப்பு மாறி இன்று இருக்கும் சமூகஅமைப்பு உருவாகி மக்கள் மனதில் 'சாதி' அழிந்தொரு 'பொதுஅமைப்பு' உருவாகி வருகின்றது. இந்நிலை உருவாக இந்நாவல் அன்று எழுந்ததும் ஒரு காரணம் என்றாலும் அன்று இந்நாவலை எழுதும்போது எழுத்தாளர் பாவித்த சொற்பதங்களை அன்று ஏற்றுக்கொண்டாலும், இன்று வளர்ந்துவிட்ட படிப்பில் நாகரீகத்தில் மிளிர்ந்துகொண்டிருக்கும் இன்றைய சமூக அமைப்பில் இப்பதங்கள் (சொல்பதங்கள்) அதுவும் விநாடிக்கு ஒருதரம் பாவிப்பதைத் தவிர்த்திருக்கலாம். இப்பதங்கள் முன்னேறும் சமுகத்தைத் தாழ்நிலைக்கு மீண்டும் கொண்டு போய்விடுமோ என்ற பயம் எழுவதும் நியாயமாகவே படுகிறது.

இந்நாவலை ஒரு வரலாற்று அடிப்படையான ஒரு எடுகோள் நூலாகக் கருதவேண்டும் என்று சிலரது கருத்தாக இருந்தாலும் அந்த வாதத்தை இந்த நாவலின் ஆசிரியர் தமது முன்னுரையிலோ அல்லது வேறு எந்த நிலையிலோ கூறவில்லை. இதனால் அந்த வாதத்தை ஒப்புக்கொள்ள முடியாது. எடுகோள் நூல், வரலாற்றுநூல் என்பதற்கு அடிப்படை அமைப்பு முறை அணுகுமுறை என்பவைகள் ஒரு நாவல் அமைப்பு முறைக்கு முற்றிலும் மாறுபட்டது. இவைகளை நோக்கும்போது ஆசிரியர் அன்றைய வாழ்க்கையை மீளப்புதுப்பித்துள்ளார் என்ற வாதந்தான் முன்னுக்குவரும். அன்றைய நிசவாழ்க்கையின் நிசங்கள்தான் என்பதை மறுக்கமுடியாது. மூன்று காலகட்டத்தில் மூன்று தலைப்புகளில் ஒரே கதை வெளிவந்திருப்பதால் எந்தக்காலகட்டத்தில் இது நடந்திருக்கும் என்ற குழப்பம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும் போது இது ஒரு வரலாற்று நூல் என்ற பதத்தைச் சிலர் இலகுவாகப்புகுத்தி விட்டனர்.

வளர்ந்துவிட்ட, முன்னேறிவிட்ட சமநிலை அமைப்புக் கொண்டு ஒன்றுபட்ட சமூகத்தில் இதன் பயன்பாடு எதுவாக இருக்கும் என்பதையும் நோக்கவேண்டும். ஒன்றை உருவாக்கப் பயன்படுத்தப்படும் நாவல் ஒன்றை அழிக்கப் பயன்படக்கூடாது. இந்நாவலை வாசிக்கும்போது சிலநேரம் சில பாதகமான எண்ணங்கள் உருவாகலாம். மறந்ததை நினைவூட்டவும் இந்நாவல் ஒரு காரணமாக அமைந்தால் இந்த நாவலின் அதிபயன்பாடு எதுவாக இருக்கமுடியும் என்ற கேள்வி எழாமல் இருக்கமுடியாது.

எனவேதான் சமகாலத்துக்கு ஒப்பான விடயங்கள் இதில் உள்ளனவா என்பது ஆய்வு செய்யப்படவேண்டிய மிக அவசியமான ஒன்று.

பயன்பாடு, முன்னேற்றம் என்பது நேர்கோட்டு விதிக்குட்பட்டதாக நோக்கவேண்டும். வட்டக்கோட்டின் பயன்பாட்டு விதிக்குட்பட்டு நோக்கினால் எங்கே நாம் தொடங்கினோமோ அங்கேயே கொண்டுபோய் விட்டுவிடும். இன்றைய காலகட்டத்தில் உருவான இந்நாவல் வட்டக்கோட்டின் பயன்பாட்டு விதிக்குட்பட்டு விடுமோ என்ற பயம் இருப்பதால் இப்புத்தகத்தை அனைவரும் படிக்கத்தான் வேண்டும். ஆனால் இக்காலத்துக்குப் பொருத்தமானவைகள் இருப்பின் அதை உள்வாங்கிக்கொண்டு, இக்காலத்துக்குத் தேவையற்ற -பொருந்தாதவைகளை தள்ளி ஒதுக்கி வைத்துவிடவேண்டும்.

## நைன்ரீன் '93

"... புதுக் கவுண்மேன்ற் மாறினது எவ்வளவு நல்லதாய்ப் போச்சு. உந்த வெளிநாட்டுக்காரரை யெல்லாம் புடிச்சு அனுப்பப்போறுங்கள். இனித்தான் நாங்கள் இஞ்ச நிம்மதியா இருக்கலாம்.

- பிரான்ஸில் அகதியாக வாழும்
ஓர் தமிழ் அன்பர்

- சௌமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு சொல் கிளப்பிய தேடல்.

## ஸயன்ஸ்

அநாமிகன்

நான் பாரீஸ் வந்தடைந்ததும் முதலில் பதிவானவற்றுள் 'ஸயன்ஸ்' என்ற வார்த்தையும் ஒன்று. ஆயினும் வார்த்தையால் வெறுமனே நான் கவரப்பட்டிருக்கவில்லை. அவ்வார்த்தைப் பிரயோகம் கொடுத்த அல்லது அவ்வார்த்தை காவிய தகவல் பெரிதும் என்னைத் தாக்கியது.
ஸயன்ஸ் (Science) விஞ்ஞானம் அறிவியல் என்றறிருந்திருப்பது சாதாரணம். ஆனால் புலம் பெயர் வாழ்வில் இவ்வார்த்தை புதிய வட்டாரச் சொல்லாகியுள்ளது. இதற்குத் தோதான சொற்களை அலசிப் பார்க்க வேண்டியுள்ளது.

விஞ்ஞானம், அறிவியல் என்ற வார்த்தைகளால் இன்றைய வாழ்வின் தேவைகள் உணரப்பட்டதொன்று. இதனால் 'ஸயன்ஸ்' பல்வேறு மொழிபேசும் மக்களிடம் நன்கு பரீட்சியமானதும் , கவரப்பட்டதுமான சொல் என்றால் மிகையல்ல. இங்கு அந்தந்த மொழிகளில் வேறு ஓசைகளுடன் இச்சொல் உரைக்கப்பட்டாலும் காவும் தகவல் ஒன்றே. உ.ம். தமிழில் ' விஞ்ஞானம் ' அல்லது ' அறிவியல் .

ஆனால் பிரான்சில், எம்மவரின் புலம்பெயர் வாழ்வில் புதிய பரிமாணமெடுத்துள்ள ' ஸயன்ஸ் ' முற்றிலும் வேறாக தனித்துவம் காட்டுகிறது. இதன் காரணகாரியங்களை மொழியியல் வல்லுனர்கள் ஆய்வுக்குட்படுத்தட்டும்! இந்த 'ஸயன்ஸ்' காவும் அர்த்தம் 1-*தந்திரம் (guile . cunning) 2-ஏமாற்று * (cheat . deceive /trick) 3 -. சுத்துமாத்து அல்லது பேத்துமாத்து என்று வழக்கிலுள்ள சொற்களை நேரடியாகப் பயன்படுத்தினால் உள்நோக்கு அப்பட்டமாய்ப் புரிந்துவிடும். ஆக, ஸயன்ஸ் -தந்திரத்தின் தந்திரம், ஏமாற்றின் ஏமாற்று என்றாகிறது -ஒருவித உயர் தந்திரம், ராஜதந்திரம்! அல்லது ஐரோப்பிய நாயக தந்திரம். "அந்த விடயத்தை பதுமையாக முன் வைத்து 'ஸயன்ஸாக' வென்றுவிட்டேன்" இங்கு எம்மவர் நாக்கில் சரளமாகப்புரளும் வாக்கியத்தில் ஒன்று இது.
இச்சொல்லின் அர்த்தம் புரியத் தொடங்க , நவகாலனித்துவ நிகழ்கால வாழ்வின் தன்மை உடனே மனதில் விரிந்தது. முன்னர் காலனிக்கள். தற்போது அதே காலனிக்கள் இன்று குபேர நாடுகளால் ஸயன்ஸாக கையாளப்படுவதில்லையா ?

மனிதம், மனிதநேயம், ஜனநாயகம், இரக்கம்...... எல்லாமே I. - M. F கடன் கொடுக்க விளையும் போது நிபந்தனைகளை நாசுக்காக முன்வைத்து ஸயன்ஸாக குபேர நாடுகளின் தேவைகளுக்காக ஆட்டிப்படைப்பதில்லையா -முன்னர் குபேர நாடுகள் தம் நலன் தொடர்பாக தமது நாட்டின் தேவைகளுக்காக மூன்நாம் உலக நாடுகளையும்

* க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வறிய நாடுகளையும் வற்புறுத்தி நேரடியாக ஆட்டுவித்தன. 2 ம் உலகப்போரின் முடிவு காலனிகளை கைவிடும் சூழலை ஏற்படுத்தியது. ஆனால் இந்த குபேர ராஜதானிகள் விட்டுவிடுவார்களா? இன்று புதிய வடிவில் அதே நோக்குகளை 'ஸயன் ஸாக ' நுகர்ந்து அடைந்து வருகிறார் கள்.

U. N. O வும் ஜனநாயமும் இன்று நாசுக்காக, நியாயபூர்வமான போர்வையில் அமெரிக்காவாலும், மேற்குலக நாடுகளாலும் 'ஸயன் ஸாக' பயன்படுத்தப்படுகின்றன.

அந்த முதலாளி தனது வேலை களை நிறைவேற்ற தொழிலாளி யுடன் நாசுக்காக உறவாடி "ஸ யன்ஸா"க வென்றடைவதையும் பலராலும் உணரமுடியும்.

இன்னுமேன் நம் யாழ்ப்பாணத் தார் கடன் கொடுக்கல் வாங்கல் களில் நாசுக்கைக் கையாண்டு மிகச்சரளமாக ஸயன்ஸை அரவ ணைத்ததை நினைவுகூராமல்விட முடியாது. கடன் கேட்டுவரும் அயல் வீட்டாருக்கு ' எவ்வளவோ கஷ்டப்பட்டு -பொறுப்பு நின்று- காசை வேறொரு வீட்டாரிடம் பெற் றத்தருவதாகவும் வட்டிதான் கொஞ் சம் அதிகம்.... ஆனால் என்ன செய்வது.... அவசரமாகையால் பெற்றத்தருகிறேன்' என்று நம் வீடு களில் நடந்த சம்பாசனைகளை மறக்கத்தான் முடியுமா?

E. N. L. F. என்றால் மறந்துபோயிருக் காது. இயக்கங்கள் தமக்குள் அமைத்த கூட்டு. போராட்டக்காயங் களால் அனுபவவலி பெற்ற மக்க ளால் எப்படி மறக்கமுடியும் ? இந்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தக்கூட்டும்; ஒவ்வோரு இயக்கமும் மற்ற இயக்கத்துடன் கொண்ட உறவாடலும் "சயன்ஸ்"தானே! அப் போது இந்த வட்டாரச்சொல் தெரிந்திருக்கவில்லே.

எம்மவரின் கனவு நகரமான LONDON ல் வாழ்ந்த- வாழும் - டமில்ஸ் அந்த வெள்ளை அலு வலரிடம் போடும் கூழைக்கும்பீட் டையும், சலாமையும், பின்பு தன் னிடம் வசமாக வாய்க்கும் அப்பாவி தமிழ் மகனிடம் வசூலிப்பதில் லையா! அதில் ஒருவித ஆத்ம திருப் தியையும் , இதன்மூலம் தன்னையும் ஒரு வெள்ளையனாக எண்ணி கற் பனையில் மிதப்பதையும் அறிந்த பாரம்பரியத்தை உடையவர்கள் நாங் கள்.

போராட்டத்தாக்கத்தின் பிசுறுக ளினால் சிதறி குபேரநாடுகளில் வசமாக மாட்டிக்கொண்ட நம்ம வர்கள், அந்தந்த நாடுகளின் 'மிடுக் குகளை' தன்வசமாக்கிக் கொள் வதை உணரமுடியும். பொதுவாக பன்னாடைகளாக புறம்போக்கு அம் சங்களை உள்வாங்கி நடையுடை பாவனைகளாக டாம்பிகத்தன் மையை வெளிப்படுத்துவதில் நம்ம வர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள். இந்த வகையில் 'ஸயன்ஸ்' எம்மவ ரின் வாழ்வுடன் நன்கு புகுந்துவிட் டதில் வியப்பில்லைத்தான் !

இஸ்ரேல் மூலம் மூஸ்லீம் நாடு களைக் 'கவனிக்கும்' குபேர நாடு கள் பொஸ்னியாவில் முஸ்லீம் அழிவில் வடிக்கும் கண்ணீர் - ஆகா.... ஆகா...... ஸயன்ஸதானே ! இந்த கத்தோலிக்கரின் உலக நோக்கில் புதிதாகப் புனையப்படும் அமேரிக்கா என்ற புது நாட்டில் குடியேறிய வறிய கறுப்பர்கள் மீள வும் முஸ்லீம்களாக தங்களை சுதாக ரித்து தனித்துவ கலாச்சார புத்த மைப்பில் எழுகையில் பதறி சீற்றம் கொள்ளும் ஜனநாயகப் பாதுகாவ லனும் அதன் மொத்த விற்பனை யாளருமான கனவான் ஐரோப்பிய - யூகோசுலோவியா முஸ்லீம்களுக் காக எவ்வளவுதூரம் பரிவு காட்டு கிறார்கள்.! ஸயன்ஸ் மிகமிக விஸ் வரூபமாக நடைமுறையிலுள்ளது.

'ஊரோடு ஒத்துவாழ் ' என்ற வாழ்வு நெறிகொண்ட நம்மவர் களும் குபேர மண்ணின் போக் கிற்கு இசைவாகிஒத்துப் போகின் றனர் போலும். ஆனால் அந்த 'ஸ யன்ஸை' நம்மவர் யாரிடம் பிரயோ கிக்கிறார்கள்? நம் மொழிபேசி உறவாடும் நம்மவர்மேல்தானே ..... வேதனை கொப்பளிக்கிறது.

வழிபாடு, உடை, உணவு முதலிய பழக்கவழக்கங்களில் பாரதத்தார் சிதைவுற்று வெள்ளேயரைப்பின்பற் றுவதைக்கண்டித்து 'நீசநாகரீகம்' 'ஸ் வதர்மம்' முதலிய பாடல்களில் பேசிய பாரதிதாசன் (1923) இன்று புலம் பெயர்மண்ணுக்குத்தேவை.

வெள்ளேத்துரை உடைபோ லுடுப்போம் மயிர்
வெட்டிக்கொள்வோம் தமிழ் துப்பிச் செல்வோம் - எனத்
துள்ளுது மற்றொரு நாகரீகம் இதிற்
சொக்குதல் பற்பலர்....

**துப்பிடு பாரதமே.**

- பாரதிதாசன்

0



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேய்மானத்தின் திசையில் எந்தன் தமிழன்னை.

குளித்தபின் காதுக்குள்
குறுகுறுக்கும் தண்ணீர்போல்
ஆங்கிலத்து அரைகுறைகள்
அலட்டும் போது எனக்குள்ளே
ஓர் குமுறல்
மாமரத்துப் பூங்குயிலே
என் தமிழுக்கு என்ன குறை?
ஆங்கிலத்தார் அடிமைசெய்ய
அழகு தமிழ் பொலிவிழக்க
போயிற்று பலகாலம்
கோயிலுக்குப் பூசைசெய்ய
வந்தவொரு வடபுலத்தார்
வாய்வலிக்க ஓதுவித்து
தமிழ் சிதைந்ததொரு காலம்
எல்லாமும் போயிற்று
தேசத்து விடுதலையால்
தமிழ்த் தீங்கெல்லாம் போயிற்று
அந்நியர்கள் அகன்றுவிட
ஆனாலும் பூங்குயிலே
இங்குள்ள தமிழ் மக்கள்
அடிமைக்குப் பிறந்ததனால்
அடிமையாய் வாழ்வதனால்
இன்னும் தமிழ்பேச மறுப்பது ஏன்
தெரியவில்லை.
தமிழ்பேச முனைவோரை
தாழ்த்துவதேன் புரியவில்லை

விடைசொல்லு கருங்குயிலே
தரக்குறைவா தமிழ்ப்பேச்சு?
பட்டணத்துத் தமிழ் பேசி
பாமரராய் கூச்சல்கள் ஓர் புறம்
கோயிலுக்குப் போய்நின்று
கும்பிட்டுக் கேட்டாலோ
வெளவாலின் சத்தம் போல்
வழக் கொழிந்த மொழியின் வற்றாத
உளறல்கள் மறுபுறமும்
பச்சைத்தமிழ்ப் பரிமாறல்
ஒரு புறமும்
அன்னைத் தமிழை அழுத்தியது
போதாதென்று
இன்று ஓர் புது வரவு
தமிழ் மரபைத் தாழ்த்தவென்று
ஈழத்தமிழ் இளைஞரெல்லாம்
இனிதான வாழ்வுதேடி
புதுப்புது நாடுகளை
நாடிப்பறக்கின்றனர்.
நாட்டுநிலை காரணமாம்
நவில்கின்றனர் பொய்ச்சாட்டு
இவர்களைக் கைபிடிக்க

இங்கிருந்து தமிழ் மகளிர்
கட்டைப் பாவாடையும்
குட்டைத் தலைவெட்டும்
குதியுயரக் காலணியுமாய்
ஏறுகின்றனர் விமானம்
இன்னவரின் இருமனமிணையும்
திருமணத்தில்
எழுதவொண்ணாக் கொச்சைக்
கூத்துக்கள்

கோட்சூட்டும் கேக்வெட்டும்
மேல்நாட்டு நடனமுமாய்
தமிழ் மரபைத்தான்கெடுக்கும்
சொந்தமண்ணுக்கிவர்கள் வந்தால்
அரைகுறை ஆங்கிலங்கள்

குளவியென செவிதாக்கும்
பண்பாட்டுக் கோரினமாம் தமிழினத்தை
பாழாக்க வந்த இவரை என் சொல்வேன்.
'அம்மா ' என்று அஃறிணையும்
அன்பாய் அழைக்கும் அழகுதமிழில்
ஆனாலும் பூங்குயிலே
இன்றுள்ள தமிழ்த்தாய்
தன் மழலை'மம்மி' என்றழைத்தாலே
பிறவி பெற்ற பெரும்பயனை
பெற்றவிட்டதாய் மகிழ்வாள்
தங்கத் தமிழ் மொழியாம்
தனித்தொரு வளர் மொழியாம்
நெல் முனையும் பிறமொழியின்
சாயல்படாச் சுடர்மொழியாம்
தங்கத் தமிழ் இன்று.....?
விடை பகர்வாய் தமிழ்க் குயிலே
ஏன் இந்த தேய்மானம் ?
என் தமிழுக்கு என்ன குறை?

**- சிவப்பிரியன்**

பம்பலப்பிட்டி
இந்துக்கல்லூரிமாணவன்

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## — அரசியல் தோழமை

- சகோதரனே !

நீ என்னை "சகோதரி" என்றழைக்கின்றாய்
ஆனால்
நீ பயன்படுத்துபவை
மேல் பூச்சு வார்த்தைகள்.
கனமாய் பேசும்போதுகூட
அதில் உள்ளீடற்ற
ஒரு போலித்தனம்.

என் வேதனையான மௌனத்தை
கேட்கும்போது நம்பிக்கை பெறுகிறாய்
எனக்குத் தெரியும்,
உன் பலமெல்லாம்
என் பலவீனத்தை நம்பித்தான்.

வெளிப்புறமிருந்து
என்னைக் கட்டுப்படுத்தும்
இந்தக் கம்பியையோ
முள் கூண்டையோ
நீ ஒரு போதும் கேள்வி கேட்பதில்லை.
எனக்குத் தெரியும்,
அது தான்
ஒரு ஒடுக்குமுறையாளனின் பங்கு.



இடுப்புக்கு மேல்
என்னை நீ பார்க்கும் போது
முகத்தைப் பார்.
சதையைத் தொடு.
குழந்தைப் பருவ சுகங்களை
மறுபடி கோருவதைப் போல்
மார்பில் அடைக்கலம் தேடு.
எனக்குத் தெரியும்,
உன் கனவுகளுக்காக
உன் மனதில்
என் உடம்பை
ஒரு கோயிலாக இறுக்கி விட்டாய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீ
என் சகோதரிகளிடம்
சகோதரத்துவம் கொண்டாடும் போதும்
என்னிடம்
விசுவாசத்தைக் கோரும் போதும்
எனக்குத் தெரியும்.
நீயே இன்னம் முழுமையடையவில்லை.

பலமுறை நீ என்
நிர்வாணத்தைப் பார்த்திருக்கிறாய்.
என் கண்களைக் கவனித்ததில்லை.
நீ உன்
தூண்டும் ஸ்பரிசத்தால்
என்னைச் சுற்றி வளைத்த போது
இந்த உடம்பின் ஒரு பாகமான
உன்னால்
இந்த உடம்புக்கு உள்ளே
மகிழ்சியும் வருத்தமும்
அருகருகே இருப்பதை
பார்க்க முடிகிறதா ?
என்னை அணிவதை
என் உணர்வுகளோடு விளையாடுவதை
நிறுத்த முடியுமா உன்னால் ?

என்னை
"சகோதரி"

என்றழைக்கும் சகோதரா !
எனக்குத் தெரியும்
என் கால்கள் இரண்டையும்
வலுக் கட்டாயமாய்
விலக்கி வைப்பதற்கான
ஒரு வக்கிரமான தந்திரம்தான் இது என்று.

சகோதரி !
இயக்கத்தைத் தூண்டிவிடு.
போராட்டத்திற்கு குழந்தைகளை உருவாக்கு.

சகோதரனே !
உன் உடம்பினால்
என் உணர்வுகளைக் கற்பழித்து விட்டாய்.
நீயே அறியாத
குற்றங்களின் கடுமையை
பேசியே குறைக்க முயல்கிறாய்.

சகோதரா!

www.tamilarangam.net

உன்னைப் பிணைத்திருக்கும்
மேற்கத்திய விலங்குகளை
நீயே அறியும் போது -
எனக்கு எதிராக உன் மூளையில்
ஒளிந்திருப்பவற்றை
நீயே காணும் போது -
என் அரசியல் முக்கியத்துவம்
தேவையானது என்று
நீயே உணரும்போது -
என்னுடைய பங்கு
தலைமையானது என்று
உனக்கே புரியும் போது -
என் முழுமையை
நீயே கண்ணுறும் போது -
என்னைச் சகோதரி என்று அழை !
அப்போது
என் தோழனாக ஆகியிருப்பாய் !

அயாமைடு ஆசலே
தமிழில்: இரா. விசயகுமார்

* ஒரு படைப்பாளி கீழ்மட்டத்துக்கு இறங்கி வந்து எழுதும்போது, அந்தப்படைப்பில் கலையம்சம் அடிபட்டுப்போவதாக நீங்கள் நினைப்பதில் லையா?

● "கலங்கிய நீரில் ஆழம் தெரியாது தெளிந்த நீரில்தான் ஆழம் தெரியும்"னு புதுமைப்பித்தன் ஒருதரம் சொன்னுர். எளிமையாக எழுதும் போது ஆழம் தெரியுது. வார்த்தையைப்போட்டு குட்டையைக்குழப்பி எழுதறாங்க பாருங்க அதுதான் புரியாது. இலக்கியம்கிறது இப்ப என்ன ஆயிப்போச்சுன்னா, சமஸ்கிருதம் ஆயிப்போச்சு. "நான் எழுதறேன் பார்" என்று பிரமிப்பை ஏற்படுத்துவதற்கே எழுதறாங்க. நம்ம எழுத் தைப்படிச்சுட்டு வாசகன் "நாமகூட இப்படி எழுதலாம் போல இருக்கே" என்று நினைக்கணும். அதுதான் நல்ல எழுத்தெண்ணு நான் நினைக்கிறேன்.

- சு. சமுத்திரம்
(பேட்டியின்போது)

## சிறுபத்திரிகைகள் பற்றி...

சிறுபத்திரிகைகள் என்பது தமிழகத்து கலைஇலக்கிய கலாச்சார சூழலின் பயங்கர கூச்சல்களுக்கிடையே ஒரு சிறுஒலியாக, ஒரு மாறுபட்ட கருத்தாக, சிறுபான்மையினர் எதிர்குரலாக, புதிய கலாச்சார தளங்களை அமைக்கும் நோக்கத்தோடு வெளிவந்து கொண்டிருக்கின் றன. அது சென்றடையும் வாசகர்வட்டம் சிறிது என்றாலும் அது உருவாக்கும் கருத்துவட்டம் உறுதியானது; பலம் வாய்ந்தது. அச்சு இயந்திரங்களின் அரக்கப்பசிக்குத்தீனிபோடும் "இலக்கியங்களுக்கு" இடையே ஒரு அமைதியாக, ஆனல் ஆணித்தரமாக, சந்தடியின்றி, பொருள் தியாகம் செய்து நடந்து வருவபவை இந்த சிற்றிதழ்கள்.

நன்றி : சுபமங்களா




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ஒவ்வோரு மனிதனும் நியாயபூர்வமான மட்டுப்படுத்தப்பட்ட வேலைநேரத்துள் ஊதியத்துடன் கூடிய ஓய்வுக்கு உரித்துடையவன்"

# தொழிலாளர் சிக்கல்கள்

- மாதவன்



ஐந்துவருடங்களாக தொழில் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிவந்த நண்பன் ஒருவன் அண்மையில் வேலையினின்று நீக்கப்பட்டான். காரணம் தனது சேவைக்குரிய சம்பள உயர்வுபற்றி முதலாளியுடன் கதைத்ததுதான்.
இன்னுமொரு நண்பன், ஒரு வருடத்திற்கு மேலாக, ஒரு தொழில் நிறுவன மொன்றில் வேலைபார்த்து வந்தான். தொழிலில் சேர்ந்து ஒரு வருடமளவும் அவன் தொடர்பான தொழில் ஒப்பந்தம் (CONTRACT ) செய்யப்படவில்லை. அந்த ஒருவருடமும் அவன் மிகவும் கஷ்டத்துக்குள்ளானான். இந்நாட்டுச்சட்டப் படி ஒருவர் தொழில் செய்யும்போது அவரது சம்பளத்தில் அவரது சமூகப்பா துகாப்பு நிதி கழிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அனுப்பப்படுகின்றது. அதே போல் அவருக்கு வேலை இல்லாத காலங்களில் உதவுவதற்கான பாது காப்பு ஏற்பாடுகள் தொடர்பாகவும் பணம் கழிக்கப்படுகின்றது.

நண்பனுக்கு வேலை ஒப்பந்தம் இல்லையென்ற காரணத்தால் சமூகபா துகாப்பு நிறுவனத்தின் உதவிகளை இழந்தான். அக்காலப்பகுதியில் அவன் பெறக்கூடிய மருத்துவச் செலவுக்கான பெருந்தொகையையும் இழந்தான். அடுத்து, சட்டப்படி அவனுக்குரிய வேலை ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஒப்பந்தத்திலும் அனைத்தும் தெளிவாக எழுதப்பட்டிருந்ததாயினும் நடைமுறை யில் எதுவும் கவனிக்கப்படவில்லை. கடந்த ஒருவருடமும் எப்படியோ அப்படியேதான். நாளொன்றுக்கு 10 மணி நேரவேலை, வாராந்தம் 6 நாள் என்றும், அனைத்து அரச விடுதலை நாட்களும்வேலையென்றும், ஞாயிறு வேலையென்றும் வேலை வாங்கப்பட்டது. அதைவிட இந்த நாட்டில் மிகக்கு றைந்த சம்பளமாகக் கணிக்கப்பட்டுள்ள 'சிமிக்' அடிப்படைச்சம்பளமே பெற்றுவந்தான்.
ஒரு சம்பள தினத்தன்று துணிந்து தன் சம்பள உயர்வுபற்றிக் கேட்டுவிட்டான். தொழில் உரிமையாளனோ ஏதோவெல்லாம் கூறிச் சமாளித்தான். நண்பன் விட்டுக்கொடுப்பதாயில்லை. தனது மாதாந்த வேலைக்குரிய சரியான சம்பளம் கணக்கிடப்படல் வேண்டுமெனவும் அதாவது பத்து மணிநேர வேலைப்படி வாராந்தம் ஆறு நாள் மொத்தம் 240 மணி நேரவேலைக்குரிய சம்பளம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கணக்கிடப் படல் வேண்டு மெனவும் வாதாடினான். உரிமையாளன் தடுமா றினான். பிறகு ஒருமாதிரி தன்னைச்சுதாகரித்துக்கொண்டு "சரி வேலையைக்க வனி பார்க்கலாம்" என்று அனுப்பிவிட்டான். ஒரு வாரம் கழித்து அடுத்தடுத்து இரண்டு பதிவுக்கடிதங்கள். ஒன்று, அவன் வேலையில் கவனமில்லாமல் இருப்பதால் எச்சரிக்கின்றனவாம். அடுத்தது, அதற்கும் அடுத்தவாரம். அவனை வேலை நீக்கம் செய்வது தொடர்பான விசாரணைக்காம். விசாரணைக்கு சென்ற அவனிடம் கடமையில் கவனமின்மை, மேலதிகாரிகள் சொன்ன வேலைகளை செய்யமறுத்தமை போன்ற அநியாயமான குற்றச்சாட்டுக்கள். நியாயத்தை கேட்டான். அவர்கள் தம்மையே நியாயப் படுத்தினார்கள். வேலைபோனது. இன்று வேலை தேடி அலைந்து கொண்டிருக்கிறான்.

இந்த நிலை எம்மில் பலருக்குள்ளது. எமது உரிமைகளைச் சரியாக அறிந்து கொள்ளமுடியாத நிலையில் - தொழில் தருனரின் கெடுபிடிக்குள் சிக்கிக்கிடக்கிறோம். தனிப்பட்ட முறையில் ஒரு பலமான எதிரணியை நம்மால் எதிர்க்கமுடியாதென்பதும் உண்மையே. ஆனால் சட்டப்படி அமைக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் மூலமாக -அவர்களுடன் எம்மையும் இணைத்துக்கொண்டு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கலாம்.

தொழிற் சங்க அமைப்புக்கள் தொழில் ரீதியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தாம் பணியாற்றும் நிறுவனங்கள் தொடர்பாகவும் அவற்றின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் அங்கே ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள வசதிகள் உண்டு. எமது தொழில் தொடர்பாக - அது சார்பான சட்டங்கள், நடைமுறைவிதிகள், கூட்டு ஒப்பந்தங்கள் தொடர்பாக நாம் பலவிடயங்களை அறியாமல் இருக்கி றோம். இக்காரணங்களால் பலர் அன்றாடம் பல தொழிற் சிக்கல்களைச் சந்தித்தும் அவற்றை நிவர்த்திசெய்ய முடியாத நிலையில் தம் தொழிலையும் வருமதிப் பணத்தையும் இழந்துள்ளமையும், பலர் மென்மேலும் தொழில் கொள்வோரின் பிடிக்குள் சிக்கி மீள முடியாமல் தம்மையே இழந்து வருவதை யும் காணக்கூடியதாயுள்ளது.

தொழிற்சட்டம் (CODE DE TRAVAIL), இந்நாட்டின் தொழில் தொடர்பான பொதுவான சட்டமாகும். இதைவிட கூட்டு ஒப்பந்தம் ( CONVENCTION COLLECT-IVE), நடைமுறைவிதிகள் (REGLEMENT INTERIEUR) ஆகியன தொழில் தொடர்பாக நாம் அறிந்திருக்க வேண்டிய பகுதிகள்.

மேலும் இச்சட்டங்களுக்குட்பட்ட வகையில் தொழில்கள் வகைரீதியாகப் பிரிக்கப்பட்டு அதற்கேற்ப தொழில் கொள்வோர் சங்கங்கள் -தொழிலாளர் சங்கங்கள் மத்தியில், தொழிலாளர் நன்மைகருதி கூட்டு ஒப்பந்தங்கள் (CONVEN-CTION COLLECTIVE) , செய்யப்பட்டு நாடு முழுவதும் நடைமுறையில் உள்ளன.

இவைதவிர ஒவ்வொரு தொழிற்தாபனமும் தொழிற்சட்டம், கூட்டு ஒப்பந்தம் ஆகியவற்றுக்குட்பட்ட வகையில் தமக்குரிய நடைமுறைவிதிகளை(REGLEMENT INTERIEUR ) ஆக்கிக் கொள்ளவேண் டும். இவ்விதிகள் அத்தாபனத்தில் பணியாற்றும் பணியார் பிரதிநிதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரின் ஆலோசனைக்கும் சமர்ப்பிக்கப்பட்டு பின் தொழில் பரிசோதகரின் ( INSPECTEUR DU TRAVAIL) அனுமதி பெறப்படல் வேண்டும். தொழில் செய்யும் இடம், பணியாளர்கள் உட்செல்லல் -வெளியே றல் தொழில் நிலையத்தின் உரிமைப்பொருட்களைப் பயன்படுத்தல் தொடர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பான விளக்கங்கள், மற்றும் வேலைக்கு பிந்திவருதல் அல்லது வராமல் விடுதல் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் ( உதாரணமாக-ஒருவர் சுகவீன காரணமாய் வேலைக்குச் செல்லவில்லையாயின் அது தொடர்பான மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் 48மணிநேரத்துள் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்) முதலியன இந்நடைமுறை விதியில் விளக்கப்பட்டிருக்கும்.
ஒழுக்காற்று நடவடிக்கைகள்: தொழிலாளி ஒருவர் குற்றம் செய்தால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள். இவை பொதுவாக நாம் அறிந்திருக்கவேண்டியவை.

அவையாவன:-
(அ) குற்றம் தொடர்பாக அவரை எச்சரித்து கடிதம் அனுப்புதல்,
(ஆ) சம்பளமற்ற வேலை இடைநிறுத்தம்,
(இ) செய்யும் வேலைப் பதவியினின்று கீழிறக்கிவிடுதல்,
(ஈ) வேலை செய்யும் பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு மாற்றிவிடல்,
(உ) வேலைநீக்கம் செய்தல்- கடுங்குற்றமாயின் முன்னறிவித்தலும் -சேவைப்பணமுமின்றி நிறுத்துதல்.

மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் தொடர்பாக அவரது பாதுகாப்புக் கருதி தொழில் கொள்வோர் செயற்படவேண்டிய முறைகளும் இவ்விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணம்: ஒருவர் மேற்காட்டிய 'அ' தவிர்ந்த ஏனைய தண்டனைகட்கு உள்ளாக்கப்படுமுன் அவர்,
* எழுத்துமூலம் அழைப்பாணை கொடுக்கப்பட்டு - விசாரிக்கப்படல்வேண்டும்.
* அவ்வாறு நடைபெறும் விசாரணையின் போது அந்நிறுவனத்தில் பணியாற்றும் ஒருவர்(குறிப்பாக பணியாளர் பிரதிநிதி அல்லது தொழிற்சங்கப் பிரதிநிதி) அவருக்கு உதவ அனுமதிக்க வேண்டும்.
* அவ்வாறு நடைபெறும் விசாரணையின்போது குற்றங்கள் பணியாளருக்கு தெரிவிக்கப்பட்டு அதற்குரிய விளக்கங்கள் பெறப்படல்வேண்டும்.
* விசாரணை நடைபெற்று ஒரு மாதத்துள் தண்டனை வழங்கப்படலாம்.

சுகாதாரம் தொடர்பாக:
தொழில் செய்யும் இடத்தில் மதுபானம், போதைவஸ்து பாவித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது தொடர்பான விளக்கங்கள் காட்டப்பட்டுள்ளன. மற்றும் தொழில் செய்யும் இடத்தில் வைத்தே உணவுகொள்ளல்-அவை தொடர்பான விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புத் தொடர்பாக:

பொதுவாகவுள்ள பாதுகாப்பு விதிகளை மீறல் குற்றமாகும். (உதாரணமாக புகைத்தல் தடைசெய்யப்பட்ட பகுதிகளில் புகைத்தல் , பாதுகாப்புக்கருவிகளை தேவையற்றவிதத்தில் கையாளல் )
எந்த ஒரு வேலையாளும் தான் வேலை செய்யும் இடம் சுகாதாரத்திற்கும், பாதுகாப்புக்கும் பங்கமாயிருப்பதாக உணர்ந்தால் அது தொடர்பாக எழுத்தில் தன் வேலைகொள்வோருக்கு அறிவிக்கலாம். இது சட்டப்படியான அவரது உரிமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்காட்டிய நடைமுறைவிதிகள் தொடர்பான அனைத்தும் தொழிற்சட்டம் art. L 122. 33 ல் இருந்து art. L 122. 39 வரைக்குட்பட்டதாகும். இவ்விதிகள் தொழில் நிறுவனத்தில் அனைத்துத் தொழிலாளர்பார்வைக்கும் பொதுவான இடத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பது சட்டம்.

ஒரு தொழிலாளி நியாயமான முறையில் நடந்துகொண்டாலும் தொழில் கொள்வோரின் கெடுபிடிகளால் மிகவும் பாதிப்படையவும் சாத்தியம் உண்டு. புதிதாக ஒருவர் வேலைக்குச் சேர்க்கப்படும்போது அவர் தொடர்பாக ஒரு வேலை ஒப்பந்தம் செய்யப்படல்வேண்டும். அவரது தொழில் தன்மையைப் பொறுத்து ஒன்றில் இருந்து மூன்று மாதங்கள் வரையான தகுதிகாண்காலம் அவ்வொப்பந்தத்தில் குறிக்கப்பலாம். ஞாயிறும் அரச விடுமுறைதினங்களும் இந்நாட்டின் விடுமுறைதினங்களாகும். எனினும் தேவையின் நிமித்தம் சில நிறுவனங்கள், தொழிற்தாபனங்கள், வர்த்தக நிலையங்கள், அந்நாட்களில் வேலைசெய்ய சட்டப்படியும் அனுமதிகளுண்டு. எனினும் தொழிலாளர்களுக்கு சுழற்சி முறையில், அல்லது அந்நாட்களை ஈடுசெய்யக்கூடிய வகையில் மாற்று விடுமுறைதினங்கள் சட்டப்படி உரிமையானதாகும். இதைவிட வருடாந்த விடுமுறையும் (CONGE ANNUEL) உண்டு. அரச விடுமுறைதினங்களில் வேலை செய்வது தொடர்பாகவும், அத்தினங்களுக்குரிய மேலதிக கொடுப்பனவுகள் தொடர்பாகவும் கூட்டு ஒப்பந்தங்கள் விரிவான விளக்கங்களைக் கொண்டிருக்கும்.
மேலும் மாதாந்தம்169 மணிநேர வேலை சட்டப்படியானதாகும். இது வாராந்தம் 39 மணிநேர வேலையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சில தொழில்களின் தேவைகருதி மாதாந்தம் 173 மணிநேர வேலையும் ஒப்பந்தத்தில் குறிக்கப்படுவதுண்டு. எனினும் மேலதிகக் கொடுப்பனவுகள் கூடிய நேரவேலைக்குக் கணக்கிடப்படல்வேண்டும். குடும்பத்தில் ஒருவருக்குத் திருமணம், அல்லது வேலையாளருக்குத் திருமணம், வீட்டில் குழந்தை பிறப்பு, பெற்றோர் அல்லது குடும்பத்தில் ஒருவர் இறப்பு ஆகியன தொடர்பாக சம்பளத்துடன் கூடிய விடுமுறைகள் அவர்களது சேவைக்கால அடிப்படையில் பெற்றுக்கொள்ள வசதிகள் சட்டப்படியும், கூட்டு ஒப்பந்தத்தின்படியும் உள்ளன. தொடர்ச்சியாக 5 மணிநேரம் வேலைசெய்யும் ஒருவருக்கு 15 நிமிட நேர ஓய்வும், எட்டு மணிநேரம் தொடர்ச்சியாக வேலைசெய்யின் 30 நிமிட நேர ஓய்வும் சட்டப்படியுண்டு.

எனினும் இவற்றையெல்லாம் உரித்தாக்கமுடியாத நிலையில் எத்தனையோபேர் கஷ்டப்படுகிறோம். சம்பளஉயர்வு பற்றியோ அல்லது ஏதாவது அடிப்படைஉரிமைகள்பற்றியோ பேசிவிட்டால் தொழில் கொள்வோர் எம்மீது எடுக்கும் நடவடிக்கைகள் மிகக் கடுமையானவையாகவே அமைகின்றன.

எனவே ஆரம்பத்திலேயே எமது உரிமைகள் எவை என்பது பற்றித் தெரிந்து தெரிந்துகொள்வதும், அவை மறுக்கப்படும்போது பணியாளர் பிரதிநிதிகள் -தொழில் தருனர் மாதாந்த கூட்டத்தில் இவ்விடயங்கள் பற்றிப் பேசி ஒரு தீர்வுக்கு வருவது எம்மை நாம் இழப்பதிலிருந்து தடுக்கும் ஆரம்ப வழிமுறையாகும். அங்கும் அடுத்தடுத்து நிராகரிக்கப்பட்டால் அது தொடர்பாக உடன் தொழில் பரிசோதகர்களுக்கு(INSPECTION DU TRAVAIL) அறியத் தர வேண்டும்.
எல்லாவற்றிற்கும் மேலாக எம்மை தொழிற்சங்க அமைப்பொன்றில் இணைத்துக்கொண்டு வேண்டிய வழிகாட்டுதலைப்பெறுவது இலகுவானது. ◻



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போ ரா ளி

அவனது அறையில் ஒருவித நிசப்தம். மேசையிலிருந்த மணிக்கூடு புதுவித ஓசையோடு ஊர்ந்து கொண்டிருந்தது.

கால்கள் பின்னிநீள, இருகைகளும் மடிந்து பிடரிக்கு அணைகொடுக்க அவன் அசுவாசமாகப் படுத்திருந்தான். மனம் எங்கெங்கோ அலைந்தது. சுழன்றுகொண்டிருந்த கருவிழிகள் சுவரில் புதிதாக வாங்கிக் கொழுவியிருந்த மான் குட்டியில் லயித்தது. தாய்மானோடு குட்டி..

குட்டி மெதுவாக அசைவதுபோல இருந்தது. பார்வையைக் கூர்மையாக்கினான். முன் அடிவைத்துத் துள்ளியது. பின்திரும்பித் துள்ளியது. பின் திரும்ப.... திரும்ப..... துள்ளி... துள்ளி..... துள்ளித்துள்ளி..... துள்ளி.....

ஆகா! என்ன அழகு !

மெதுமெதுவாக அவனை அண்மித்தது. அவனது மார்பில் தவழ்ந்தது.....

இப்படித்தானே சயந்தனும்......
நெஞ்சில் பலமான அடி!

'எண்பதுகளின் பிற்பகுதி. யார்யாருக்கோவாகவெல்லாம் இரவோடிரவாக இயக்கங்களோடு ஓடி, வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு , அந்த யார் யாரோவெல்லாம் துரோகப்பட்டம் சுமந்து, மனம் கசங்கிக் கொண்டிருந்த காலம். ஆருமில்லை அனாதைகள். இந்தியத்தளம்.
அன்றும் அந்தக் 'காம்ப்' உணவுக்கூடம் வெறிச்சோடிக் கிடந்தது. வேறு வழியில்லை, வேட்டைக்குப் புறப்பட்ட கூட்டத்தோடு சயந்தனும் சேர்ந்து கொண்டான்.
கலைத்து, கொன்று பிடித்த தாய்மானோடும், காலில் சிறு காயத்தோடு பிடிபட்ட மான்குட்டியோடும் 'காம்ப்' திரும்பினர்.

சயந்தன் மான்குட்டியின் காலுக்கு மருந்து போட்டான். அதன் குழந்தைமுகம், ஆதரவற்றநிலை, வருடிக்கொடுத்தான்.
அந்த மான்குட்டியைக் கொன்று சமைப்பதற்கு அவன் அனுமதிக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல மான்குட்டி அவனோடு மிகவும் நெருக்கமானது. அவனுக்கு முன்னும் பின்னும் சுற்றித்திரிந்தது. அவன் மடியில் மார்பில் தவழ்ந்து விளையாடியது.

ஒருமாதம் போயிருக்கும். ஒரு மாலை. சயந்தன் வெளியே போய்விட்டு திரும்பி வந்தான். 'காம்ப்' கோடியில் மான்குட்டி தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருந்தது. நிலத்தில் இரத்தம் சொட்டிக்கொண்டிருந்தது. அந்தக் காட்சியைப் பார்த்தவன் தான். அப்படியே மயங்கிப்போனான். பிறகு அவன் எழும்பவேயில்லை.'



தவழ்ந்து கொண்டிருந்த மான்குட்டி கோபத்தோடு முறைத்தது. எட்டி உதைந்தது. மீண்டும், அமைதிஇயக்கத்தில் பின்னோக்கி நகர்ந்து பழையபடி சுவருக்குள் மறைந்தது.

- சௌமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# ஊஞ்சல்

- வாசுதேவன்

கோளத்தின் மேற்புறம். தோற்றத்தில் அண்ணளவான எண்கோணத் தரைத்துண்டம். கோடைக்காலம்.

தெற்கிலோரிடத்தில், தலையை உள்ளேயிழுத்து என் ஓடுகளுக்குள் உறங்கிக்கொண்டிருக்கிறேன்.
பட்டப்பகல்.
சுட்டெரிக்கும் சூரியன்.
அடித்து மூடப்பட்ட யன்னல்களையும் மீறி உள்ளே வரமுயலும் ஒளிக்க திர்கள். கண்டுணரமுடியாத காற்றின் சுமையைப் புலப்படுத்தும் கணங்களின் தரிசனங்கள். கால அகலியைக் கல்லாக்கி கண்முன் நிறுத்தும் தூரத்து நினைவுகள். அறையென்று வரையறுக்கப்பட்ட இந்த என் ஆமையோட்டில் மூச்சடக்கும் வேதனை. வெளியே வெய்யில்.

வெய்யில்.
அதே சூரியன். அதே வெய்யில். ஆனால் இப்போ செஞ்சைமுட்டி மூச்சடைக்க வைக்கிறது. தகிப்பது வெப்பமல்ல. நினைவுக்கண்டல்கள்.
தண்டிக்கப்பட்ட நினைவுகள். தண்டிக்கும் நினைவுகள்.
இயலாமை கால்களை இழுத்து வெளியே கொண்டு செல்ல, பாதைக்கும் மனத்துக்கும் பகை பரிணமிக்கின்றது.
பக்கத்துப் பூங்காவில் குழந்தைகளுக்காகக் கட்டப்பட்டிருந்த ஊஞ்சல்கள் இரண்டில் ஒன்றில் அமர்கின்றேன்.

தூங் அருகிலுள்ள ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள்.
அருகிலிருந்து ஊஞ்சலாடும் அவளின் குரல் எனக்குத் தொலைவில் இருந்து கேட்கிறது.
தூங் வியட்னாம் நாட்டிலிருந்து விபரம் தெரியா நாளில் விதியால் கலைக்கப்பட்டவள்.
அவள் ஊஞ்சலில் ஆடுகிறாள். ஆடிக்கொண்டே கதைத்தும் கொண்டிருந் தாள். ஏழுவயதாம். இறந்த காலமாம். படகொன்றில் தப்பியவளாம். தாய் தவறித் தண்ணீரில் விழுந்தாளாம். மீண்டும் வரவில்லையாம். தமையன் எங்கோ காட்டில் இருக்கிறானாம். இறந்துமிருக்கலாமாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மரணமென்றால் என்னவென்று இவளுக்குப் புரிந்துவிட்டது.
"புறப்படுதல் " என்றால் " இறத்தல் " என்று எவனோ சொன்னது இவளுக்கும் தெரியுமாம்.
கண்ணைமூடி அசையாமல் ஊஞ்சலில் இருந்து ஆடிக்கொண்டிருக்கும் நான் அவளின் கதைகளைக் கேட்பதுபோல் பாசாங்கு செய்து என்கதையையே கேட்டுக்கொண்டிருக்கிறேன். அவளும் சிலவேளை எனக்குக்கூறுவதாகப் பாசாங்கு செய்து தனக்கே தன்கதையைக் கூறலாம்.
இதமாக வெயில் சுட்டெரிக்கிறது.
தலைக்குமேல் வேப்பமரம். காகக்கூட்டம். வடக்கே பனங்கூடல். வயல்வெளி. கூனல்பூவரவு. அருகிப்போன புல்லை அவாவுடன் பிறாண்டி மண்ணையும் சேர்த்து மென்று விழுங்கும் மாடுகளின் கூட்டம். கொழுத்தும் வெயில். குடிசைகளுக்குள் மனிதர்கள் சயனம்.

மதியவெயில் மனிதர்களை வீட்டிற்குள் சிறைப்பிடிக்க, வெயிலின் நண்பன் நான் வெளிப்பயணம் போகிறேன். பட்டமும் நூலும் வாலும் நானும். வழமைபோல் பூவரசமரத்தின் முதுகில். இதமான காற்றில் பட்டமும் இதயமும்.
கள்ளிமரங்களின் பின்னால் கோவில். விழாக்கோலம் முடிந்துபோன வெறும் கோவில். விரவிக்கிடக்கும் வெறும் இளநீர்க்கோம்பைகள். காய்ந்துபோன தீர்த்தக்கால்வாய். பத்துநாள் படையெடுத்துச் சுற்றவர உள்ள மனிதர்கள் விழாக்கோலம் கொண்டு விட்டுவிட்டுப்போன கோவில் மணியின் சலனமற்ற சயனம். ஓசைகள் உறங்குகின்ற மயானம். ஆலயம்.

திசையெல்லாம் கைகளை நீட்டி திட்டியில் நிமிர்ந்து நிற்கும் வேப்பமரம். கோவில் வேப்பமரம். இம்மரத்தில் ஏறுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. கடவுளின் மரம். ஏறுபவர் தண்டிக்கப்படுவர். பெரியவர்கள், முதியவர்கள் கூற்று.

பட்டம் பறக்கிறது. பூவரச மரக்கிளை நூல்பிடிக்கிறது.

நாலு பக்கமும் சுற்றிப்பார்த்துவிட்டு, யாரும்காணாமல், வேப்பமரத்தின் உச்சியிலிருந்து வேடிக்கை பார்க்கிறேன். கடவுளின் வேப்பமரத்தின் உச்சியில் இருந்து ஊர் முழுவதையும் ஒரே பார்வையில்.

ஒற்றைப்பனையின் உச்சியில் பருந்து. தூரத்தில் எருவைப்பொறுக்கி தலையில் உள்ள கடகத்தில் போடும் சிறுமி. தலைப்பாகையை இறுகக்கட்டி துவிச்சக்கரவண்டியை மிதிக்கும் பொன்னையர். மிளகாய்த் தோட்டத்தில் கிளிகலைக்கும் சிறுவன். மிகுதி சயனத்தில்.

ஒற்றைப்பனை உச்சியிலிருந்து எழுந்து உயர்ந்து பருந்து பறக்கிறது. பருந்தின் பார்வைக்குள் என்பார்வை. இரைதேடி . பட்டத்தைவிட உயர்ந்து எழும் பருந்தின் பார்வைக்குள்ளிருந்து அசையாமையில் ஆழ்ந்துபோன என் கிராமத்தின் ஆத்மாவைத் திருடனைப்போன்று பருகுகிறேன்.

தூங் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருக்கிறாள்.
ஓங்கி நிலத்தில் உதைந்து .....பின்னோக்கியெழுந்து ....மீண்டும் தாழ்ந்து.....உந்தி....முன்னோக்கியெழுந்து....ஊஞ்சலாடுகிறுள். அவளின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துல்லியமான கணீரென்ற குரல் காதுகளில் வருடலை ஏற்படுத்துகின்றது. இவள் கடவுளின் குழந்தையாம். அப்படித்தான் அவள் தந்தை சொன்னாராம். தான் ஒருநாள் இறந்து போனாலும் கடவுள் அவளைக் கைவிடமாட்டார் என்றும் சொன்னாராம். தான் பௌத்த மதத்தைச் சார்ந்தவளாம். சாந்தியே உருவான புத்தரைதன்னுள்ளே கொண்டுள்ளாளாம்..

தூரத்திலுள்ள தெங்கம் குளத்தின்மேல் கோட்டான்களும், கொக்குகளும் பறக்கின்றன. எத்தனை அற்புதமானவொரு கனவை நான் நேற்றுக்கண்டேன். கல்லுடன் கட்டி என்னை யாரோ கடலில் போட்டார்கள். தெய்வாதீனமாகக் கடலுள் தாழவில்லை. கட்டியபடியே நான் கல்லில் அமர்ந்திருக்கஇ கல்லே தோணியாகி என்னைக் கரைசேர்த்தது . நான் கடவுளின் குழந்தை. வேப்பமரத்தில் ஏறினால் சாமி என்னைத் தண்டிக்காது. என் பட்டம் இன்னமும் பறந்து கொண்டிருக்கிறது. இடுப்பிலிருந்து இளகிவிட்ட சாரத்தை இறுகக்கட்டியவாறு இறங்கி நடக்கின்றேன். இதமான கொதி வெயில். கோவில் மண்டபத்தில் ஆடுகள். பொருக்கு வெடித்த என்தோல் வியர்வையில் மினுங்குகின்றது. குடித்த கஞ்சி செமித்துவிட்டது. பசியெடுக்கவில்லை. பூவரசமரக்கிளையிடமிருந்து பட்டத்தின் நூலை வாங்கிக்கொண்டு அண்ணாந்து பார்க்கிறேன். சூரியன் இலேசாக மேற்கை நோக்கிச் சரிகிறான். பட்டம். நூல். காற்று. நான். சம்பந்தனுக்கு மூன்று வயதில் ஞானம் கிடைத்ததாம். ஒவ்வொருமுறையும் வகுப்பில் முதலாம் பிள்ளையாய்வரும் எனக்குமட்டும் ஏன் இன்னம் கிடைக்கவில்லை. அண்ணாந்து பார்க்கிறேன். என்பட்டம் சனலமின்றிப் பறக்கின்றது.

"பட்டம் அறுந்த நூல்போல் பரிதவிக்கவிட்டாயே" இப்படித்தான் பாப்பாக்காவின் கொப்பியில் எழுதப்பட்டிருந்தது. பாவம் அவள். சின்னவயதிலேயே தாய் இறந்துவிட்டாளாம்.
பட்டத்தையும் நூலையும் மாறி மாறிப்பார்க்கின்றேன்.
பட்டம் அறுந்தால் நூல்?
பாவம் பாப்பாக்கா.

பட்டத்தில் நான்புகுந்து, பட்டத்தின் நூலாகி, பட்டம் விட்டுக்கொண்டிருக்கிறேன். எனக்கும் இப்பட்டத்திற்கும் உறவில்லை. பட்டமும், கயிறும், பாப்பாக்காவும் நானும் ஒன்றுதான். மண்ணெடுத்த கிடங்கின் விளிம்பில் நின்றவாறே நூலை உன்னி மேலும் பட்டத்தை உயற்றுகிறேன்.
தூங் ஊஞ்சல் ஆடுகிறாள்.
நரகத்தின்மேல் ஊஞ்சல்கட்டி, கண்ணைமூடிக்கொண்டே, அசையாமல் ஊஞ்சலாடும் அருமைக்கலை. நான் அசையாமல் ஆடுகிறேன். அவளின் படகில் இருந்து தவறிய தாய் மீண்டு வரவில்லை. என்படகில் இருந்து நான்மட்டும் தப்பிக்கொண்டேன். கேவலமாக. பிரளயத்துக்கு முன் புறப்பட்ட படகு "நோவா" வின் படகில்போன்று என் படகிலும் எல்லாப் பிராணிகளும் ஜீவன்களும் இருந்தன. பின்னர் ஏற்பட்ட தாழ்வில் எல்லாம் தாண்டுவிட்டது. கல்லைக்கட்டிக் கடலில் போட்டும் நான் மீண்டு விட்டேன். மறுமுறை எனக்கு நானே கல்லைக்கட்டிக் கடலில் பாய்வேன். கடவுள்கள் கோமாளிகள். தூங் உஞ்சல் ஆடுகிறாள்.

மாரியில் நிரம்பி வழியும் இந்த மண்ணெடுத்த கிடங்கு வரட்சி காணப் போகின்றது. பாவம் இந்த மீன்கள். இவற்றிற்குத் தண்ணீர் வற்றப்போகும் விடயம் தெரியாது. மீன்கள் பாவம். மீண்டும் மாரிவரும்போது இவை மீண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிதாகப்பிறக்கும். கோவில்க்குளத்தில் இன்னமும் தண்ணீர் இருக்கின்றது. நிலத்தை விறாண்டி வறுமைப்புல்லையுண்ட இந்த வெயில்வெளி மாடுகளின் தாகத்தைத் தணிக்க இன்னமும் தண்ணீர் இருக்கின்றது. கோவில் குளத்தை நம்பி வரட்சிக்கு அஞ்சாத மாடுகள்.

காலில் நெருஞ்சிமுள் குத்திவிட்டது. சப்பாணியாய்குந்தி முள்ளையெடுத்துவிட்டு கசியும் இரத்தத்தில் எச்சில் போடுகிறேன். இரத்தத்தின்மேல் எச்சில் மருந்து. பின்னால் மண் ஒட்டிக்கொள்ளும். வலிபோய்விடும். நிலம் சுடுகின்றது. குந்தியிருக்கச் சந்தோசமாக இருக்கின்றது. எவ்வளவு வடிவான குறுனிக்கற்கள்.
பசுக்கல்லு, கண்டுக்கல்லு, நாய்க்கல்லு, மரக்கல்லு, கோழிக்கல்லு, முட்டைக்கல்லு, குஞ்சுக்கல்லு, மனுசக்கல்லு, கடவுள்கல்லு. . . . . எவ்வளவு குறுனிக்கற்கள். முகிலும் அப்படித்தான்.

முதளமாதிரி, முருக்கங்கல்லுமாதிரி, பாறாங்கல்லுமாதிரி, பனங்கொட்டைமாதிரி, சந்திரன்மாதிரி, அமாவாசைச் சந்திரனுக்க இருக்ககிற ஔவையார் மாதிரி, தமிழ்ப்பாடக் கொப்பியில கீறிய தாமரைப்பூ மாதிரி. . . .

தூங் ஆடுகிறாள். அவளின் ஊஞ்சல் முன்னோக்கியும் பின்னோக்கியும் உயரும்போது அவளது குரலைக்கறைப்படுத்தும் இரக்கமற்ற இடைவெளி. இடைவெளிகளுக்கு எப்போதுமே இரக்கமிருந்ததில்லை. அவற்றிற்கு ஏமாற்றத்தை அளிக்கமட்டுமே தெரியும். அவளுக்கும் பள்ளிக்கூடம் போகவிருப்பமில்லையாம்.

புத்தகங்களிலும் ஆசிரியர்களிலும் வெறுப்பு. அர்த்தம் தெரியாத தேவாரங்களை நாள்முழுவதும் பாடமாக்குவதில் வெறுப்பு. பள்ளிக்கூடம் போவதாகப் புறப்பட்டு, புத்தகங்களுடன் வேப்பமரத்தில் ஏறியிருந்து, மாலைவீடு வந்த மகிழ்ச்சிகள். எழுத்துகளில் வெறுப்புற்று ஏதுமறியாத அப்பாவிபோல் சிலேற்றுகளை உடைத்த சம்பவங்கள். வாத்திமார் எல்லோருமே பொய்யர்கள். இவர்களும் பள்ளிக்கூடமும் இல்லாவிட்டாலும் எருப்பொறுக்கும் சிறுமியிடம் எவ்வளவு விடயத்தை அறிந்திருப்பேன்.

வடக்கு வெளியில் வயல்களுக்குள் ஆட்காட்டி முட்டையிடும் அனைத்து இடங்களையும் அவள் அறிந்திருக்கிறாள். கூனிப்பதுங்கிச் சென்று குழிகளுக்குள் ஆட்காட்டியிடும் முட்டைகளையெல்லாம் தினமும் சோதனையிடுவாள். பினனர் குஞ்சுகளையும் சோதனையிடுவாள். எல்லாம் பறந்து போனதுக்குப் பிறகும் கவலைப்படமாட்டாள்.
அடுத்த முறையும் முட்டையிடும். பொரிக்கும். பறக்கும்.
பறந்தது முட்டையிடும். பொரிக்கும். பறக்கும்.

அவளுக்கு ஆட்காட்டியைப் பற்றி எல்லாம் தெரியும். ஒவ்வொருநாளும் உச்சிவெயிலில் கடகத்தைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு போற அவளுக்கு ஆட்காட்டிகள்தான் சினேகிதிகள். அவளும் ஆட்காட்டிகளைப் போல. பள்ளிக்கூடம் போவதில்லை. தான் வேலைக்காரியாம். வடக்கத்தையாள். வாய்க்காரியென்றெல்லாம் சொல்லுவினமாம்.
பாவம் அவள்.
உடுப்பு மூட்டையைத் தூக்கிக்கொண்டு குளக்கரையில் போனவள் திரும்பிவரவில்லை. "வீட்டுக்குப்போகணும் போல இருக்க" என்று அடிக்கடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லும் அவள் "வீடு" போய்விட்டாள்.
வெய்யில், ஆட்காட்டி முட்டை, குஞ்சு, அவள், பறப்பு....

நீண்டநேரமாக வயலில் இருந்து யோசித்த என் மண்டை சூடுபிடிக்கின்றது. வீட்டைவிட்டுப் போன பலர் மீண்டும் வீடுதிரும்புவதில்லை. சுப்பிரமணியமும் அப்படித்தான் ' எஸ்ரேட் ' ல இருந்து வந்தவன். நன்ருக விறகு கொத்துவான். பாவம் சுப்பிரமணியம். மிளகாய்க்கண்டுக்கு அடிக்கவாங்கிய பொலிடோலைக் குடித்துக்கொண்டுதான் அவனும் வீட்டுக்குப் போனான். இரண்டு நாளைக்குப்பின்னர் அவனின் உடலை மிளகாய்த்தோட்டத்துக்குள் ஜனங்கள் கண்டுபிடித்தார்கள்.


சுப்பிரமணியன்களைப் பசளையாக்கிய மண்களில் சுடலைதான் மிஞ்சும்.

சுப்பிரமணியம் போய்விட்டான் என்று அறிந்த அன்று நாள்முழுவதும் நான் வேப்பமரத்தில் தான் இருந்தேன். கடவுளின் வேப்பமரத்தில். முதியவர்கள், ஏறக்கூடாது என்று சொன்ன அந்த வேப்பமரத்தின் உச்சியில் இருந்து மூத்திரம் பெய்து கொண்டிருந்தேன். அதன்பின்னர் அந்த மரத்தில் ஏறவில்லை.

தூங் உந்துதலை நிறுத்திவிட்டாள். அவளின் ஊஞ்சல் அசையாமையை நோக்கி மெதுவாக அசைகின்றது. அவள் நீண்ட நேரமாகக் கதைத்துக் கொண்டிருந்தாள். தனது கதைகளை நான் கேட்கவேண்டும் என்ற எவ்வித அக்கறையுமின்றி கதைத்துக்கொண்டிருந்தாள்.
அவளின் அசையாத ஊஞ்சல் என் ஊஞ்சலின் அருகே.
ஒருவேளை அவளும் என்னைப்போன்று அசையாமல் ஊஞ்சல் ஆடுகிறாளோ?
வெயில் தணிந்துவிட்டது.
வீட்டை போகவில்லையா என்று தூங் கேட்டாள்.
பாவம் தூங். நானும், அவளும் வீட்டுக்குப் போகமாட்டோம் என்று அவளுக்கத் தெரியாது. எனக்கு வீடில்லாதது மாதிரி அவளுக்கும் வீடில்லை. இருள்களுக்குள் தோன்றும் பிரமைகள்தான் எங்கள் வீடுகள். பிரமாண்டமான காற்று மண்டலத்தில் பிராணவாயுவை உறிஞ்சும் நானும் அவளும் வீடு தேடுவதில்லை. எல்லைகளை இல்லாமாக்கும் இருள்கள் எங்கள் மாளிகைகள்.

ஒடுங்கிய, ஒளிபாயும், தன் கண்களால் உற்றுப்பார்த்து, ஒருகணம் அமைதியாகி சற்று அருகே வந்து தூங் கேட்கிறாள்.

உனக்கு இறந்தகாலம் இல்லையா ?
ஓங்கி நிலத்தை உதைத்து பின்னோக்கி எழுந்து.... மீண்டும் தாழ்ந்து..... உதைத்து.... முன்னோக்கியெழுந்து... நான் ஆவேசமாய் ஆடுகிறேன்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீன் இல்லா மனம்

துள்ளித் தெறித்தன மீன்கள்.
மனம் பொங்கி வழிய வழிய
நேற்றுப் பொரித்ததும்,
இரண்டொருநாள் முந்தியதுமாய்,
தெறித்துத் தெறித்து வாசலில் விழுந்தன;
அனைத்தும்.

இனி மீன் விளையும் கரு
மனதுக்குள் இல்லை.
எல்லாம் என்கடலில் இருந்து வெளியாகி
தெறித்துத் துள்ளி
வாசலில் பிணமாய்.

என் கடலே! ஏன் பொங்கிப் பொங்கி வழிகின்றாய்
இந்த இராக்காலக் குளிரிலும் ?
காற்று ஆள்போல வந்து தேகத்தைத்
தடவியும் ஆறாமல்,
நெருப்பாகி உடம்பு
உரோமங்கள் பொசுங்க
நீ கொதித்து வழிவதனால்,

என் வாசலெல்லாம் உனக்குள்ளே நான் வளர்த்த மீன்கள்.
எவ்வளவு ஆசையாய் இரைப்போட்டு நான் வளர்த்த
பெரிய உருப்படிகள்!
செதில் முற்றாக் குஞ்சுகளும்!

இனி மீன் பொரிக்கும் சாத்தியமே இல்லாமல் நீ கொதித்து
வழியும் அளவுக்கு நடந்ததுதான் என்ன ?
"ஒரு குருவி கொத்தி
நிலா முழுக்க ஓட்டை.
பூமரத்தின் கன்னிக்கும்
புண்"

இவைதானே இன்று நடந்த சம்பவங்கள் !
இன்றெல்லாம் ஏன் நீ பொங்கி வழிகின்றாய் ?

வாசலெல்லாம் என்னுடைய மீன்களது சினை.
நீ கொதிக்கக் கொதிக்க.

- சோலைக்கிளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செல்வியின் கவிதை

நான் மிகவும் பலவீனப்பட்டுப் போயுள்ளேன்.
என்னை யாரும் கேள்வி கேட்டுத்
தொந்தரவு செய்யாதீர்கள்
நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது எனது இதயம்.

எந்த நேரமும்
விழுந்து வெடித்துவிடக் கூடும்
அசோகவனங்கள் அழிந்து போய்விடவில்லை
இந்த வீடே
எனக்கான அசோக வனமாயுள்ளது.
ஆனால்
சிறைப்பிடித்தது இராவணனல்ல. இராமனேதான்.

இராமனே இராவணனாய்
தனது அரசிருக்கையின் முதுகுப் புறமாய்
முகமூடிகளை மாற்றிக் கொண்டதை
பார்க்க நேர்ந்த கணங்கள்....
இதயம் ஒருமுறை அதிர்ந்து நின்றது.

இந்தச் சீதையை சிறை மீட்க வருவது யார்?
அசோக வனங்கள்
இன்னும்
எத்தனை காலத்திற்கு?

புறாவும் அன்னமும் தூது செல்லும்
காலமா இது -
தென்றல் கூட இளமையிழந்து
மௌனமாய்......


மானுட நேயம் நோக்கிய வாழ்வை
படைத்திட முயல்கையில் எத்தனை தடைகள்!
கொடூரம் மிகுந்த விழிகள் தொட
வாழ்தலில் கசப்பு நெஞ்சை நெருடும்

மனிதம் மறந்து சவமாய்க் கிடந்து
வாழ்தலில் எனக்கு பிரியமேயில்லை!

நன்றி: அரங்கேற்றம்
இந்தியா



www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்